Registered as a News Paper
பக்கம் - 24+X
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -16 | வெள்ளி -28 | 02-08-செப்ரெம்பர்-2005



## விண்ணதிர கிளிநொச்சியில் ஓங்கி ஒலித்த உரிமைக்குரல்

## வேண்டும் வேண்டும் சுதந்திரம் வேண்டும்...

# வாழ வேண்டும்

இரவு எட்டு அல்லது ஒன்பது மணி இருக்கலாம். ஒன்பது மணியாகி இருக்க முடியாது. புலிகளின் குரல் கேட்பதற்காக ஆவலுடன் காத்திருக்கும் அந்த மனிதர் இன்னும் ரேடியோ போடவில்லை.

ஆலடிப்பிள்ளையார் கோயில் பரந்து வளர்ந்து பல வருடங்களை கடந்து நிற்கும் ஆலமரம். அதன் கீழ் அந்த சிறிய பிள்ளையார் கோயில். கோயிலில் எரிந்து சிறு ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் விடிவிளக்கு மறைந்துகொண்டிருக்கும் வளர்பிறைச்சந்திரன். பாடசாலை விடுமுறையானதால் படிபடி என்ற நச்சரிப்பு இல்லாமல் அத்தனை மின் குமிழ்களும் ஒளி வீசிக்கொண்டிருந்தன. எல்லாம் ஒருசில நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டன.



செல்லக்கா வீடு தெருவோரம் தான். அவள் வீட்டின் விளக்கு இன்னும் தான் அதாவது ஹரிக்கேன் லாம்பு அணைக்கப்படாமலே இருந்தது. தொடர்ந்து உலங்குவானூர்தி ஒன்று வரும் சத்தம். அம்மா விளக்கை நூருங்கோ ஹெலி வருகுது. வெளிச்சம் தெரிந்தால் என்ன செய்வானோ செல்லக்காவின் மகள் கோமதி கெஞ்சினாள். விளக்கை நூர்த்தாபோல வீடு தெரியாதே. நீ சும்மாகிட. ஒன்றும் நடவாது. அவள் மனதிற்குள் மெதுவாக நமச்சிவாயப் பதிகம் பாடிக் கொண்டேயிருந்தாள்.

தெருவில் யாரோ விரைந்து செல்லும் சத்தம். அடுத்து இரண்டு மூன்று அங்கே தங்கச்சியோடை தங்கிவிட்டார். நான் இப்போ என்ன செய்கிறது.

எங்கேயடி நகையெல்லாம். பக்குவமாய் எங்கேயாவது மண்ணுக்குள்ளை தாட்டுவைக்கச் சொன்னன் கேட்டியா. இப்ப வந்தாங்கள் எண்டால் எல்லாம் கொண்டு போயிடுவாங்கள். பாவம் அந்தப் பொடியன். பாலை வனத்திலை கிடந்து உழைச்சு அனுப்ப (பலைவனம் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றாக இருக்கலாம்) உனக்கு அருமை தெரியுமோ.

அம்மா நீ சத்தம் போடாதே. மெதுவாகக் கதை விளக்கை நூத்தால் சின்னவள் அழுவாள். அது ஒன்றும் நடவாது. நகைகளை புதைத்துவைத்தால் ஓடவேண்டி வந்தால் என்ன செய்யிறது. என்னடி ஓடுறதோ இனியோ என்ன நடந்தாலும் இந்த இடத்தை விட்டு நான் அசைய மாட்டன். அவளுக்கு மூச்சு முட்டியது.

தாய்மாருடன் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் பறந்து செல்லும் ஆட்காட்டிப் பறவைகள் மரங்களை சுற்றி வரும் வௌவால்கள். ஏதோ ஒருவித நிம்மதியுடன் கிராமம் தூங்கும் எண்ணம் இல்லாமல் என்னென்னவோ செய்துகொண்டிருந்தார்கள். தொலைக்காட்சி பார்த்தார்கள். திடீ ரெனக் கேட்ட வெடிச்சத்தம் எல்லா வற்றையும் படபடக்க வைத்தது. இவர் எப்பவும் இப்படித்தான் என்று முணுமுணுத்தபடி வாசலில் தெருவைப் பார்த்தபடி நின்ற கணவனை கூப்பிட ஓடினாள் கமலி. தாயின் அருகில் ஒட்டிக்கொண்டு நின்ற எட்டு வயதுக்கார்த்திகா நடுங்கினாள். என்னம்மா இன்னும் சண்டை வரப்போகுதா. இல்லை ஒண்டும் வராது. நீங்கள் உள்ளுக்கு போயிருங்கோ. தாயும் பிள்ளைகளும் உள்ளே போய் ஒரு மூலையில் சுவரோரம் உட்கார்ந்தனர். இரண்டு வெடிச்சத்தமோ என்னவோ அதற்குப் பிறகு எதுவும் கேட்கவில்லைப் போலும். வீடுகளில் ஒளி வீசிக 'கொண்டிருந்த மின் விளக்குகள் கண்களை மூடிக்கொண்டன. எங்கோ வீட்டின் ஒரு மூலை அறையில் ஒரு விளக்கோ அல்லது மின் விளக்கோ மிகச் சிறிய ஒளியை கொடுத்துக் கொண்டிருந்தது. ஆட்கள் இல்லாத ஒரு வீட்டின் வாகனங்கள். செல்லக்கா விளக்கை அணைக்கவேயில்லை. கோமதி தூண் ஒன்றில் சாய்ந்தபடி சுவரோரம் இருந்தாள்.

செல்லக்கா ஒரு துணிவான மனுஷி. அதிகம் படிக்காத மனுஷி. என்றாலும் அவள் நாட்டுப்பற்றுள்ள ஒருத்தி. இராணுவத்தினர் வளவுக்குள் வந்தால் ஏன் இஞ்சவாறியள். புலி பிடிக்க வந்தால் போய் ஏலுமெண்டால் அவங்களைப் பிடியுங்கோவன். துவக்குகளை தூக்கிக்கொண்டு திரியிறியள். ஆக்ரோஷம் துணிந்து கேட்டாள். விசரி உப்பிடி கதைச்சு சூடுவாங்கி சாகப்போகுது என்று சொன்னவர்கள் பலர்.

பக்கத்துவீட்டு முதியவர்கள் பிள்ளைகள் வெளிநாட்டில், பயந்து நடுங்கியபடி முற்றத்தில் இறங்கவும் பயந்து சாப்பிடவும் பிடிக்காமல் இருட்டில் உட்கார்ந்து இருந்தார்கள். தெருவிலிருந்து கொஞ்சம் தள்ளி ஒரு வீடு. காவலரண் அமைப்பதற்காக அவர்கள் வீடு தரைமட்டமானது. இடம் பெயர்ந்தார்கள். மறுபடி வந்து ஏதோ சிறு கொட்டில் கட்டிக்கொண்டு நிம்மதியாக இருந்தார்கள். ஒரு தாயும் மகளும் பிள்ளைகளும்.

நூரடி விளக்கை ஹெலி போகுது. திரும்பிவரேக்கை என்ன செய்வானோ. கொப்பரும் இண்டைக்கெண்டு தங்கச்சியைப்பார்க்க போய்

அம்மா உனக்கு வலி வந்தாலும் வந்திடும் குளிசையைப் போட் டிட்டு படு. மகள் அவளை அணைத்து படுக்கவைத்தாள்.

ஒழுங்கையால் யாரோ ஓடிப் போவது போல் இருந்தது. நாய்கள் குரைத்துக் களைத்து ஊளையிட்டு ஓய்ந்து படுத்துக்கொண்டன. எங்கும் அமைதி. தெருவில் மட்டும் சிறு சத்தங்கள். அந்த ஓர் இரவு. சில வீடுகளில் உள்ள மக்கள் பட்டபாடு. கும்மிருட்டில் அங்குமிங்கும் அசைய முடியாமல் உட்கார்ந்து இருந்து கடைசியாகபாயும் தலையணையுமில்லாமலே சரிந்து படுத்து உறங்கி எழுந்தார்கள்.

பொழுது விடிந்ததும் செய்தியை சேகரித்தார்கள். நடந்ததை அறிந்தார்கள். என்றாலும் மேலும் மேலும் என்ன நடக்குமோ என்ற பீதி ஏன் எங்களுக்கு இந்த நிலை. ஏழையாக வாழலாம், கோழையாக இருக்கக் கூடாது என்பர். நாம் கோழைகளல்ல.

"நிற்பதுவே நடப்பதுவே
நீங்கள் எல்லாம்
சொற்பனம் தானா"

என்ற பாரதியாரின் பாடல்களில் இந்த இரண்டு வரிகள் தனக்குப் பிடித்தவை. வாழ்க்கை சொப்பனம் அல்ல. வாழ்க்கை நிஜம். வாழ வேண்டும். எங்கள் பரம்பரை என்றென்றும் நிமிர்ந்து வாழ வேண்டும்.

— சுந்தரி.

## நம்பிக்கை

'ஐம்புதங்களையும்
ஆள்பவன் இறைவன் .
பிறப்பும், இறப்பும்
அறியாதவன்.
படைத்தல், காத்தல் தொட்டு
ஐந்தொழில்களையும் புரிந்து
அகிலத்தை ரட்சிப்பவனும் அவனே!
தோற்றமும், அழிவுமின்றி
தூணிலும், துரும்பிலுமிருந்து
இயற்கையின் ஆற்றலாகி
எங்கும் வெளிப்படுவன் அவனே!
அவனை நினைப்பவர்
கைவிடப்பட மாட்டார்',
கடல் அனர்த்தத்தால்
காவுகொள்ளப்பட்ட கோயிலின்
புனர்நிர்மாண வேலைகளுக்கு
நன்கொடை அளிப்பது
நல்வினை, புண்ணியமென்று
சொற்பொழிவாளர் தொடர்ந்தார்,
தற்காலிக முகாம்களில்
தங்கியிருந்த மக்களுக்கு முன்னே!

## முரண்பாடு

'கோயில் இல்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்!'
ஆனாலும், குடியே இல்லாத ஊரில்
கோயிலுக்குள்ளும் ராணுவம்!
ஊர் முழுதும்
நலன்புரி(?) முகாம்களில்
பத்தாண்டுகள் கழிந்த நிலையிலும்
'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'

## நல்வாக்கும் நடப்பும்

'வீட்டுக்கொரு மரம் நடவேண்டும்'
நல்வாக்கு கூறியது!
"தோளுக்கு மேல் வளர்ந்த மரம்
இன்னும் என் தயவில்
தெருவீதிகளில்
இன்னும் சில மரங்களுடன்
காடாகி மனம் கனக்கின்றது",
தந்தையார் பொருமினார்!

## இருப்பிடமும் இல்லாத இடமும்

'தூணிலும் இருப்பார்'
துரும்பிலும் இருப்பார்'
இருந்தாலும்
அவற்றில் இருப்பதற்கு
எவருமே அனுமதிப்பதில்லை!
எடுப்பான கட்டடங்களில்
இருக்கவேண்டுமென்பதே
எல்லோருடைய விருப்பமும்!
பொறிவாயில் ஐந்தவித்தவனுக்கு
பொன்னாபகரணங்களுடன்
இன்னும் இன்னும் பல!!
ஏனென்று கேட்பது
ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது...

- ஞாலவன் -

# அரசியல் கட்சிகளின் நிதி வளம்

செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்று தத்துவ ஞானிகள் கூறுவார்கள். செல்வம் என்பது சொத்தும் வைப்பும் தான் என்பது யதார்த்தவாதிகளின் நிலைப்பாடு. அரசியல்வாதிகளின் செல்வம் பற்றிய கருத்து மிகவும் வித்தியாசமானது. ஒரு அரசியல் கட்சியை நடத்துவதற்கு நிறையச் செலவாகும். நிர்வாகச் செலவு, போக்குவரத்துச் செலவு, பணியாளர்களின் ஊதியம், முக்கிய அனுதாபிகளின் வருமானத்தை உறுதி செய்தல் போன்ற இன்னோரன்ன விரயங்கள் காலம் பூராகவும் காத்திருக்கின்றன. தேர்தல் காலத்தில் செலவுகள் வானை முட்டும்.

இவற்றைவிட அரசியல்வாதிகள் அவர்கள் கட்சி நிதியில் கணிசமான பங்கை தமது வாழ்க்கைச் செலவுக்கு பயன்படுத்த வேண்டும் அத்தோடு குடும்பத்தினரின் செலவுகளையும் கவனிக்கவேண்டும். இந்தியாவில் "வருமானத்திற்கு மிஞ்சிய சொத்துச் சேர்த்தல்" என்ற தடுப்புச் சட்டம் இருக்கிறதை அவதானிப்போர் அங்கு அளவோடு சொத்துச் சேர்ப்பதற்கு அரசியல்வாதிகளுக்கு சட்டபூர்வமான அனுமதி இருப்பதை உணர்வார்கள். எனவே அளவோடு சொத்துச் சேர்க்கும் உரிமை இந்தியா, சிறிலங்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இருப்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதில் பெரும் பங்கு வகித்த இந்தியத் தேசியக் காங்கிரஸ் ஒரு நாடு தழுவிய அமைப்பு. அதில் யாதொரு பதவியும் வகிக்காத மகாத்மா காந்தி தனது ஆச்சிரமத்தில் தங்கியிருந்தார். அங்கிருந்தவாறு அவர் இந்தியத் தேசிய காங்கிரஸின் கொள்கை முன்னெடுப்புத் தொடக்கம் தலைமைப் பதவி நியமனம் வரையிலான முக்கிய தீர்மானங்களை நிர்ணயம் செய்தார். காங்கிரஸே காந்தி, காந்தியே காங்கிரஸ் என்பதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.

இந்தியாவின் அரசியல், சமுதாய, பொருளாதாரத் தலைமைப் பீடம் காந்தியின் ஆச்சிரமத்தில் இருந்தது. அத்தனை பெரிய நாட்டின் அரசியல் இயக்கத்தை முன்னெடுப்பதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டது. நிதிவலு இல்லாமல் ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க முடியாது. "காந்தியின் வறிய வாழ்வுக்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டது" என்று கவிக்குயில் சரோஜினி நாயுடு கூறியதை இங்கு நினைவு கூரலாம்.

காந்தியின் இயக்கத்திற்கும் அவர் வழி நடத்திய இந்திய தேசிய காங்கிரஸிற்கும் தேவைப்பட்ட நிதியை இந்தியாவின் முப்பெரும் வர்த்தகப் பிரமுகர்களான கான்சியாம் தாஸ் பிர்லா, ஜமன்லால் பஜாஜ், அம்பலால் சாராபாய் ஆகியோர் வழங்கினர். மூவரும் காந்தியின் அனுதாபிகள். ஜி.டி.பிர்லா என்றழைக்கப்படும் கான்சியாம் தாஸ் பிர்லா முப்பத்திரண்டு வருடகாலமாக காந்திக்கு உதவி வழங்கினார். அவர் காந்திக்கு வழங்கிய நிதி உதவிக்கு நிகராகப் பிறிதொரு இந்தியக்கோடீசுவரராவது காந்திக்கு வழங்கவில்லை. பிர்லாவைக் காந்தி எப்படித் தன்பால் கவிர்ந்திழுத்தார் என்று தெரியவில்லை.

காந்தி துறவி வாழ்வு வாழ்ந்தவர், கிராமிய வாழ்வு, குடிசைப் பொருளாதாரம் போன்ற பிறிதோர் உலகிற்குச் சொந்தமான விழுமியங்களில் நம்பிக்கை கொண்டவர். பிர்லா பணம் பண்ணுவதையே தொழிலாகக் கொண்டவர். அமெரிக்கத் தொழில் முறைகளை இந்தியாவுக்குப் புகுத்தி நவீன இந்தியாவின் தோற்றத்திற்கு வழி சமைத்தவர். சனவரி 30, 1948 மாலை 4.30 மணிக்கு ஜி.டி.பிர்லாவின் மாளிகை வெளிப்புறத்தில் பஜனையில் ஈடுபடும் போது மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். பிர்லாவுக்கும் காந்திக்கும் இடையிலுள்ள நெருக்கத்தை இது உறுதிப்படுத்துகிறது.

"மகாத்மாவின் நிழலில் " என்று தலைப்பிட்டு காந்தியோடு தனக்குள்ள தொடர்பு வரலாற்றை ஜி.டி. பிர்லா 1953 இல் ஒரு நூலாக எழுதியுள்ளார். "ஒரு தொழிலதிபரின் கர்மா தனது செல்வத்தை மென்மேலும் பெருக்குவதாகும். பொது நன்மைக்காக செல்வத்தைப் பயன்படுத்துவது அவன் செய்யும் தர்மமாகும். செல்வத்தைப் பெருக்கும் போது செல்வத்தின் தாக்கத்தில் இருந்து விடுபட்டு அறவாழ்வு வாழ வேண்டும்" என்று பிர்லா அதில் கூறியுள்ளார். செல்வத்தை மென்மேலும் பெருக்க முயல்வது செல்வந்தர்களின் பிறவிக்குணம். பணத்தைக் குவிப்பதற்காக அவர்கள் செய்யும் முயற்சிகள் பலதரப்படுகின்றன.

அதில் முக்கியமானது அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்து அதற்கான பிரதியுபகாரத்தைப் பெற்றுக்கொள்வதாகும். இந்தியா சுதந்திரம் பெற்றபின் காங்கிரஸ் கட்சிக்கு நிதிப் பங்களிப்புச் செய்தவர்கள் ஏற்றுமதி இறக்குமதி உரிமங்களையும் வரிச் சலுகைகளையும் பெற்றுக்கொண்டனர். அவர்கள் அரசின் அங்கமாக மாறிவிட்டனர். இதில் குறிப்பிடப்பட்ட பிர்லா பஜாஜ் சாராபாய் குடும்பங்கள் பல்வேறு நன்மைகளை இந்த வகையில் பெற்றுக்கொண்டனர். கட்சிகளுக்கு வழங்கும் நிதி ஒருவகை முதலீடு தான் என்பதில் சந்தேகமில்லை. போட்டதற்குப் பன்மடங்கு கூடுதலான இலாபம் இதில் கிடைக்கிறது.

எம் என் சி எனப்படும் பல்தேய வர்த்தக நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி வழங்குவதை தமது வழக்கமாகக் கொண்டுள்ளன. அவர்களுடைய வருடாந்த கணக்கறிக்கையில் கட்சிகளுக்கு வழங்கும் நிதி "நானாவிதச் செலவு" அல்லது " மேலதிகமான செலவுகள்" போன்ற தலைப்புகளின் கீழ் பதியபட்டிருக்கும். கணக்குப் பரி சோதகாகளுக்கும் இந்த நிறுவனங் களின் பங்குதாரர்களுக்கும் அவை எதைக் குறிக்கும் என்பது நன்கு தெரியும்.

**சிறீலங்கா அரசியலில் ஆதிக்கம் செலுத்த விழையும் இந்தியாவும், சீனாவும் போட்டி போட்டுக்கொண்டு ஜே.வி.பிக்கு பணம் கொடுக்கின்றன. சீனாவுக்கு ஜே.வி.பியுடன் நெடுங்காலத் தொடர்பு உண்டு. ஆனால் இந்தியா ஜே.வி.பி நட்பு மிகவும் அண்மைக்காலத்தில் தோன்றியது. இன்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஜே.வி.பியின் புகலிடமாக மாறிவிட்டது. இந்திய எதிர்ப்பை மூலதனமாக்கி வளர்ந்த கட்சிதான் ஜே.வி.பி இவ்வருடம் இந்திய மாக்சிஸ்ற் கம்யூனிஸ்ற் கட்சி மாநாடு நடந்தபோது ஜே.வி.பியின் பிரதிநிதிகளை அழைக்கும்படி இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுத்தது.**



சில பொருளாதார நிபுணர்களின் பார்வையில் உலகின் அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்கள் பல்தேய வர்த்தக நிறுவனங் களின் கட்டுப்பாட்டில் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. நிதி வளத்தையும் ஆதிக்க வலுவையும் பொறுத்தளவில் அமெரிக்காவில் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள ஆறு முக்கிய பல்தேய வர்த்தக நிறுவனங்கள் தரப்படுத்தல் வரிசையில் முதலிடம் பிடிக்கின்றன. அமெரிக்க விவகாரங்களில் இந்த நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் அமெரிக்காவின் குடியரசுக் கட்சி சனநாயகக் கட்சி ஆகிய இரண்டிற்கும் பாரபட்சம் காட்டாமல் நிதி உதவி செய்கின்றன.

இதிலுள்ள சூட்சுமம் என்னவென்றால், எக் கட்சி வென்றாலும் அது எமது உதவிபெற்ற கட்சியாகத் தான் இருக்கும்.

வர்த்தக நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது அமெரிக்காவுக்கு மாத்திரம் சொந்தமான வழமையல்ல. கட்சி அரசியலும், தொழில் வளமும் வளர்ச்சி அடைந்த நாடுகள் பலவற்றிலும் இது காணப்படுகிறது. நிதி வழங்கலுக்கு இரு முக்கிய காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று அரசின் பங்குதாரராக வர்த்தக நிறுவனங்கள் மாறுகின்றன. தமக்கு வேண்டிய சலுகைகளையும் சட்டங்களையும் இலகுவில் கேட்டுப் பெற்றுக்கொள்கின்றன. அத்தோடு தமது இலாபத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்களைச் செய்து தரும்படி அரசைக் கோரும் உரிமையையும் பெறுகின்றன. முதலாவதைப் போன்று இரண்டாவது காரணமும் சம அளவு முக்கியமானது. பல்தேய வர்த்தக நிறுவனங்கள் பிற நாடுகளில் செய்துள்ள முதலீடுகளுக்குப் பாதுகாப்புத் தேடுகின்றன. மூன்றாம் உலக நாடுகள் பல்தேய நிறுவனங்கள் மீது கைவைக்க அஞ்சுகின்றன.

ஏனென்றால் , இந்த நிறுவனங்களுக்கு அமெரிக்கா போன்ற நாடுகளின் பாதுகாப்பு உண்டு. ஜப்பான் அரசு வெளிநாட்டில் முதலீடு செய்துள்ள தனது வர்த்தக நிறுவனங்களின் நலனில் தீவிர அக்கறை காட்டுகின்றது. ஜப்பான் இராசதந்திரம் பெரும்பாலும் தனது நாட்டின் வர்த்தக விரிவின் இலக்கைக் கொண்டுள்ளது. சிறிலங்காவில் அண்மைக்காலமாக இந்திய வர்த்தக நிறுவனங்கள் பாரிய முதலீடுகளைச் செய்கின்றன. இதற்கான ஊக்குவிப்புக்களை இந்திய மைய அரசு வழங்குகிறது. சிறிலங்காவைத் தனது கட்டுப்பாட்டில் கெண்டுவரும் முயற்சியின் ஒரு அங்கமாக இது அமைகிறது.

**அன்பரசு**

மேற்கூறிய வகையில் கிடைக்கும் நிதி உதவிகளில் மாத்திரம் அரசியல் கட்சிகள் தங்கியிருக்கவில்லை. வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் நன்கு வளர்ச்சிபெற்ற அரசியல் கட்சிகள் தமது நிதியை நன்கு இலாபமீட்டும் துறைகளில் முதலீடு செய்கின்றன. பங்குச் சந்தையில் கட்சி நிதியைப் போடுவது அண்மைக்கால வழமை. நில புலன் வாங்கி விற்பது இன்னுமோர் முதலீட்டு வகை. வர்த்தக நிறுவனங்களில் பங்குதாரராக இணைவது இன்னுமோர் நடைமுறை. பார்க்கப் போனால் செல்வந்தர்கள், நிதி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என்பன ஒரு தாய் பிள்ளைகள் போல் காட்சியளிக்கின்றன. நாட்டுக்குச் சேவை செய்கிறேன் என்று கூறும் அரசியல்வாதி தனது வாழ்வை வளமாக்க முயற்சி செய்கிறான் என்பதுதான் அடிப்படை உண்மை. இஸ்ரேலிய நாட்டின் பிரதமர் ஏரியல் ஷரோனின் மகனானவர் பல போலி வர்த்தக நிறு வனங்களை உருவாக்கி பங்கு வியா பாரம் செய்த குற்றத்திற்காக சென்ற வாரம் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

தந்தையைப்போல் மகனும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்தான். தனது தந்தையின் லிக்குட் அரசியல் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காகவே தான் இந்தத் திருட்டு வேலைகளில் ஈடுபட்டதாக விசாரணையின்போது ஷரோனின் மகன் தெரிவித்தார். தான் இதற்கு அனுமதி வழங்கவில்லை என்று தந்தை கூறிவிட்டார்.

சில நாடுகள் வெளிநாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி வழங்குகின்றன. இது தேசிய நலனை முன்னெடுக்கும் நோக்கைக் கொண்டது. சிறிலங்காவில் இன்று நிதிவளத்தைப் பொறுத்தள வில் முதலாம் இடத்தில் நிற்பது ஜே.வி.பி. கட்சி என்பது மிகவும் வியப்பூட்டும் தகவல். ஓரங்கட்டப்பட்ட கிராமப்புற சிங்கள மக்களின் கட்சியாக ஆரம்பித்த ஜே.வி.பி கோடிக் கணக்கான பணத்திற்கு அதிபதி யாக இன்று நிலவுகின்றது. இதற்கு புவிசார் அரசியல்தான் காரணம்.

சிறிலங்கா அரசியலில் ஆதிக்கம் செலுத்த விழையும் இந்தியாவும், சீனாவும் போட்டி போட்டுக்கொண்டு ஜே.வி.பிக்கு பணம் கொடுக்கின்றன. சீனாவுக்கு ஜே.வி.பியுடன் நெடுங்காலத் தொடர்பு உண்டு. ஆனால் இந்தியா ஜே.வி.பி நட்பு மிகவும் அண்மைக்காலத்தில் தோன்றியது. இன்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஜே.வி.பியின் புகலிடமாக மாறிவிட்டது. இந்திய எதிர்ப்பை மூலதனமாக்கி வளர்ந்த கட்சிதான் ஜே.வி.பி இவ் வருடம் இந்திய மாக்சிஸ்ற் கம்யூனிஸ்ற் கட்சி மாநாடு நடந்த போது ஜே.வி.பியின் பிரதிநிதிகளை அழைக்கும்படி இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுத்தது.

ஒரு சிங்கள இனவாதக் கட்சியை எப்படி நீங்கள் உங்கள் மாநாட்டிற்கு அழைக்கலாம் என்று கேட்டபோது இந்திய மாக்சிஸ்ற் கம்யூனிஸ்ற் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டபிள்யூ.ஆர்.வரதராஜன் "அவர்களுடைய உள்நாட்டு அரசியல் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. எம்மைப் பொறுத்தளவில் அவர்கள் உண்மையான பொதுவுடமைவாதிகளே" என்று தயங்கித் தயங்கிச் சொன்னார். நோர்வேயைத் திட்டுவதே தனது தொழிலாகக்கொண்ட ஜே.வி.பி பெருமளவு நிதி உதவியை நோர்வேயிடமிருந்து சென்றவருடம் "கலாசாரத் தேவைகளுக்காகப்" பெற்றுக் கொண்டது ஞாபகம் இருக்கலாம்.

தேர்தல் காலங்களில் நிதி உதவிகள் பல்கிப் பெருகுகின்றன. வெளிநாட்டு அரசுகள் தாம் ஆதரிக்கும் கட்சிகளுக்குப் பணம் அனுப்புகின்றன. அத்தோடு தமது ஊடகங்கள் ஊடாகப் பிரசாரமும் செய்கின்றன. என்.ஜீ யோக்களும் தமது நிதியில் கணிசமான பங்கைதாம் விரும்பும் அரசியல் கட்சிக்குத் தள்ளிவிடுகின்றன. உள்நாட்டு வர்த்தக நிறுவனங்களோ வெற்றி வாய்ப்புள்ள இரு கட்சிகளுக்கும் வாரி வழங்குகின்றன. இது மிகவும் பாதுகாப்பான நடைமுறை என்று கொழும்பில் வர்த்தகம் செய்யும தமிழர்கள் கூறுகிறார்கள்.

# நறுக்கென...

## சனாதிபதியின் குறுக்கு வழி..!



ஆறு நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு சீனா சென் றுள்ள சனாதிபதி சந்திரிகா அங்கு ஒப்பந்தங்களை மேற் கொள்வதிலும் உடன்பாடுகளை எட்டுவதிலும் தீவிரகரிசனையைக் காட்டிவருகிறார்.

இந்த நிலையில் இலங்கை இராணுவத்திற்கு முழுமை யான இராணுவ ஒத்துழைப்பு வழங்கவும்- இலங்கையுடன் புதிய பாதுகாப்பு உடன்பாடு ஒன்றை செய்து கொள்ளவும் தயாராக இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

இலங்கையில் ஒரு அமைதி முயற்சி நடைமுறையிலிருக் கும் சூழலில் சீனா இராணுவ உடன்பாடு ஒன்றை செய்துகொள்ள விருப்பம் தெரிவிப்பதானது ஆசியப் பிராந்தியத்தில் சீனாவின் பார்வை எத்தகையது என்பதை கவனத்தில் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

சீனா இலங்கைக்கு நீண்டகாலமாக இராணுவ உதவிகளை வழங்கிவருகின்ற நாடுகளில் ஒன்று என்பது ஏற்கனவே அறிந்ததொன்று.

ஆனால், இலங்கையில் அமைதி முயற்சி ஆரம்பிக்கப்பட்ட சூழலில் மேற்குலகின் அதிக பிரசன்னம் இங்கு குவியத் தொடங்கிய சூழலில் சீனாவின் கரிசனை இலங்கையின் பக்கம் அதிகமாக உள்ளமை தெரிந்ததே.

இலங்கையில் ஒரு பிடியை வைத்துக்கொள்ள இந்தியா, சீனா, யப்பான், அமெரிக்கா என வல்லரசு நாடுகள் விரும்பி வருகின்ற சூழலில் இந்நாடுகள் மறைமுகமாக ஒன்றுக் கொன்று போட்டியிட்டுக் கொள்வதும் ஒவ்வொரு நாடு எதிரெதிரான ஒப்பந்தங்களையும் ஒத்துழைப் புக்களையும் வழங்க முனைவதையும் காணலாம்.

ஆனால் இந்தப் போட்டியானது இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவப் போவதில்லை என்பதுடன் இந்த நாடுகள் கொடுக்கும் பலத்தை பற்றிப் பிடித்துக் கொண்டு சிறிலங்கா அரசு சமாதானத்தைக் கொண்டு வருவதில் முரண்டுபிடிப்பதையும் காணலாம்.

வல்லரசுகளின் போட்டியின் விளைவால் அமைதி ஏற்படுவதோ சமாதானம் கிட்டுவதோ வெறும் கானல் நீராகவே தெரிகிறது.

இந்த நாடுகளின் நிலை இப்படியிருக்க சனாதிபதி சந்திரிகா மற்றும் சிறிலங்கா அரசத் தலைவர்கள் பிராந்தியச் சக்திகளுக்கிடையில் ஒரு போட்டா போட்டியையும் முரண்பாடு களையும் ஏற்படுத்திவிட்டு அதில் குளிர்காய முனைகின்றனர்.

சீனாவை ஒருபாதுகாப்பு உடன்பாட்டுக்கு இணங்கவைப்பதானது சீனாவினூடாக இந்தியாவை தமது பிடிக்குள் கொண்டுவர சனாதிபதி சந்திரிகா முனைவதையே காட்டுகிறது.

ஏனெனில் இந்தியாவுடன் இலங்கை ஒரு பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ள படாதபாடுபட்ட போதும் தமிழ் நாட்டின் தமிழின ஆதரவு தலைவர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்திய அரசால் சிறிலங்கா அரசுடன் ஒருபாதுகாப்பு உடன்பாட்டை செய்ய முடியாமல் உள்ளது.

எனவே சனாதிபதி சந்திரிகாவும் ஏனைய சிறிலங்கா அரச தலைவர்களும் இப்பொழுது இந்தக் குறுக்கு வழியால் பாதுப்பு உடன்பாடு ஒன்றை எட்டிக்கொள்ள முனைகின்றனர்.

## அநுராவின் பாய்ச்சல்..!



நோர்வே தனது "அஞ்சல்பெட்டி" பாத்திரத்திற்கு அப்பால் செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

"சவப்பெட்டி" அரசியலைச் செய்துவந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு நோர்வேயின் அஞ்சல்பெட்டி பாத்திரம் மிகக் கடினமானதொன்றாகவே உள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர் பாத்திரத்தை மேற்கொண்டுவருகிறது. ஆனால், சம்பந்தப்பட்ட அரசு-புலிகள் தரப்புக்கிடையில் சமாதானம் தொடர்பில் அரசு காட்டும் அசமந்தப்போக்குகளை நோர்வே கண்டாலும் அதனை வெளியில் எதனையும் சொல்லக்கூடாது செய்யக்கூடாது என்பதே அரசின் விருப்பமாகவுள்ளது.

இந்நிலையில் புதிதாக வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அநுராபண்டார நாயக்கா நோர்வே மீது ஒருமுறை பாய்ந்துவிழுந்துள்ளார்.

நோர்வே இப்போது இலங்கை அரச தலைவர்களுக்கு ஒரு கால்பந்துபோல வந்தவர் போனவர் எல்லாம் தானொருஉதை, அவனொரு உதை என்ற கணக்கில் உதைகிறார்கள்.

நோர்வேக்கு இலங்கை சமாதான முயற்சியில் தலையிட்டதும் போதும் அந்த நாடு படாதபாடு அத்தனையும் படுகிறது.

நோர்வேக்கு இலங்கையின் சமாதான முயற்சியில் கிடைக்கும் அனுபவமே வித்தியா சமானதுதான்.

ஆனாலும், வெளிவிவகார அமைச்சு என்கின்ற உயர் இராஜதந்திரப் பதவியில் இருக்கின்ற அநுரா போன்றவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய இராஜதந்திர நாகரிகத்தைக்கூட கடைப்பிடிப்பதாக இல்லை.

ஒரு வகையில் இலங்கையில் இத்தகைய இராஜதந்திர நாகரிகப் பண்புகளை எதிர்பார்க்க முடியாதுதான்.

ஏனெனில் இங்கு நடைபெறும் அரசியல் கூட நாகரிகப்பண்புகளைக்கொண்டதாக இல்லைத்தானே. இந்த நிலையில் இதனை எப்படி எதிர்பார்க்கமுடியும்.

அதற்காக உலகின் வரைபடத்தில் பனிக்குளிருக்குள் நடுங்கிக்கொண்டிருக்கும் நோர்வேநாடு இப்படியெல்லாம் இவர்களிடம் திட்டுவாங்கவேண்டுமா.

## தேர்தல் காலப் பேச்சு..!



கேட்டுக் கேட்டு புளிச்சுப் போன வார்த்தையை மீண்டும் மீண்டும் உதிர்ப்பதில் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் கில்லாடிகள்.

சூரியவாளைப் போல இனவாதத்தை வீசும் இந்த தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அதிலிருந்து பல்டி அடிப்பது பார்க்கச் சகிக்காது.

இந்த நிலையில் இப்பொழுது தான் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண்பேன் என்றும் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களையும் நடாத்துவேன் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஒரு செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அவர் தான் யுத்தத்தை ஆதரிக்கவில்லை என்றும் தான் யுத்தத்துக்கு எதிரான நபர் என்றும் தெரிவித்துள்ளார்.

சோலியன் குடுமி சும்மா ஆடாது என தமிழில் ஒரு கிழமொழியிருக்கிறது. அதைப் போலதான் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இலங்கையின் சனாதிபதித் தேர்தலில் நின்ற நிற்கின்ற எல்லாச் சனாதிபதி வேட்பாளர்களுமே முதலில் பேசுவது இனப்பிரச்சினைபற்றித்தான்.

ஆனால் ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வந்த எல்லா சிங்களத்தலைவர்களுமே ஏற்கனவே அதிகாரத்திலிருந்தவர்களை விஞ்சும் அளவுக்கு யுத்தத்தை தீவிரப்படுத்துவதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்தியுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் மகிந்த ராஜபக்ஷவாக இருந்தாலும் சரிதான் ரணில் விக்கரம சிங்கவாக இருந்தாலும் சரிதான் எவருமே தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதும் இல்லை உரிமையை வழங்கப்போவதும் இல்லை.

ஏனெனில் சிறிலங்காவின் சனாதிபதி பதவி என்பது சிங்கள மேலாண்மையின் குறியீடாகவும் சிங்கள தேசத்தின் நலனை பாதுகாக்கும் பாதுகாப்பு கவசமாகவுமே பேணிவருகின்றனர்.

அத்தகையதொரு அதிகார பீடத்தில் ஏறிக்கொண்டதும் அவர்களுக்கு ஏனைய இனங்களின் உரிமைகள் அபிலாசைகள் என்பன சிங்கள தேசத்திற்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக் கூடிய கொடிய சக்தியாகவே இருக்கும்.

இந்த நிலையில் இது ஒரு சனாதிபதித் தேர்தலுக்குரிய காலம் என்பதால் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதாகக் கூறும் பல கவர்ச்சிகரமான வார்த்தை பிரயோகங்களையும் அறிக்கைகளையும் அள்ளி வீசிக் கொண்டிருப்பார்கள்.


ஆனால் நாட்டில் இவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க உருப்படியான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கப் போவதில்லை.

ஏனெனில் இவர்கள் தான் இலங்கையில் யுத்தத்தை பாதுகாக்கின்றவர்கள். அத்தோடு யுத்தத்தை தணிந்து போகாமல் வைத்திருப்பவர்களும் இவர்களே.

இலங்கையில் யுத்தம் இல்லாதுவிட்டால் தங்களின் ஏகபோக அரசியல் வாழ்வு அடிபட்டுப் போய்விடும் என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

எது எப்படியோ நாட்டில் இவர்களை நம்ப வேண்டுமானால் சிங்கள மக்கள் தயாராக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதே உண்மை.

## குற்றப்பத்திரிகைகள்..!



சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகளின் இடையேயான முரண்பாடுகளால் இலங்கையில் எண்பதினாயிரம் மக்கள் உயிரிழந்ததுடன் எண்ணூறு மில்லியன் ரூபா சர்வதேச உதவிகளும் கிடைக்காமல் போய் விட்டதாக ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ரணில் விக்கிரம சிங்கவின் பேச்சு சனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பித்து விட்டதை காட்டுவதுடன் சனாதிபதித் தேர்தலில் எப்படியாவது அதிகாரத்தை கைப்பற்றிவிட இலக்கு வைத்து பேசுகின்ற பேச்சாகவுமே உள்ளது.

இப்போது இதுவல்ல விடயம், இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் இரண்டு பிரதான சனாதிபதி வேட்பாளர்களும் பெரும் பட்டியல்களோடு மேடையேறப்போகின்றார்கள்.

இந்தப்பட்டியல்கள் மூலம் நாட்டு மக்களுக்கு அவர்களும் அவர்கள் சார்ந்த கட்சிகளும் மக்களுக்கு இழைத்த அநீதிகளும் மேடைகளில் வாசித்துக் காட்டப் போகிறார்கள்.

ஒருவருக்கு ஒருவர் சேறு பூசுவதாக நினைத்துக் கொண்டு மக்கள் முன்னிலையில் உண்மைகளைக் கொண்டு வரப்போகிறார்கள்.

இதன் மூலம் தமிழ் மக்கள் பெரும் நன்மையையே பெறுவார்கள். ஏனெனில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் சேர்த்தே இவர்களின் சேறு பூசல்கள் நடக்கும்.

இதனை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்தால் ஏராளமான உண்மை நிலவரங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

இது இவ்வாறிருக்க இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு ஆட்சி அதிகாரத்தை மாறிமாறிக் கைப்பற்றிவரும் இரு கட்சிகளினாலும் கொல்லப்பட்ட, இழக்கப்பட்ட மக்களினது உயிர்களும், சொத்துக்களும் ஒன்றையொன்று போட்டிபோட்டுக்கொண்டு மிஞ்சுகின்ற அளவுக்குள்ளது.

இந்தக் கேவலத்தில் ரணில் விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவின் மீது குற்றம் சுமத்துகிறார். மகிந்த மீது ரணில் குற்றம் சுமத்துவது தவறல்ல. மகிந்தவோ அல்லது அவரது கட்சியோ ஒன்றும் நேர்மையானவர்களோ அல்லது நேர்மையான கட்சியோ அல்ல.

இங்கு கவனிக்கவேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஐக்கிய தேசிய இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் சுமார் 17 வருடங்கள் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருந்தது இக்காலத்தில் ரணில் பிரதமராகவும் இருந்திருக்கிறார். இந்தக் காலங்களில் மிக மோசமான விளைவுகளை இலங்கை சந்தித்திருக்கிறது.

இதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் மிகப்பெரும் தமிழினப் படுகொலைகளும், இனக்கலவரங்களும் நடந்திருக்கிறது என்பதே.

எப்படியோ குற்றப்பத்திரிகைகளை ரணிலும் மகிந்தவும் தாராளமாக மக்கள் முன் தாக்கல் செய்யப்போகிறார்கள் அவ்வளவுதான்.

வேழினி

விடுதலை அழகானது அற்புதமானது. நாம் அனுபவித்து அறியாதது. நாம் மட்டுமல்ல! எமது பாட்டன், முப்பாட்டன் காலத்துக்கு முன்னரேயே நம் மூத்த தலைமுறைகள் பலதும் இழந்து பின்னர் மறந்துபோன அருபமான அழகது! உணர்வுகளுக்குள் ஒளியூட்டிக் கொள்ளும் அதிசயமானது! வரலாற்றின் பதிவுகளில் மட்டுமே அது நமக்கிருந்ததாக வாசித்தறிந்து கொள்கிறோம்! பெருமூச்செறிந்து விழிகள் கனக்க வேதனையில் இதயம் கனக்கின்றோம்! மற்றைய இனங்கள் அனுபவித்துக் கொள்ளும் அந்த அற்புத விடுதலையை வேண்டி விழிகள் ஏங்குகின்றன!

என்பதே உள்ளுக்குள் பலமாகி, உறுதி சேர்க்கின்றது. ஆமாம், எம்மை, நமது கூட்டு அடையாளத்தை, விழுமியங்களை நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு அர்ப்பணிப்புடன் நேசிக்கிறோமோ, அவ்வளவிற்கு நம்மால் உறுதிபெறமுடியும் என்ற உண்மையை தன்னுயிரால் விளக்கிய திலீபதீபத்தின் வெளிச்சத்தில் விடியலைத் தாகம் கொள்வோம்!

உலகத்தின் கூரை என உயர்த்திப்பேசப்படுவது இந்தியாவின் வடகிழக்கிலுள்ள திபெத்.





# அழகே அழகு! தனியழகு!!

வெறும் வாய் மெல்வது போல அடுத்தவர்களின் சுதந்திரத்தைப் பார்த்து ஆராதனை செய்யும் கனவுகள், உள்ளக்கிடப்பில் கிடந்து, உறக்கநிலை கடந்து மெல்ல மெல்ல மேலெழுந்து வானேறி விடியலுக்காய் சிவக்கின்றன. அடிமைப்பட்டுக்கிடந்தொரு இனம் விடுதலை வேண்டி எழுந்துவிட்டதாய் வரலாறு செய்தியைப் பதிந்து கொள்கின்றது.

'பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடுமாம்' அடிக்கடி எல்லோரும் சொல்லிக்கொள்ளும் அக்கிழமொழியை தன்னிளம் உயிரினால் பொய்ப்பித்த புனிதனின் நினைவுகள் கனக்கும் செப்ரெம்பர் மாதம் இது. விடுதலை மீதான தாகம் பத்தையும் தோற்கடிக்கும் பசியையே வென்றுவிடும் என்று தன் வேள்வியை நிகழ்த்திக்காட்டிய திலீபன் அண்ணா 12 நாட்களாகத் தன்னையே ஆகுதியாகச் சொரிந்த மாதம் இது. சடங்களாலான இமயமே உலக உச்சியின் பிறப்பிடம் என்றிருந்த பதிவு வழக்கொழிந்து போனது.

இதயத்தில், அதன் இருப்பினில் தன் இனத்தை ஆழமாக நேசித்த ஒரு அற்புதமான மனிதத்தால் ஆழமாக நேசிக்கப்பட்டவர்களாக ஈழத்தமிழர்கள் நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்

ஆனாலும், திபெத்திய மக்கள் உரிமை பறிக்கப்பட்டவர்களாக, சுதந்திரதேசம் எனும் தாயகக்கூரை இன்றி சீனாவின் ஆக்கிரமிப்புக்குட்பட்டு வாழ்ந்துவருகிறார்கள். இந்தியா தொடக்கம் ஹொலிவுட் நட்சத்திரங்கள் உட்பட அமெரிக்கா வரைக்கும் திபெத்திய மக்கள் முகங்கொடுக்கும் நெருக்குவாரங்களுக்கெதிராகப் பகிரங்கமாகக் குரல்கொடுப்பதுடன், சுதந்திர திபெத்துக்கான தமது ஆதரவை பூடகமாக அறிவித்தும் வருகிறார்கள்.

இருந்தும் 1950களின் ஆரம்பத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத்தின் நிலை இன்னும்தான் மாறவில்லை. ஏனென்றால் சர்வ வல்லமை பொருந்திய சீனாவின் பொருளாதார, ராணுவ நகர்வுகளுக்களிடையே தமக்குரிய அனுகூலங்களை ஈட்டிக்கொள்வதற்கானதொரு துருப்புச்சீட்டாக மட்டுமே இந்தியாவும், மேற்குலகமும் திபெத்தைப் பயன்படுத்துகின்றதே தவிர அங்கு ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காக அல்ல!

ஆக வெறுமனே அனுதாபங்களாலும், ஆடியிலும்-ஆவணியிலும் அடியோடு மாறிவரும் அந்நிய ஆதரவுகளையும் நம்பியதாய் ஒரு இனத்தின் மீட்சி இருக்க முடியாது என்பது தெளிவாகிறது. அதேவேளை நாம் ஈட்டிக்கொள்ளும் எமது விடுதலை அடுத்தவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டிய சர்வதேச நிர்ப்பந்தம் ஒன்றுமுள்ளது. உலக ஒழுங்கென்று சொல்லிக் கொள்ளக்கூடிய எதையுமே இன்றைய சர்வதேச நகர்வுகளில் அவதானிக்க முடியாதிருப்பினும் 'எவருமே எவருக்கும் எப்போதும் எதிரானவர்களல்ல! அதேபோல ஆதரவானவர்களும் அல்ல!' என்றதொரு நிலை மட்டும் நித்திய ஜீவிதம் பெற்றுவருகிறது.

நமது விடுதலைப் போராட்டம் தேசியத் தலைமையால் புதிய சர்வதேசப்போக்குகளிற்கு அமைவாக கட்டங்கள் பலதையும் வெற்றிகரமாகத் தாண்டி நகர்த்தப்பட்டுவரும் வேளையில் இந்தத் திலீபத்திங்களிலே, பொங்கு தமிழாகத் தொடங்கி எழுச்சித் திருவிழாவாக 'விடுதலைத் தேரிழுத்து வரும் அன்பான மக்களிடையே சில பகிர்வுகள்!

'நான் முதல்நாள் உண்ணாவிரதம் இருந்ததை விட அதற்கடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன். இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கிறேன்'. குடல் கொளுத்தும் பசித்தீயின் கொடுமைக்கு மத்தியிலும் விடுதலையை, தனது மக்களை நேசித்த திலீபன் அண்ணாவின் உறுதியின் உன்னதத்தைப் பார்த்தீர்களா!

'3 தடவை பேசியிருக்கிறேன். 3 தடவையும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன். அதற்காகத்தான் சாகிறேன். எனது சாவைப் புரிந்துகொள்ளுங்கள். அதுதான் இந்த மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன். எனவே தயவுசெய்து லட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்'

தன்னை உருக்கி அவர் எம்மிடம் முன்வைத்த விருப்பம் இதுதான். 1987இல் பாரதத்தின் வேசத்தை அடையாளம் காட்டுவதற்காய் மட்டுமே மக்கள் புரட்சியை அவர் கோரி நிற்கவில்லை. ஆயுதப்போராட்டத்தின் அணிதிரண்ட பேரெழும் மக்கள் சக்தியாக அன்று அவர் எதிர்பார்த்த பரிணாமமே இன்று நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றது.

அற்ப சலுகைகளாலும், அச்சுறுத்தும் அராஜகங்களாலும் விடுதலை வேட்கையை அழித்துவிட

**சு.ஞாலவன்**

முடியாதென்ற உண்மையைப் பேரினவாதத்திற்குச் சொல்வதற்கு மக்கள் தயாராகி விட்டகட்டமிது. முன்பொரு காலத்திலே மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக நம்மினம் நடாத்திய வெகுசனப் போராட்டங்கள் படைபலம் கொண்டு நசுக்கப்பட்டது. இப்போது சரிக்கு மேலான பலத்தோடு நமக்கென நம் படைகள் பாதுகாப்புக்கு பக்கமிருக்க மீண்டும் வெகுசனப்போராட்டங்கள்!

நிமிர்ந்த பார்வை கொண்டெழுந்த இந்த மக்கள் புரட்சியானது வெறுமனே ஆர்ப்பாட்ட ஊர்வலங்களோ அன்றி அடையாளக்கூட்டங்களோ அல்ல! ஆயுதப் போராட்டத்திற்கு அணி சேர்க்கும் இந்த அரசியல் சக்தி, விடுதலை பெற்ற வெவ்வேறு இனங்களுடைய வெகுசனப்போராட்டங்களின் வரிசையில் வைத்து நோக்கத்தக்கது. கூடவே இதன் தாற்பரியத்தை ஒடுக்கப்படும் இனத்தைச் சேர்ந்த உணர்ந்து, பலம் சேர்க்கவேண்டிய கட்டாயமான கடமையும் ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ளது.

1789 இல் பஸ்ரில் கோட்டையைத் தாக்கி மக்களாட்சியை நிறுவிக் கொண்ட பிரெஞ்சுப்புரட்சி தொடக்கம் பனிப்போரின் முடிவுகாலம் வரைக்கும் உலகளாவிய ரீதியில் எத்தனையோ வெகுசனப் போராட்டங்கள் பல அரசுகளின் தலைவிதியையே மாற்றி அமைத்துள்ளன. அதேபோல ஆயுத பலமற்ற பல வெகுசன எழுச்சிகளை அரசுகள் வன்முறை கொண்டு நசுக்கியும் இருக்கின்றன. பனிப்போர் முற்றுப்பெற்ற சூழ்நிலையிலும் கூட மக்கள் எழுச்சிகள், உலகின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதில் வல்லரசுகள் சில கொண்டிருக்கும் ஆதிக்கத்தை கேள்விக்குறியாக்கிய சந்தர்ப்பங்கள் பல உண்டு.

ஆகவே தான் பேரம்பேசுதல்களுக்கு அப்பாற்பட்ட தேசிய விடுதலையைக் கோருவதில் பேரினவாத், அந்நிய சக்திகள் பிரயோகிக்கக்கூடிய நெருக்குவாரங்களுக்கு எதிரான மக்களின் குரலாக எழும் இப்பேரெழுச்சி நிகழ்வுகளுக்கு சகல தரப்பினரும் பங்களிப்பினை வழங்கி, கனவுகளில் மட்டும் நம்மினம் கண்டுவந்த விடுதலையை நிஜத்திலும் அனுபவிக்க வேண்டும். 'அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்' என்ற திலீப வாக்கின் ஒளியிலே இருள் கலைத்து விடியலைத் தேடுவோமாக!! நினைவுகளைச் சுமந்தது போதும்! இனிமேல் எங்கள் ஒவ்வொருவரையும் அளவுக்கதிகமாக நேசித்த திலீபன் அண்ணாவின் இறுதிக் கனவினை சுவாசிப்போம்!

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 02. 09 . 2005

மின் அஞ்சல :— weekly @ eezhanatham.com

# விடுதலைக்கான குரல்..!

வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டு பிரகடனத்தை மீண்டும் வலியுறுத்தி கிளிநொச்சியில் மாபெரும் எழுச்சி நிகழ்வு நடைபெற்று முடிந்துள்ளது.

வவுனியாவில் தொடங்கிய தேசிய எழுச்சி நிகழ்வானது இப்பொழுது தமிழீழத்தில் மாவட்டங்கள் தோறும் நடைபெற்று வருவதுடன் வவுனியா பிரகடனத்தை தமிழ்மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

வரலாற்றில் எழுச்சி கொள்ளும் மக்கள் தமது விடுதலைக்காக ஓங்கிக் குரல் கொடுத்தே வந்துள்ளனர். அந்த வகையில் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான குரலை மீண்டும் ஒரு முறை கிளிநொச்சியில் ஓங்கி ஒலித்துள்ளனர்.

கிளிநொச்சியில் திரண்ட சனசமுத்திரத்தில் எம்மக்கள் அவாவி நின்றது மானிட விடுதலையையே.

யாருக்கும் அடிமையின்றி, அச்சமின்றி, எவருக்கும் அடிபணியாது எமது நிலத்தில் நாம் குடியிருக்க வேண்டுமென்ற மானிட உரிமையையே அவர்கள் கோரினர்.

இன்று உலகம் முழுவதும் வர்த்தக சுதந்திரம் பற்றியும், பிராணிகளின் வதை பற்றியும், சிறுவர் உரிமை பற்றியும் தர்க்கிக்கும் சூழலில் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இலங்கையில் சிங்கள மேலாண்மையின் கெடுபிடிக்குள்ளிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளப் போராடும் தமிழினத்தின் குரலை உலகம் இன்னும் முழுமையாக உள்வாங்கிக் கொண்டது போதாது.

தமது பூர்வீக நிலத்திலிருந்து வேர்பிடுங்கப்பட்டு தூக்கியெறியப்பட்ட எமது மக்களின் மனங்களில் அரச பயங்கரவாதம் புரிந்த கொடூர வன்முறைகள் அவர்களை விடுதலைக்கு உந்தி தள்ளியபடியுள்ளது.

கனவுகளின்றி, தமது நினைவுகளாக தம் நெஞ்சங்களில் இன்னும் சுமக்கும் தமது மண்ணின் நினைவுகள் விடுதலையை நோக்கி அவர்களை உந்தித்தள்ளுகிறது. உண்மையான குடிகளாக இந்த நாட்டிலிருந்த எம்மக்கள் மீது அரசு ஏமாற்றுத்தனம் புரிந்ததை ஏற்க அவர்களால் முடியாத நிலையில் எம்மக்கள் வேண்டுவது விடுதலையை.

எனவே, எம் மக்களின் ஒட்டுமொத்தக் குரல் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருப்பது விடுதலையையே.

விடுதலைக்காக அளப்பெரிய தியாகங்களையும் இழப்புக்களையும் கொடுத்து இனியும் பொறுத்திருக்க முடியாது என எழுச்சி கொண்டு நிற்கின்றனர் எம்மக்கள்.

அரசியல் சதுரங்கத்தில் எமது விடுதலைப் பயணம் இடர் படுவதையோ, இழிவுபடுவதையோ எம்மக்கள் விரும்பவில்லை.

எம்மக்கள் வாழவும், தம்மைதாமே ஆளவும், உலக நியதிகளின் படி தகுதிகளை கொண்டிருந்தும் எமக்கான விடுதலை ஏன் மறுக்கப்படுகிறது என எம் மக்கள் கேள்வி எழுப்பி நிற்கின்றனர்.

எமக்கான விடுதலையைத் தாருங்கள், அன்றேல் எமக் கான விடுதலையை எம்மைப் பெற விடுங்கள். இதுவே எம் மக்களின் கோசம். எழுச்சி கொண்டுள்ள எம்மக்களின் உரிமைக் குரலை உலகம் உற்று கேட்கும் என நம்புகிறோம்.

தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட சூழலில் இனியும் ஏமாற முடியாது என்ற நிலைவந்த போதே எமக்கான விடுதலைக்கென ஒரு பாதையை வகுத்தோம்.

அந்தப் பாதையின் வழியில் இலக்கை எட்டுவதற்கு அமைதி என்ற பெயரில் சுமார் மூன்டரை வருடங்களுக்கு மேலாக எம் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

உலகின் கண்களுக்கு முன்னால் எமது மனச்சாட்சிகளை அகலத்திறந்து, உண்மையான சமாதானத்திற்காக தமிழினம் உழைத்த போதும் எமக்கு அமைதி கிடைக்கவில்லை.

நீதியும் தர்மமும் சாட்சிகளாய் எம்மக்களின் விடுதலைக்கு துணைநிற்க, எமது விடுதலைக்கான பயணத்தின் பாதை எம் முன்னே தெரிகிறது.

எனினும் அமைதியின் வழியில் மக்களின் குரலாய் உலகத்தின் செவிகளுக்கு எமது விடுதலைப் பற்றிய செய்தியை அனுப்பியுள்ளனர் எம்மக்கள்.

எம் மக்களின் உணர்வுகளையும் விருப்பங்களையும் மதித்து நடக்கும்போது அமைதி என்பதன், சமாதானம் என்பதன் புனிதம் கெடாமல் வரலாற்றில் பதிந்திருக்கும்.

மாறாக, ஒரு இனத்தின் உணர்வுகளை கிழித்தால் அதன் துயர்மிகு வரலாறு உலகின் கண்முன் ஒரு முறை அரங்கேறும்.

அவலங்களும் துயரங்களும் எமக்கான விலையாக எப்போதும் இருக்க முடியாது, இவற்றை சுமந்தும் இவற்றை விலையாகவும் கொடுத்து எம் மக்கள் கேட்பது விடுதலையையே.

விடுதலைக்காக உயிர் கொடுத்த நாம் உரத்த குரலெடுத்து மீண்டும் ஒலித்து நிற்கிறோம் எமக்கான விடுதலையை.

# தமிழ் மக்களின் எதிர்பார்க்கை..!

உலகில் இடம் பெற்று வந்த விடுதலைப் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் ஏதோ ஒரு வகையில் உடன்பாட்டுகளுக்குள் வருகின்றன.

இந்நிலையில் தெற்காசியாவில் பரவலாக பேசப்பட்டு வந்த ஒரு பிரச்சினை இலங்கை இனப்பிரச்சினை கடந்த இரண்டரை தசாப்த காலமாக இலங்கையில் காணப்படுகின்ற இப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண சிறிலங்காவின் சிங்கள தலைமைகள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை. இனியும் அவ்வாறு எடுப்பார்கள் என்பதிலும் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை.

இலங்கையில் தமிழர்கள் சிங்களவர்களால் உரிமை பறிக்கப்பட்டு அடக்கப்பட்டு வந்தமை உலகறிந்ததே. எனவே தான் தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்நிலங்களில் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசை அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக்கோரி நேற்று மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வு ஒன்றை கிளிநொச்சி பொது மைதானத்தில் நடத்தினார்கள்.

ஒரு நாட்டுக்குரிய அனைத்து வசதிகளும் வளங்களும்கொண்ட ஒரு பிரதேசம் எங்களிடம் உண்டு. எனவும் தங்களை பிரிந்து சென்று சுதந்திரமாக வாழ சர்வதேச சமூகம் வழி வகுக்கவேண்டும் என்பதே நேற்றைய மக்கள் எழுச்சியின் நோக்கமாக இருந்தது.

அடக்குமுறைகள் எந்த சமூகத்தின் மீது பிரயோகிக்கப் படுகின்றதோ அச்சமூகத்தில் தான் விடுதலைக்கான உணர்வுகளும் அதிகமாக இருக்கும் என்பது நேற்று கிளிநொச்சியில் திரண்ட மக்களைப் பார்த்திருந்தால் புரிந்திருக்கும்.

மாறி வரும் உலக ஒழுங்கில் பிரச்சினைகள் உள்ள நாடுகளும் அதன் தலைவர்களும் அப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆனால், சிறிலங்காவைப் பொறுத்தவரை சிங்கள தலைமைகள் தங்களுடைய ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்ள சிந்திக்கின்ற அல்லது மேற்கொள்கின்ற நடவடிக்கைகளில் சிறிதேனும் உள்நாட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொள்வது இல்லை.

தேர்தல் காலங்களில் மட்டும் தமிழர்களுக்கு பயன்படக் கூடிய விதத்தில் அல்லாமல் ஒரு சில சார்பான கருத்துக்களை அதுவும் இனவாத சக்திகளுக்கும் பிக்குகளுக்கும் பயந்து பயந்து வழங்குவதும் தேர்தலின் பின் அடுத்த கணம் மறந்துவிடுவதும் சிங்களத்தின் வழமையாகிவிட்டது. இதனை பலகாலமாக அனுபவ ரீதியாக உணர்ந்த தமிழ் மக்கள் எப்போதே சிங்கள தேசத்தை நம்புவதை விட்டு விட்டார்கள்.

எனவே தான் இப்போதெல்லாம் தமிழ்மக்கள் சர்வதேச சமூகத்திடம் கோரி நிற்பது நாம் நிம்மதியாக வாழ விரும்புகின்றோம் எமது நிம்மதியான சுதந்திரமான வாழ்வுக்கு சிங்கள அரசும்

**■ ■ ■ ■ சொந்த மண்ணில் ஏன் சொந்த ஊரிலே அகதியாய் வாழ்கின்ற நிலைமை தமிழர்களுக்கு உண்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற நிலையில் இராணுவம் தமிழ் மக்களின் இடங்களினை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அவர்கள் மீது தாக்குதல்களை நடத்திக்கொண்டும் தங்களுடைய கடலில் தங்களுடைய மண்ணில் நிம்மதியாக தொழில்களை மேற்கொள்ள முடியாமலும் பல்வேறு இன்னல்களை இன்றும் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றார்கள். ■ ■ ■ ■**




அதன் படைகளும் பெரும் தடையாக இருக்கிறது. எனவே எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ ஏது நிலையை ஏற்படுத்தித் தருமாறு சனநாயக வழியில் கோருகின்றனர். எனவே சர்வதேச சமூகமும் தமிழர்களின் இக் கோரிக்கைக்கு மதிப்பளித்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டு சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என நம்புகிறார்கள்.

சொந்த மண்ணில் ஏன் சொந்த ஊரிலே அகதியாய் வாழ்கின்ற நிலைமை தமிழர்களுக்கு உண்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற நிலையில் இராணுவம் தமிழ் மக்களின் இடங்களினை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அவர்கள் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டும் தங்களுடைய கடலில் தங்களுடைய மண்ணில் நிம்மதியாக தொழில்களை மேற்கொள்ள முடியாமலும் பல்வேறு இன்னல்களை இன்றும் தமிழ்மக்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

எனவேதான் இவ்வாறான நிலைமைகளை இனியும் அனுமதிக்க முடியாது. தமிழரின் இறைமையையும் சுதந்திரப் போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீ கரிக்க வேண்டும் என்பதையே இப்போது தமிழ் மக்கள் எதிர் பார்த்து நிற்கின்றனர்.

*-தமிழ்-*





# அதிகாரம் பறிபோவதால் அச்சம்

***இறுதியாக சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டிலா? அல்லது 2006 ஆம் ஆண்டிலா? என்ற கேள்வி எழுந்தபோது இதற்குத் தீர்ப்பு வழங்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி உயர் நீதிமன்றம் செல்ல வில்லை. அதேவேளை தேர்தல் ஆணை யாளரே இதற்கு முடிவு கூறவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வந்தமைக்கு அது நீதித்துறையில் வைத் திருந்த அவநம்பிக்கையே காரணமாகியது.***

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலம் முடிந்தபின் சிறிலங்காவின் சட்டம் தன்னை ஏதாவது செய்ய விடுமோ என்ற அச்சம் கொண்டுள்ளதை வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது அடுத்த சனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றால் சட்டம் மூலம்தன் மீது ஏதாவது பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டு விடுவாரோ என்று அவர் பயப்படுகிறார். இதற்காகவே தனது பதவிக்காலம் முடிவடைந்தும் தன்னை நாட்டின் கௌரவப் பிரஜையாக அங்கீகரிக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியிருக்கின்றார்.

1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறித்தது. இதன் காரணமாக 1982 சனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் போட்டியிட முடியாமல் போனது. அத்துடன் சிறிமாவோ பண்டாரநாயக்கவால் ஒருபோதுமே சனாதிபதியாகவும் முடியாமல் இருந்தது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டுள்ள இந்த அச்சத்துக்கு தனியே இது மட்டும்தான் காரணமென்று கூறிவிடமுடியாது.

சிறிலங்காவின் சனாதிபதிக்கு உள்ள சிறப்புரிமையின் அடிப்படையில் சனாதிபதி சந்திரிகா மீது இதுவரை காலமும் வழக்கெதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட முடியாமல் இருந்தது. ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குள்ள அதிகாரத்தைப்பயன் படுத்தி எதிர்க் கட்சியினர் மீது ஆணைக் குழுவிசாரணைகள் பலவற்றை நடத்தியிருக்கிறார்.

குறிப்பாகக் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பட்டலந்தவில் நடத்தப்பட்ட இரகசியச் சித்திரவதைக் கூடமொன்றுடன் தொடர்புபட்டிருந்தார். அந்தச் சித்திரவதைக் கூடத்துக்கு அவர் வந்து போயிருக்கிறார் என்ற ரீதியில் விசாரணை நடத்த பட்டலந்த ஆணைக்குழுவை நியமித்தார்.

இந்த ஆணைக்குழு மூலம் ரணில் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகவில்லை. எனினும் சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நடந்த தேர்தலின் போதெல்லாம் ரணில் மீது குற்றஞ்சுமந்த அந்த ஆணைக்குழு குறித்துப் பேச சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவறியதில்லை.

எனவே இவ்வாறான குற்றச்சாட்டுகள் ஏதாவது தம்மீது சுமத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சம் சனாதிபதியின் மனத்தில் உள்ளது.

இதனைவிட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆட்சிக்காலத்தில் உயர் நீதிமன்றத்தைப் பயன்படுத்திய விதமானது ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதன்மீது பூரணமாக நம்பிக்கையை இழக்கச் செய்தது.

இறுதியாக சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டிலா? அல்லது 2006 ஆம் ஆண்டிலா? என்ற கேள்வி எழுந்தபோது இதற்குத் தீர்ப்பு வழங்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி உயர் நீதிமன்றம் செல்ல வில்லை. அதேவேளை தேர்தல் ஆணையாளரே இதற்கு முடிவு கூறவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தி வந்தமைக்கு அது நீதித்துறையில் வைத்திருந்த அவநம்பிக்கையே காரணமாகியது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக நெருங்கியவராக இருந்து பின்னர் விரோதியாகிவிட்ட ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க இன்று சிறைக் கூடத்தில் இருக்கின்றார். அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிமட்டுமல்ல எதிர்காலத்தில் அவர் தேர்தல்களில் போட்டியிடுவதற்குக் கூட பெரும் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய கட்டத்தில் அவர் இருக்கின்றார்.

உயர்நீதிமன்றத்தை அவதூறு செய்ததாக அவர் மீது குற்றச்சாட்டுக் காரணமாக உயர்நீதிமன்றம் அவருக்கு இரண்டாண்டு காலச் சிறைத்தண்டனை விதித்தமையால் அவரால் எங்குமே மேன்முறையீடு செய்ய முடியாது சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இவர் உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியதற்குக் கூட நீதித்துறையில் நேர்மையில் அவர் கொண்டிருந்த ஐயமும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அவை வழிநடத்தப்பட்ட விதம் குறித்து அவர் கொண்டிருந்த எரிச்சலுமே காரணமாக இருந்தன.

இப்போது அவர் சனாதிபதித் தேர்தல் முடிவை எதிர்பார்க்கத் தொடங்கியிருப்பார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ.தே. கட்சிக்குத் தாவிய அவரை ஐ.தே.க பிரதம அமைப்பாளராகவும் சனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களுக்கு தலைமை தாங்கவும் நியமித்தது.

எனவே ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தால் அவர் சிறை மீட்கப்படுவார் என்பது சனாதிபதி சந்திரிகாவுக்கு நன்றாகவே தெரியும். அதேவேளை எஸ்.பி. திசாநாயக்கவின் குணவியல்பும் சனாதிபதிக்குத் தெரியும்.

சிறையிலிருந்து மீளும் போது சந்திரிகாவின் வரலாற்று நூலுடன் வெளியே வரப்போவதாகச் சவால்விட்டுள்ள அவர் சிறையிலிருந்து வெளியேறியபின் சந்திரிகாவின் எதிர்காலத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவார் என்பது குறித்து சந்திரிகா அச்சமடையக்கூடும்.

இதனை சனாதிபதி சந்திரிகா இப்பொழுதே வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டதையே அவரது கோரிக்கை புலப்படுத்துகிறது. ஆனால் ஒருவருக்கு நாடு கௌரவம் வழங்குவது அதாவது கௌரவப் பிரஜையாக அங்கீகரிக்கப்படுவது அவரது செயற்பாட்டைப் பொறுத்தே அமையும். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கௌரவப் பிரஜை என்பதற்கு தென்னாபிரிக்கச் சனாதிபதி நெல்சன் மண்டேலாவை உதாரணமாகக் காட்டியிருக்கிறாராம்.

ஆனால் நெல்சன் மண்டேலா அதனைக் கேட்டுப்பெறவில்லை. தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காக அவர் நடத்திய போராட்டம் அவருக்கு அந்தக் கௌரவத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

ஆனால் சிறிலங்கா சனாதிபதி கேட்டுப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறார். எவ்வாறாயினும் சனாதிபதிக்குரிய சகல வசதிகளும் தொடர்ந்தும் அவருக்குக் கிடைக்கும். ஆனால் அதிகாரத்தைத் தான் இழக்கப்போகிறார். அதுதான் அவருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலவன்

## நேர்நோக்கு

# தனித்துப் போட்டியிட அஞ்சும் சனாதிபதி வேட்பாளர்கள்

***தென்னிலங்கையில் எவ்வாறுதான் ஆட்சி மாறினாலும் தலைமைகள் சிங்களம் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. இவ்வாறேதான் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் சாதகமான பிரதிபலிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை.***

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கின்ற நிலையில் தென்னிலங்கையில் கடும் தலைமைத்துவப் போட்டி இடம் பெற்றுவருகின்றது. ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றும் நோக்கில் இருபெரும் கட்சிகளும் இனவாதச் சிறுகட்சிகளின் ஆதரவினை பெற்றுக்கொள்ள தீவிரம் காட்டி வருகின்றன.

மேற்படி நிலைமையானது சிறிலங்காவின் இருபெரும் அரசியல் கட்சிகள் தனித்துத் தேர்தலில் நிற்க முடியாத அளவுக்கு வாக்கு வறுமை ஏற்பட்டுள்ளதையே காட்டுகிறது. அதாவது சிறிலங்காவின் வாக்குகள் இப்போது சிதறிக்கிடக்கின்றன. இனி சிறிலங்காவில் எந்தவொருகட்சியும் தனித்து அதிகாரத்தைப் பிடிக்கவோ ஆட்சி அமைக்கவோ முடியாது. இதனால் இருபெரும் கட்சிகளும் ஏனைய கட்சிகளின் ஆதரவினைப் பெற்று தேர்தலில் நிற்க முனைப்புக் காட்டி வருகின்றன.

இந்நிலையில்தான் இச் சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் எப்படி அமையப்போகின்றன. அதன்பின் இனப் பிரச்சினை எப்படி நகரப்போகிறது என்பதுதான் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது.

இது இவ்வாறு இருக்க இம்முறை சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் பெரும்பாலும் ஐ.தே.கட்சிக்குச் சார்பாக அமையலாம் என்று பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர். இவர்களது கருத்திலும் யதார்த்தம் காணப்படுகிறது. யாதெனில் 1999 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி 46 லட்ச வாக்குகளும் ஐ.தே. கட்சி 32 லட்ச வாக்குகளும் பெற்றிருந்தன. அதன்பின் 2001 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் சேர்ந்து 42 லட்ச வாக்குகளை பெற்றது. ஆனால் ஐ.தே.கட்சி 36 லட்ச வாக்குகளைப் பெற்றது.

இந்நிலைமையானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்கையில், ரணிலுக்கான மக்கள் செல்வாக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. அண்மையில் ஐ.தே. கட்சி நடத்திய மாபெரும் மக்கள் பேரணியில் கூட அதன் தன்மை வெளிப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு சந்திரிகாவின் கடந்த கால ஆட்சியின்போது பேச்சுவார்த்தை தடைப்பட்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆபத்தான நிலைக்கு வந்தமை,மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, வேலையில்லாப் பிரச்சினை , தொழிற்சங்க நடவடிக்கைகள் குறிப்பாக சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் வேலைப்புறக்கணிப்பில் ஈடுபடாத தொழிற்சங்க அமைப்புகள் இல்லை யென்றே கூறவேண்டும். அத்தோடு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறிப்பிட்ட காலத்தில் பல தடவைகள் அதிகரித்த எரிபொருட்களின் விலை என சந்திரிகா ஆட்சியில பிரச்சினைகள் இல்லாத துறையே இல்லை. எனவேதான் இவ்வாறான பல பிரச்சினைகளின் விளைவு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்தது எனலாம்.

இந்த நிலையில் எப்பாடுபட்டேனும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்வதற்கு ஜே.வி.பியின் ஆதரவை மகிந்த நாடியபோது ஜே.வி.பி பல நிபந்தனைகளை விதிக்கிறது. மகிந்தவும் இதற்கு உடன்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இது இவ்வாறு இருக்க; தான் கட்சியின் தலைவியாக இருக்கும் வரை ஜே.வி.பியுடன் எவ்வித கூட்டும் வைத்துக்கொள்ள கூடாது என மகிந்தவுக்கு சந்திரிகா கூறியிருக்கின்றார். அதே நேரம் தான் சனாதிபதியாக வந்தால் விடுதலைப்புலிகளின் தலைவருடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதாகக் கூறும் மகிந்த, மறுபுறம் விடுதலைப்புலிகள் தொடர்பில் கடும் போக்குக் கொண்ட ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்கின்றார்.

எனவே இதிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாக புரிந்துகொள்ளலாம். வாக்குகளை பெறுவதற்கு மகிந்த வழங்கும் கவர்ச்சிகரமான வார்த்தைகள் மட்டுமே இவை என்று.

ஒருவேளை மகிந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசுவேன் என்பதனை மறந்துவிடலாம். ஆனால் ஜே.வி.பியின் நிபந்தனைகளை மறக்க முடியாது.

எது எவ்வாறோ தென்னிலங்கையில் எவ்வாறுதான் ஆட்சி மாறினாலும் தலைமைகள் சிங்களம் என்பதில் எவ்விதமாற்றமும் இல்லை. இவ்வாறேதான் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் சாதகமான பிரதிபலிப்பு எதுவும் ஏற்படப் போவதில்லை.

ரணிலாக இருந்தாலும் சரி மகிந்தவாக இருந்தாலும் சரி தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்போவதில்லை. வேண்டும் என்றால் இருவரும் சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்த தமிழர்கள் பிரச்சினை தொடர்பில் நடிக்க முற்படுவார்களே தவிர வேறு எதனையும் செய்யப்போவதில்லை. சிங்கள இனவாதத்தினை பகைத்து தமிழர்களின் பிரச்சினைகளை எந்தச் சிங்கள தலைமைகளும் தீர்க்கப்போவதில்லை. சனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி தலைமைகள் சிங்களம் எனும் ஒரே குட்டையில் ஊறின மட்டைகளாகத்தான் இருக்கும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை.

எனவே தமிழ் மக்கள் தமது உரிமைப் போரின் தொடர்பில் விடுதலை கிடைக்கும்வரை விழிப்பாக இருக்கவேண்டும்.

மு.தமிழ்ச்செல்வன்

# அநுராவின் இராசதந்திரப் பணி

மரணச் சொத்தாகக் கிடைத்த வெளி நாட்டமைச்சர் பதவியைக் கையேற்றவுடனேயே அத்தனகல இளவரசன் அநுரா பண்டாரநாயக்கா அனல் பறக்கும் படியான பேட்டியொன்றை கொழும்பில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கினார். நோர்வேயையும் சமாதான நடவடிக்கைகளிலான அதனது அனுசரணைப் பணியையும் ஒரு பாட்டம் வாங்கு வாங்கென்று அந்தப் பேட்டியில் வாங்கினார். இராசதந்திர மொழியில் அமையாத கருத்துத் தொனியிலான பேட்டியை வழங்கிய கையோடேயே இந்தியா வுக்கான தனது உத்தியோகபூர்வமானதும் வெளிநாட்டமைச்சர் என்ற கோதாவில் முதலா வதானதுமான பயணத்தை தொடங்கினார்.

இந்தியாவில் தேர்ந்த இராசதந்திரி களினதும், முதிர்ந்த அரசியல்வாதிகளினதும் வகுப்புகளுக்குப் பிறகு' தமிழகத்தின் பிரபல ஆங்கில நாளேடான இந்துவுக்கு வழங்கிய பேட்டியில் நோர்வேக்கு எதிராக ஒரு சன்னதத் தையே ஆடி முடித்துவிட்டார் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டார நாயக்கா.

வேண்டிக்கொண்டார்.

அநுரா அரசியலில் கற்றுக்குட்டி அல்ல. 70களில் தொடங்கி இன்று வரை நான்கு தசாப்தங்களாக நீள்கிறது அவரது அரசியல் வாழ்க்கை. ஆனால் இந்த நீண்ட அரசியற் பயணத்தில் அவர் இராசதந்திரக்கலையைச் செம்மையாகக் கற்றுக்கொள்ளவில்லையோ வென்றே சாதாரண மக்கள் கூட எண்ணுமள வுக்கு இருக்கிறது அவரது வெளிவிவகார அமைச்சுப்பணி. (ஆனால் நீண்ட காலமாகவே வெளிவிவகார அமைச்சர் பதவிமீதுதான் கண்வைத்திருந்ததாக அநுரா கூறியிருக்கிறார்.)

ஒரு இராசதந்திரி 'ஆமாம்' என்று சொன்னால் 'பார்ப்போம்' என்று அர்த்தம். அவர் 'பார்ப்போம்' என்று சொன்னால் 'இல்லை' என்று அர்த்தம். 'இல்லை' என்று ஒருபோதுமே இராச தந்திரிகள் கூறமாட்டார்கள். இதன் அர்த்தம் என்னவெனில் தேர்ந்த இராசதந்திரிகள் எப்போதுமே நேர்முகமான (Positive) முறையில்தான் பேசுவார்கள். தொழில் சார் இராசதந்திரிகள் சினந்தோ, முகஞ்சுழித்தோ, கடுந்தொனியிலோ பேசமாட்டார்கள். அவர்களது

**சிறிலங்காவின் இந்த இராசதந்திர அவல நிலையை இந்தியா செம்மையாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளது. தமிழகத்தின் 'சன்நியூஸ்'தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த 'இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ராம் "தனது இராணுவ வலிமையால் புலிகள் சிங்களவர்களை மண்டியிட வைத்துவிட்டனர்" என்று தெரிவித்ததை கூர்ந்து நோக்குதல் அவசியம். இந்தக் கூற்றின் மூலம் சிங்களவர்களின் தேசிய ஆன்மாவைச் சீண்டி உசுப்பிவிடுவதே ராமின் நோக்கமாகும்.**

இந்த இரண்டு பேட்டிகளினூடாகவுமே அநுரா தன்னையும் தனது அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் தலைவியினதும் உள்ளக்கிடக் கையினையும் உலகுக்குப் 'புட்டுக்' காட்டி விட்டார்.

அவர் திருவாய் மலர்ந்த விடயங்கள் தான் என்ன?

கொழும்பின் 'டெய்லிமிரர்' பத்திரி கைக்கு அவர் சொன்னார் "நோர்வே தனது வரையறையை மீறிவிட்டது 'தபால் பெட்டி'க் குரிய பணிகளைத் தாண்டி நோர்வே சென்று விட்டது"

இவ்வாறு நோர்வேயைக் கண்டித்து விட்டு இந்தியாவுக்குச் சென்றபின்னர் அவரது வார்த்தைகளின் தொனியும் வெப்பமும் அதிகரித்துவிட்டன. சாதாரணமாகவல்ல, வெகுவாகவே அதிகரித்துவிட்டன.

வார்த்தைகள் பண்பட்டவையாகவும் அதே வேளை ஆழ்ந்த பொருள் மிக்கவையாகவும் இருக்கும். தனது உட்கிடக்கையை அம் பலப்படுத்தாமல், பிடிகொடுக்காமல் பேசுவதும் இராசதந்திரிகளது மரவு.

இவை எல்லாவற்றிற்கும் வெகு தூரமாக நிற்கிறார் அநுரா. அவரது பேச்சுக் களும் செயற்பாடுகளும் 'நாடாளுமன்றக் காடையர்களாகச்' செயற்படுகின்ற ஜே.வி.பி யினது பேச்சுக்கும் செயற்பாடுகளுக்கும் மிக அண்மையானவையாக இருக்கின்றன.

சிறிலங்கா நாடாளுமன்றின் கடந்த வார அமர்வொன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத்தலை வரும், அதனது பிரசார செயலருமான விமல் வீரவன்ச "நோர்வே இலங்கையை விட்டுப் போகவேண்டிய ஒன்றுதான் மீதமாக இருக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

அநுராவினதும் வீரவன்சவினதும் கூற்றுக்கள் ஏறக்குறைய சமகாலத்தில் வெளிவந்தன. அவை ஒரே பொருளையும் கொண்டிருந்தன.

ஒட்டுமொத்தமாக இந்தப் போக்கைக் கூறுபோட்டுப் பார்க்கும்போது கிடைக்கும் செய்தி என்ன? மேற்குலகின் குறிப்பாக அமெரிக்காவின் ஆதரவுடனான சமாதான அல்லது இராசதந்திர நடவடிக்கைகளில் புலிகளை முடக்கிவிட சிங்களத் தலைமையினால் முடியாமற்போய் விட்டது. மாறாகப் புலிகள் சபையேறிவிட்ட புலிகளின் குரல் உலகின் செவியேறிவிட்ட; சிங்களம் கனவிலும் விரும்பியிருக்காத நிகழ்வு நடந்தேறிவிட்டது.

இந்த இராசதந்திர செயன்முறையி லிருந்தும் வெளியேறிவிடலாமென்றால், மேற்குலகு தரும் நிதியுதவிகள் இன்றி இயங்க முடியாத அளவுக்கு சிறிலங்காவின் பொருளா தாரம் சேடமிழுத்துக் கிடக்கிறது.

எனவேதான் இராசதந்திர செயன் முறையிலிருந்தும் சமாதான முயற்சிகளிலிருந் தும் தாம் பின்வாங்கிவிடவில்லை எனக் காட்டிய படியே சமாதான அனுசரணையாளர்களாக தற்போது செயற்படும் மேற்குலகின் முகவரான நோர்வேயைக் 'காய்வெட்டிவிட்டு' தனக்கு ஏற்ற விதத்திலே செயற்படக்கூடிய, புலிகளுடன் விரோதப் போக்கைக் கொண்டுள்ள இந்தியா வைக் களமிறக்க சிங்களம் முயற் சிக்கிறது. சந்திரிகா அம்மையாரது கூடாரம் முயற்சிக்கிறது.

இந்த முயற்சியின் வெளிப்பாடுதான் சிறிலங்காவின் புதிய வெளிநாட்டமைச்சரான அநுராவின் வார்த்தைகள். ஆனால், எடுத்துக் கொண்ட காரியத்தைச் சாதிப்பதற் குப் பதிலாகப் போட்டுடைத்து வட்டார் அநுரா. தனது விஜயத தைச் சரியாகப் பயன் படுத்திக் காரியத்தை சாதித்துக்கொள்ள அவரால் முடி யாமற் போய் விட்டது. (அநுராவால் மட்டுமல்ல, அவருக்கு முன் னைய வெளிநாட்ட மைச்சரால் கூட இந்தத் திசையில் இந்தியாவை இழுத்துவர முடியாமற் தான் இருந்தது. ஏனெனில் இலங்கையின் களநிலவரம் அப்படித்தான் இருக்கிறது.) அதனால்தான் வெளிநாட்டமைச்சர் அநுராவின் முதலாவது இராசதந்திரப் பயணம் வெற்றியளிக் கவில்லை என சிறிலங்காவின் உயர் இராசதந் திரிகள் மத்தியில் கணிப்பீடு செய்யப்பட்டது.



சிறிலங்காவின் இந்த இராசதந்திர அவல நிலையை இந்தியா செம்மையாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளது. தமிழகத்தின் 'சன்நியூஸ்'தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த 'இந்து'பத்திரிகையின் ஆசிரியர் ராம் "தனது இராணுவ வலிமையால் புலிகள் சிங்களவர் களை மண்டியிட வைத்துவிட்டனர்" என்று தெரிவித்ததை கூர்ந்து நோக்குதல் அவசியம். இந்தக் கூற்றின் மூலம் சிங்களவர்களின் தேசிய ஆன்மாவைச் சீண்டி உசுப்பிவிடுவதே ராமின் நோக்கமாகும்.

தடம்மாற முனையும் இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகளுள் தாங்கள் தலையைக் கொடுக்காமலேயே தமக்கு தேவை யானபுறநிலையை இங்கு உருவாக் கிவிட முனையும் குரூரம் அந்த வார்த்தைக ளுள் மறைந்து கிடக்கி றது.

அநுரா எந்த 'இந்து' பத்திரி கைக்கு வழங்கிய பேட்டியில் நோர் வேயைச் சாடி அது செய்த பாதகத்தை இந்தியா நிவர்த்தி செய்யவேண்டுமெனப் புலம்பினாரோ அதே இந்து பத்திரிகையின் ஆசிரியர் ஏறக்குறையச் சம நேரத்தில் வெளியிட்ட இந்தக் கருத்து புறக்கணிக் கத்தக்கதல்ல.

சென்னையின் 'இந்து' பத்திரிகையில் நோர்வேயை வெகுவாகவே சாடினார் அநுரா. "ஐரோப்பிய நாடுகளில் புலிகளைப் பற்றி நேர் முகமான கருத்துக்கள் ஏற்படுவதற்கு நோர்வே தான் காரணம்." என்று கர்ச்சித்த அவர் "இந்த நேர்முகமான கருத்தாக்கத்தை உடைத்து, புலிகளுக்குப் பாதகமான கருத்துருவாக் கத்தை ஐரோப்பிய நாடுகள் மத்தியில் உருவாக்க இந்தியா உதவவேண்டும்" என

ஆக, சாணக்கியமற்ற தனது வார்த் தைகள், செயற்பாடுகளினால் இலங்கைத் தீவினை மேலும் சிக்கலுக்குள் இழுத்துவிட முனைகிறார் அநுரா.

**பு.சத்தியமூர்த்தி**

# பெண் விடுதலைப் பயணம் ஏற்றம் பெற...



*பெண் விடுதலை என்பது பெண்கள் ஆணிடமிருந்து விடுதலை பெறும் கிளர்ச்சியல்ல. விடுதலை என்பது மூன்றாம் மண்டல நாடுகளில் எட்டப்படாத ஒன்று. இங்கு விடுதலை என்பது ஆண்களுக்கும் தேவையான ஒன்றாகவே இருக்கிறது. ஆண்கள் மட்டும் சுதந்திரமாக வாழ்கிறார்களா என்ன? மரபு ரீதியாக வந்த வழமை களினால் ஆண்களின் நிலை பெண் களை விட மேம்பட்டுள்ளது. அவ் வளவுதான் மற்றும்படி இச்சமூகத்தில் அவர்களும் விடுதலை பெற வேண் டியவர்களாகவே இருக்கிறார்கள்.*

*வேண்டுமானால் பால் சமத் துவம் இங்கில்லை என்பதை நாம்முழுமையாக ஏற்றுக்கொள்ள லாம். நாகரிக உலகில் மனிதர்களை அடிமைப்படுத்துவதற்கும் அடிமை கொள்வதற்கும் அடிமையாய் வாழ் வதற்கும் இடமில்லை. பால் ரீதியில் மாத்திரமன்றி வர்க்கரீதியிலும், சாதி அமைப்பு ரீதியிலும், சமய ரீதியிலும் கூட இந்தச் சமத்துவமற்ற இழி நிலையை நாம் அவதானிக்கலாம்.*

*பெண்களின் விடுதலை ஆண்களுக்கும், ஏன் முழுச் சமூகத் திற்கும் இன்றியமையாதது. இது பெண்களுக்கு மட்டும் நலன் தரும் விடயமல்ல. அனைவருக்கும்தான்! பெண்ணுக்கு ஆண் தலைவன் என்ற சமூக அமைப்பின் மாயையினாலேயே பால் சமத்துவமின்மை ஏற்பட்டது. பெண் ஆணுக்கும் தலைவி தான் என்பதை ஏற்றுக்கொண்டு விட்டால் எல்லோர்க்கும் ஏற்றமிகு வாழ்வு கிட்டும்.*

*ஆற்றலும் திறமையும உள்ள பெண்ணிற்கு கணவன், பெற்றோர் மற்றும் குடும்பத்தவரின் ஒத்துழைப்பும் சமபார்வையும் இருக்கு மாயின் அவளால் எதையும் சாதிக்க முடியும். செய்தொழிலில் ஆர்வம் உள்ள பெண்கள் எதையும் திட்ட மிட்டுச் செயலாற்ற வேண்டும். ஆர் வத்தை மழுங்கடிக்கக் கூடிய அகச் சூழ்நிலை களையும் புறச்சூழ்நிலை களையும் முறியடித்து முன்னேறி னால் இலக்கை அடையமுடியும்.*

*பெண்களே! உங்களிடமுள்ள திறமைகளை நீங்கள் முதலில்*

**மு.சந்திரகாந்தா.**

*அடையாளம் காணுங்கள். உங்களால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற் படும் போது எந்த எதிர்ப்பு வந்தாலும் எந்த தடங்கல் ஏற்பட்டாலும் தயங்கிப் பின் வாங்காதீர்கள். பண்பாட்டுப் போலிகளில் ஊறிப் போன சமூகத் தின் விமர்சனக் கணைகள் உங் களைத் துளையிட்டுப்பின்வாங்க விட்டுவிடாதீர்கள். காய்க்கின்ற மரம் கல்லடிபடத்தான் செய்யும்.*


*உங்கள் விடா முயற்சியி னால் நீங்கள் முன்னேறி மேலெழுந்து வந்ததும் சூரியனைக் கண்ட பனித் துளி போல எதிர்ப்புக்கள் தானாக மறைந்து விடும். எனவே தயங்காது ஆக்கபூர்வமாகச் செயற்படுங்கள்.*

*பெண்ணியம் பற்றிய அதீத தன்முனைப்பை விடுத்து முழுச் சமூக விடுதலைக்காகப் பாடுபடும் போது பெண்ணியம் அடங்கலான அனைத்து விடயங்களிலும் விடுதலை பெறும் மார்க்கம் உருவாகும் என்ற மாற்றுக் கருத்தை நாம் முற்று முழுதாகப் பின் தள்ளிட முடியாது. அதேவேளை பெண்ணியம் பற்றிய பிரக்ஞையும் விடுதலை பெறுவதற்கான முன்முயற்சி களும் முன்னெடுத்துச் செல்லப்படு தல் முக்கியமே.*

*ஒருங்கிணைந்த செயற்பாடு கள் மூலம் பெண்ணின் நிலையினை உயர்வடைய வைத்து பால் சமத்து வத்தை எட்டுவதனால் எமது விடுத லைப் பயணம் ஏற்றம் காணும் என்ப தில் எதுவித ஐயமுமில்லை.*

# அயர்லாந்தின் விடுதலைத் தீ

## ஓர் கண்ணோட்டம்



ஐரிஸ் விடுதலைப்போராட்டத் தலைவர் மைக்கல் கொலின்ஸ்

**காலனித்துவ ஆட்சியின் கீழ் தொடர்ந்தும் வாழ விரும்பாத புதிய ஐரிஸ் தலைமுறை பிரித்தானியாவுக்கு எதிராக போராடும் முடிவுக்கு வந்தது. விடுதலையின் பால் பற்றுக்கொண்ட ஐரிஸ் தேசபக்தர்கள் ஒன்றிணைந்து ஐரிஸ் குடியரசு இராணுவத்தையும் (IRA) அதன் அரசியல் பிரிவான சின்பெயினையும் (Sinn Fein) உருவாக்கினர்.**

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் விடுதலைப் போராட்டங்களில் மிகவும் பழமை யானதும், ஐரோப்பாவின் முற்றத்திலே நடந்து வந்ததுமான வட அயர்லாந்துப் போராட்டம் முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலைகள் தோன்றி யுள்ளதாக செய்திகள் வரத்தொடங்கியுள்ளன.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் காணப் படும், கரந்தடிப் போர் முறைகள் அளப்பரிய தியாகங்கள், பரந்துபட்ட மக்களின் பேராதரவு, காட்டிக்கொடுப்புகள், அதற்கான தண்டனைகள், அடக்குமுறை அரசின் தந்திரோபாயங்கள், பேச்சுவார்த்தைகள், விடுதலை இயக்கத்தில் ஏற்படும் பிளவுகள் ஆகிய இன்னோரன்ன அம்சங்களைக் கொண்டு விளங்கியதுதான் அயர்லாந்தில் IRA என அழைக்கப்படும் ஐரிஸ் குடியரசு இராணுவத்தால் (IRISH REPUBLICAN ARMY) முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டமாகும்.

நகர்ப்புற கரந்தடிப் போர்முறைக்கு பேர்போன இவ்விடுதலைப் போராட்டத்தின் பின்னணியை விரிவாகப் பார்ப்பதன் மூலம் IRA யின் அரசியல் பிரிவான சின்பெயின் (Sinn Fein) தலைவர் ஜெரி அடம்ஸ் தெரிவித் துள்ள "படைக்கலங்களை கைவிடுவதற்கான ஒட்டுதல்" கால ஓட்டத்தில் எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதனை வாசகர்கள் ஒவ்வொருவரும் சுயமாகவே முடிவெடுக்கக் கூடியதாகவிருக்கும்.

**வரலாற்றுப் பின்னணி**

குடியேற்ற வாதத்தில் கொடி கட்டிப் பறந்த பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அயலவனாக இருக்கவேண்டிய புவியியல் நிலை அயர்லாந்து (IRELAND) என்ற குட்டித்தீவுக்கு ஏற்பட்டுவிட்டது. தமக்கென தனித்துவமான மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட ஐரிஸ் (IRISH) இன மக்கள் இத்தீவில் செறிந்து வாழ்ந்தனர். கி.பி.1170 இல் ஆங்லோ-நோர்மன்களால் (Anglo-Nor Mans) அயர்லாந்தின் தலைநகர் டப்ளின் கைப்பற்றப்பட்டது. கி.பி 1172 இல் கென்றி-II (Henry-II) என்ற ஆங்கில மன்னனின் கீழ் அயர்லாந்து கொண்டுவரப் பட்டது. இதனைத் தொடர்ந்து பிரித்தானியா வின் பெருநிலப்பரப்பில் இருந்து பெருமளவு மக்கள் அயர்லாந்துத் தீவில் குடியேற்றப் படுகின்றனர். இக்காலப்பகுதியில் அயர்லாந்து சுதேசிகளும் குடியேற்றவாசிகளும் கத்தோ லிக்கச் சமயத்தலைவர்களாய் இருந்ததால் ஆரம்பத்தில் பிரச்சினைகள் இருக்கவில்லை.

17 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க சமயத்தில் பிளவு ஏற்பட்டபோது அயர்லாந்து சுதேசிகள் கத்தோலிக்க (Catholic) மதத்தை பற்றிக்கொள்ள குடியேறிகளான வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த மக்கள் ஆங்கில மன்னனுக்கு விசுவாசம் தெரிவித்து புரட்டஸ்தாந்து (protestant) மதத்தைத் தழுவிக் கொண்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து மத ரீதியான பிரச்சினைக்குள் சுதேசிகளும், குடியேறிகளும் மூழ்கினர். கி.பி 1801 இல் பிரித்தானிய அரசால் பிறப்பிக்கப்பட்ட விசேட சட்டத்தின் படி அயர்லாந்து, வேல்ஸ், ஸ்கொட் லாந்து, இங்கிலாந்து ஆகியவை உள்ளடங்கிய ஐக்கிய இராச்சியம் (United Kingdom) உருவாக்கப்பட்டது. அயர்லாந்துத் தேசத்தின் இறையாண்மை வலுக்கட்டாயமாக பறிக்கப் பட்டு ஆங்கில அரசின் மேலாதிக்கத்துள் கொண்டுவரப்பட்டது. அரச ஆதரவுடன் குடியேறிய குடியேற்றவாசிகள் அயர்லாந்தின் வட பகுதியில் செறிவாகவும், பலமாகவும் நிலைகொள்கின்றனர். குடியேற்றவாசிகளின் நெருக்குதல்களை முகம் கொடுக்க முடியாத சுதேசிய ஐரிஸ் மக்கள் அயர்லாந்தின் ஏனைய பாகங்களுக்கும், வட அமெரிக்காவுக்கும் புலம் பெயர்ந்து சென்றனர். மொத்தமாக முப்பத்தி யிரண்டு (32) நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட (32 Counties) அயர்லாந்தில் வட பகுதியில் உள்ள ஆறு (06) நிர்வாகப் பிரிவுகளில் குடியேறிகள் பெரும்பான்மை நிலையில் இருந்தனர்.

**ஈஸ்ரர் கிளர்ச்சி (Easter Rising)**

காலனித்துவ ஆட்சியின் கீழ் தொடர்ந்தும் வாழ விரும்பாத புதிய ஐரிஸ் தலைமுறை பிரித்தானியாவுக்கு எதிராக போராடும் முடிவுக்கு வந்தது. விடுதலையின் பால் பற்றுக்கொண்ட ஐரிஸ் தேசபக்தர்கள் ஒன்றிணைந்து ஐரிஸ் குடியரசு இராணுவத் தையும் (IRA) அதன் அரசியல் பிரிவான சின்பெயினையும் (Sinn Fein) உருவாக்கினர். 1916 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு (ஈஸ்ரர்) தினமன்று ஆயுதமேந்திய விடுதலைப் போராளிகள் டப்ளின் (DUBLIN- அயர்லாந்தின் தலைநகர்) பிரதம தபால் நிலையத்தில் தாக்குதலைத் தொடுத்து பிரித்தானியாவுக்கு எதிரான தாக்குதலை தொடக்கி வைத்தனர். இந்த ஆயுதக் கிளர்ச்சியை பிரித்தானிய அரசு கொடுங்கரம் கொண்டு நசுக்கியது. கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். கிளர்ச்சித் தலைவர் களில் ஒருவரான ஈமன் டி வலேரா (Eamon deValera) என்பவர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றிருந்ததால் சுட்டுக் கொல்லப் படாமல் சிறையிலடைக்கப்பட்டார். மற்றையவரான மைக்கல் கொலின்ஸ் (Michael Collins) என்பவர் படையினரிடம் சிக்காமல் தலைமறைவாகினார்.

**விடுதலை வீரன் மைக்கல் கொலின்ஸ்.**

ஈஸ்ரர் கிளர்ச்சியை அடக்கிய ஆங்கிலப் படைகள் நடத்திய கொடூரத்தை

**யாழ் நிலா**

நேரில் கண்ணுற்ற ஐரிஸ் இளைஞர்கள் மத்தியில் விடுதலை உணர்வு பற்றிக்கொண் டது. மைக்கல் கொலின்ஸின் தலைமையில் பிரித்தானியக் காவல்துறைக்கும் இராணுவத் தினருக்குமெதிரான கரந்தடிப் போரை முன் னெடுத்தனர். சிறையில் இருந்த ஈமன் டி வலேரா மீட்கப்பட்டார்.

உலக நாடுகள் பலவற்றை ஆண்டு கொண்டிருந்த பிரித்தானிய அரசுக்கு அதன் மடியில் ஒரு கரந்தடிப் போரை எதிர்கொள்வ தில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டன. 1921ஆம் ஆண்டு போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆங்கில அரசு முன்வந்தது. IRAயின் தளபதியான மைக்கல் கொலின்ஸ் பேச்சுவார்த் தைக்காக லண்டன் சென்றார். பிரித்தாளும் தந்திரோபாயத்திலும் அரசியல் காய் நகர்த் தலிலும் வல்லுனர்களான ஆங்கிலப் பிரபுக்கள் பேச்சுவார்த்தையில் வெற்றிபெற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையை உருவாக்கினார்கள்.

**ஆங்கில-ஐரிஸ் உடன்படிக்கை**

1921 டிசெம்பர் மாதம் இவ்வுடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதன்படி 32 நிர்வாகப் பிரிவுகளையுடைய அயர்லாந்துத் தேசமானது ஐரிஸ் மக்களை பெரும்பான் மையாகக் கொண்ட 26 நிர்வாகப் பிரிவுகளை ஒன்றிணைத்து அயர்லாந்து குடியரசாகவும் (REPUBLIC OF IRELAND), புரட்டஸ்தாந்து மதத்தினரான குடியேற்றவாசிகளை பெரும்பான் மையாகக் கொண்ட 06 நிர்வாகப் பிரிவுகளை ஒன்றிணைத்து வட அயர்லாந்துப் பிரதேசமாக வும் பிரிக்கப்பட்டது. மேற்படி வட அயர்லாந்து பிரதேசமானது அலட்ஸ்ரர் (ULSTER) மாகா ணம் என அழைக்கப்பட்டதுடன் ஐக்கிய இராஜ்ஜி யத்துடன் இணைக்கப்பட்டது. இதன் தலை நகர் பெல்பாஸ்ற் (BELFAST)என அழைக்கப் படுகின்றது.

இப்பிரிவினையை தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்துடன் இணைக்கப்பட்ட ஆறு நிர்வாகப் பிரிவுகளான டெறி (Derry), அன்றிம் (Antrim), தைரோன் (Tyrone), பேர்மனாக் (Fermanagh), அர்மாக் (Armagh), டவுண் (Down) ஆகிய பகுதிகளில் வசித்து வந்த கத்தோலிக்க ஐரிஸ் மக்கள் ஓர் நாளிலேயே சிறுபான்மையாக்கப்பட்டனர். பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலத்தில் IRA இயக்கத்தில் ஏற்பட்ட முரண்பாட்டால் இயக்கம் பிளவுபட்டது. ஈமன்டிவலேரா (EAMON DE VALERA) தலைமையில் ஓர் அணியும் மைக்கல் கொலின்ஸ் (MICHAEL COLLINS) தலைமை யில் ஓர் அணியுமாக பிளவு ஏற்பட்டது. டப்ளின் (DUBLIN) கோட்டையில் பறந்த ஐக்கிய இராச்சிய கொடி இறக்கப்பட சுதந்திர அயர்லாந்து குடியரசின் கொடியை மைக்கல் கொலின்ஸ் ஏற்றினார். இதனைத் தொடர்ந்து பிளவுபட்ட IRA பிரிவுகளுக்கிடையில் உள்நாட்டுப் போர் (CIVIL WAR) மூண்டது. இரு தரப்பிலும் பெருமளவு போராளிகள் உயிரிழந்தனர். இறுதியில் நாட்டின் தலைவரான மைக்கல் கொலின்ஸ் பயணம் செய்த வாகனம் மீது கண்டி கோக் (County Cork) என்ற இடத்தில் வைத்து டி வலேராவின் விசுவாசிகள் மேற்கொண்ட பதுங்கித் தாக்குதலில் மைக்கல் கொலின்ஸ் கொல்லப்பட்டார். இத்துடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.


1926 ஆம் ஆண்டு டிவலேரா Fianna Fail (Sodiers of Destiny) என்ற அமைப்பை ஆரம்பித்து 1932 இல் ஆட்சியை கைப்பற்றினார். தொடர்ந்து வந்த இரண்டாம் உலகப் போரில் அயர்லாந்துக் குடியரசு பிரித் தானியாவை ஆதரித்தது. ஆனால் 1921 ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம் வட அயர் லாந்துக்குள் தனித்துவிடப்பட்ட ஐரிஸ் கத்தோ லிக்கர்களை படிப்படியாக அனைவரும் மறந்து விட்டனர். IRA அமைப்பும் உருவிழந்துபோனது.

**வடஅயர்லாந்தில் நடந்த இன ஒதுக்கல்.**

1921 ஆம் ஆண்டு உடன்படிக்கை யின் பின்னர் வட அயர்லாந்தில் வேறுபட்ட உணர்வுகளையும் அரசியற் கோட்பாடுகளையு முடைய பிரிவினர் உருவாகத் தொடங்கினர். இப்பிரிவினரை தெளிவாக வேறுபடுத்திப் பார்ப்பதன் மூலம் வட அயர்லாந்தின் தற்போதைய நிலையை இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

**அ) குடியரசு வாதிகள் (Republicans)**

பிரிக்கப்பட்ட அயர்லாந்து தாய் நிலம் மீண்டும் ஒன்றாக்கப்பட்டு இணைந்த ஐரிஸ் குடியரசு உருவாகவேண்டுமென்பதில் பிடிவாத மாக உள்ளவர்கள். இவர்கள் ஐரிஸ் சுதேசி களாகவும், கத்தோலிக்கர்களாகவும் உள்ளனர். வட அயர்லாந்தில் ஆங்கிலம் பொது மொழி யாக உள்ளபோதிலும் இப்போதும் தமது வீதிகளின் பெயர்ப்பலகைகளிலும், வீடுகளின் பெயர்ப் பலகைகளிலும் தனியே ஐரிஸ் (IRISH) மொழிப்பயன்பாட்டை பேணி



கத்தோலிக்க-புரட்டஸ்தாந்து குடியிருப்புகளை பிரித்து அமைக்கப்பட்டுள்ள சமாதான வேலி.

**ஆ) ஐக்கிய வாதிகள், விசுவாசிகள்**

குடியேற்ற வாசிகளை பெரும்பான் மையாகக் கொண்ட வட அயர்லாந்துப் பகுதி எக்காரணம் கொண்டும் பெருநிலப்பரப்பாக உள்ள அயர்லாந்து குடியரசுடன் இணைக் கப்படக்கூடாது எனவும் இப்பகுதி ஐக்கிய இராச்சியத்துடன் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமெனவும் தம்மை முடிக்கு விசுவாச மான குடிமக்களெனவும் கருதி வருகின்றனர். இவர்களின் குடியிருப்புகளின் எல்லைப் பகுதிகளில் ஐக்கிய இராச்சியத்தின் (UNITED KINGDOM) கொடியில் உள்ள சிவப்பு,நீலம், வெள்ளைநிற வர்ணம் பூசப்பட்டுள்ளது.

இங்கு கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் குடியரசுவாதிகளான கத்தோலிக்கர்களும், முடிக்கு விசுவாசமான புரட்டஸ்தாந்தினரும் தமக்கென தொடர்ச்சியான நிலப்பகுதியில் வசிக்காமல் அடுத்தடுத்த எல்லைகளில் கலந்து வசிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

(மிகுதி அடுத்தவாரம்)

## கிளிநொச்சியின் பேராளர் மாநாடு

# வேண்டும்... வேண்டும் சுதந்திரம் வேண்டும்...

### மக்களின் உணர்வலைகள்


**01.09.2005 மாலை மூன்று மணி கிளிநொச்சி பொது மைதானம் உணர்வலைகள் கொண்ட மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது. 27.07.2005 இன் தமிழ்த் தேசிய எழுச்சிக்கான வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியிலும் எழுச்சிப் பிரகடனத்தை மேற்கொள்ளும் வகையில் கிளிநொச்சி வாழ் மக்கள் சர்வதேசச் சமூகத்தை நோக்கி தமது நியாயமான கோரிக்கைகளை பின்வருமாறு உணர்வுபூர்வமாக பிரகடனம் செய்துகொண்டிருந்தனர். அதாவது,**

**"எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை,கடலைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும்,**

**எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும் அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்ட படியே உள்ளோம் என்பதையும் இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை, தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம்"**

**அத்தோடு பெரும் மக்கள் சமுத்திரமாகக் கூடியிருந்த மக்கள் "வேண்டும் வேண்டும் சுதந்திரம் வேண்டும்" எனும் கோஷம் விண்ணை அதிரவைக்கும் அளவுக்கு இருந்ததை பார்க்கும்போது தமிழ் மக்கள் தாங்கள் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு எந்தளவு ஏக்கத்துடன் உள்ளார்கள் என்பது நேற்றுமாலை கிளிநொச்சி பொது மைதானத்திற்கு வந்திருந்தால் புரிந்திருக்கும். இந்நிலையில்தான் நாம் தேசிய எழுச்சி பிரகடனச் செயலணி உறுப்பினர்களையும் மக்களையும் சந்தித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்டபோது,**

தி.பிரபாகரன்,
தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன செயலணி தலைவர்.



*தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர்.*

இன்று நடைபெறுகின்ற இவ் எழுச்சிப் பிரகடனமானது தமிழ் மக்களின் நியாயப்பாட்டையும், விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்கின்ற நிகழ்வாக தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு அமைகின்றது. நீண்ட காலமாக சிறிலங்கா பேரினவாத அரசு தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பிலும் விடுதலை தொடர்பிலும் இழுத்தடிப்புச் செய்தே வந்திருக்கின்றது. அத்தோடு இந்த மூன்றரை ஆண்டு சமாதானத்திலும் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் தமிழ் மக்களுக்கு எந்தவித பயனும் ஏற்படவில்லை. எனவே எமது தாயகத்தில் தமிழ் தேசிய இனம் தன்னாட்சி அதிகாரத்தோடு வாழ விரும்புகின்றது. அதற்குரிய அங்கீகாரங்களையும் அழுத்தங்களையும், சூழ்நிலைகளையும் சர்வதேச சமூகம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நாங்கள் இந்த சந்தர்ப்பத்திலே சர்வதேச சமூகத்திடம் கோரியிருக்கின்றோம்.

எமது நியாயமான கோரிக்கைக்கு மதிப்பளிக்காது சிறிலங்கா அரசு மீண்டும் தனது வழமையான செயற்பாடுகளை காட்டினால் தமிழ் மக்கள் தங்களுடைய தமிழீழத் தேசியத் தலைவருக்கு பின்னால் அணிதிரண்டு களத்தில் நின்று போராடுவார்கள்.

எனவே எமது போராட்டங்களின் நியாயப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதுவிட்டால் தமிழ் மக்களின் போராட்டம் தங்களுக்கென ஒரு தனியரசு உருவாகும் வரை தொடரும்.

அ.வேழமாலிகிதன்,
செயலாளர், தமிழ்த் தேசிய எழுச்சி செயலணி.



*தமிழ் மக்கள் சிங்கள தேசத்துடன் சேர்ந்து வாழ முடியாது.*

கடந்த மூன்றரை ஆண்டு சமாதான காலத்தில் ஏற்பட்ட தோல்விகள், தாமதங்கள், மற்றும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலேயே தமிழ் மக்களின் உரிமைகள் கொச்சைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் என்பவையே தமிழ் மக்களை இச் சமாதான நடவடிக்கைகள் மீது நம்பிக்கை இழக்கச் செய்தது.

என்றாலும் கூட தமிழ் மக்களின் தர்மத்தனமும் நீதியும் இன்றும் எங்களோடு இருக்கின்றது என்பதனை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துகின்ற வகையிலேயே உலகம் எதிர்பார்க்கின்ற அதியுயர் சனநாயக வழிமுறையான மக்கள் எழுச்சி நிகழ்வு ஊடாக தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களை உறுதியாகவும் இறுதியாகவும் சர்வதேசத்திற்கு சொல்வதற்கான கடப்பாட்டை நாங்கள் உணர்ந்து இவ் எழுச்சிப் பிரகடனத்தை மேற்கொண்டிருக்கின்றோம்.

மேலும் நாங்கள் எதிர்பார்த்ததைவிட கிராமங்கள், நகரங்கள் என்றில்லாமல் பேரெழுச்சி ஒன்று எல்லாப் புறங்களிலும் நிகழ்ந்திருக்கின்றது.

கடந்த இருபத்தேழாம் திகதி வவுனியா பிரகடனத்தில் தமிழ் பேசும் மக்கள் எவ்வாறு சிங்கள தேசத்துடன் சேர்ந்து வாழ முடியாது என்பது குறித்து தெளிவான புள்ளி விபரங்களோடும் ஆதாரங்களோடும் சர்வதேச சமூகத்திற்கு தங்களுடைய பிரகடனத்தை செய்திருக்கின்றார்கள்.

கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, வாழ்வுரிமை ரீதியாக, மொழியுரிமை ரீதியாக போன்ற எல்லா நிலைகளிலும் தமிழ் மக்கள் சிங்கள தேசத்துடன் சேர்ந்து வாழ முடியாது என்பதனை நியாய பூர்வமாக சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூறியிருக்கின்றோம். அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டம் தோறும் இவ் எழுச்சிப் பிரகடனம் நடக்கயிருக்கின்றது. இந்நிலையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கும் என நாம் நம்புகின்றோம்.

உண்மையிலேயே விடுதலைப்புலிகளின் தலைமையை ஏற்றிருக்கும் தமிழ் மக்களின் பின்னாலே ஆயுத இராணுவ பலத்திற்கு அப்பால் சகல தமிழ் மக்களும் ஒன்று திரண்டு நிற்கின்ற மக்கள் பலமும் இருக்கிறது என்கின்ற செய்தியை சர்வதேச சமூகத்திற்குக் கூறும் செய்தியாகவே இது இருக்கும்.

அ. அமிர்தலிங்கம்.



*எமது நிம்மதியான வாழ்வுக்கு இராணுவம் வெளியேற வேண்டும்.*

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லாப் பிரதேச மக்களும் இங்கு சங்கமித்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகள், எதிர்பார்ப்புகள் நிறைவேறாததையிட்டு மிகுந்த ஏமாற்றமும் ஆத்திரமும் உள்ளவர்களாக தமிழ் மக்கள் காணப்படுகின்றார்கள். ஆதலால் எங்களுடைய தேசம் எங்களுக்குத் தேவை. எங்களுடைய தேசத்தில் நாங்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்ற உணர்வுள்ளவர்களாக தமிழ் மக்கள் காணப்படுகிறார்கள். எங்களுடைய நிம்மதியான வாழ்வுக்கு எமது தேசத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் பலத்த இடஞ்சலாக இருக்கின்றது. அத்தோடு அச்சுறுத்தலாகவும் இருக்கின்றது.ஆதலால் இராணுவமே எங்கள் தேசத்தை விட்டு வெளியேறு என்ற உணர்வோடுதான் மக்கள் இங்கு காணப்படுகின்றனர்.

அ.சத்தியானந்தன்



*சர்வதேச சமூகத்தின் கதவுகள் திறக்கவேண்டும்.*

இந்நிகழ்வானது ஒரு சாதாரண நிகழ்வல்ல. இன்றிருக்கின்ற சிறிலங்கா அரசியல் நிலைமைகள், சர்வதேச அரசியல் நிலைமைகள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து முழுக்க முழுக்க மக்களால் கொண்டு நடத்தப்படுகின்ற ஒரு எழுச்சிப் போராட்டம்.

சிறிலங்காவின் அரசியல் தலைமைகள் இன்று வெட்டவெளிச்சமாக தமது தலைமைத்துவ போட்டிகளிலும், அதிகாரப் போட்டிகளிலும் ஆக்ரோசமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் சிந்திப்பதாக இல்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுடைய தலைவிதியை தாங்களே தீர்மானிக்க வேண்டும் எனக் கோரியும், சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சிக் கதவினை தட்டித் திறக்கும் முகமாக சர்வதேச சமூகத்திற்கு செய்தி கூறும் முகமாகவே இந்த எழுச்சி மாநாடு இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது.

எனவே தமிழர்களின் தாயக இலட்சியக் கனவு நிறைவேறும் வரை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர் நடவடிக்கையாகவே இடம்பெற்றுக்கொண்டிருக்கும்.

சி.சர்மிளன்
மாணவன், கிளிநொச்சி மத்திய கல்லூரி.



*தமிழ் மாணவர்கள் தொடர்பில் சிங்கள அரசு பாராமுகமாகவே இருக்கிறது.*

தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்தனர். இவ்வாறு அடக்கப்பட்ட மக்களின் எழுச்சிதான் இது. சிறிலங்கா அரசினால் மாணவர்களாகிய நாமும் பல்வேறு வழிகளில் நசுக்கப்பட்டோம். அதில் ஒன்றுதான் தரப்படுத்தல். இதைவிட இதர வசதிகளிலும் தமிழ் மாணவர்கள் பாராமுகமாகவே சிங்கள அரசினால் நடத்தப்பட்டு வருகின்றோம்.

இன்றும் கூட தமிழர் தாயகத்தில் உள்ள ஒரு பாடசாலையினையும் தென்னிலங்கையில் உள்ள ஒரு பாடசாலையினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும் சிங்கள அரசின் பாராமுக செயற்பாடு. சிங்கள அரசு ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பில் இத்தகைய போக்கினைத் தான் கடைப்பிடித்துவந்தது. அதற்கெதிராகத் தான் மக்கள் எழுச்சி கொண்டு நிற்கின்றார்கள்.

**சுழியன்**

நா.நிரோஜன்.
வன்னி தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.



*சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.*

பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. நாங்கள் எவ்வளவு காலத்திற்குத்தான் சிங்கள அரசின் அடாவடித்தனங்களை பொறுத்துக் கொண்டிருப்பது. சிறிலங்கா அரசால் தமிழ் மக்களாகிய நாங்கள் எவ்வளவு துன்பங்களை அனுபவிச்சனாங்கள். எனவேதான் இனியும் நாங்கள் இப்படியான துன்பங்களை அனுபவிக்கமுடியாது. ஆதலால்தான் சர்வதேச சமூகத்தை கேட்கிறோம் நாங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு அல்லது பிரிந்து செல்வதற்கு எமது நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று.

# காரசாரம்

# சுபீட்சத்துக்கு இது வழியல்ல..!

1957 இல் வன்னிப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட இந்திய கலைஞர் ஒருவர் இப்படிக் கூறியிருந்தார்.

" நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது இடையே ஒரு ஊரில் நிகழ்ச்சி செய்தேன். அங்கே மலைகள் கிடையாது, கடலும் கிடையாது. ஆனாலும் பச்சைப்பசேலெனக் காட்சி யளித்தது அந்தப்பிரதேசம், அப்பகுதி யெங்கும் பயிர் பச்சைகள் நிறைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் நீரோடியது என்றும், அந்த ஊரின் பெயர் மறந்துபோனது "குளக்காடு" அவ்வளவுதான் என்றும் கூறினார்.வன்னி, குளக்காடு பெருங்குளங் களை அடுத்து சிறு குளங்கள் நிரம்ப உண்டு. வவுனியாவில் மட்டும் இப்படி அறு நூறு குளங்களுக்கும் சற்று அதிகமாகவே உண்டு. ஒரு குளத்துக்கு பல பங்காளிகள் இருப்பர். இவர்கள்தான் இக்குளத்தின் முற்று முழுதான பயனாளிகள்.

எனது பாட்டன் காலத்திலிருந்து நான் அவதானித்து வந்த ஒரு நடைமுறை இது. குளம் சார்ந்த, திருத்தவேலைகள் வரும்போது ஒப்பந்தகாரர் தன்னிச்சையாக யாரையாவது போட்டு வேலை செய்ய முடியாது (அப்போது யந்திரங்கள் இல்லை) குளம் சார்ந்த கிராமவாசிகளே செய்ய வேண்டும். அது அரசாங்க நடவடிக்கையும் கூட. ஒப்பந்தகாரர் ஊழல் செய்ய முடியாது என்பதுடன் எமது குளம் என்ற நோக்குடைய மக்கள் சிறப்பாக வேலை செய்வார்கள்.

குளத்தில் நீர் வந்து விவசாயம் தொடங்கும்போது ஒரு கமவிதானை போடப்பட்டு, நீர்ப்பங்கீடு சரிவரப் பேணப் படும். துலுசுத்திறப்பைக் கம விதானை கொண்டிருப்பார். நீர்ப்பாசனச் சண்டைகள் வருவதில்லை. அறுவடை முடித்து சூடு வைப்பர். மாசி முதல் பங்குனி வரை அறுவடைக்காற்று வைகாசி பதினைந்து நாள் கடந்த பின்பே தொடங்கும். அப்போது தான் நெல் தூற்றல் முடியும். எனவே அதுவரை சூட்டைச் சுற்றி வேலி போட்டு காவல் இருப்பர். ஆனி, ஆடி சூடடிப்பு நடக்கும். குளங்கள் வற்றி மோட்டைகளாக மாறத்தொடங்கும்.

இந் நிலையில் இதுவரை சுதந்திரமாக வலை வீசிய கிராம மீனவர்கள் தூண்டில் போடலாம். அல்லது கைகளால் பதுங்கிப்பிடிக்கும் முறையில் மீன் பிடிக்க லாம். ஏனெனில் அடித்துக் கலக்கி மீன்பிடித்தால் கால் நடைகளுக்கு குடிநீர் இல்லாமல் போய்விடும் அதுவும் கிராமத்தைப்பாதிக்கும். இதுதவிர முன்னர் நீர் நிறைந்திருந்தபோதும் பின்னரும் மீன் பிடிப்பவர் தனது மீனை அந்தக் கிராம வீதிகளில் திரிந்தே விற்கவேண்டும். அக்கிராமத்திலிருந்து மீதமானதை மட்டுமே அடுத்த ஊர்களுக்கு எடுத்துச்செல்லலாம். அப்படி மீனைப்பிடித்து வேற கிராமத்தில் விற்றால் தவறல்ல.

ஆனால் குளக்கிராமத்தின் சுயதேவை நிறைவேற்றப்படவேண்டும். இது தமிழ், சிங்கள, முஸ்லிம் கிராமங்கள் அனைத்திலும் பேணப்பட்ட விடயம், எழுதாத சட்டம். அதற்கும் மேல் குளம் வற்றி சிறுசிறு குண்டுகளாக வற்றினால், பயனாளிகள் தத்தமக்கென கரப்புத் தயாரித்து எல்லோருங்கூடி ஒரு நாளில் கரப்புக்குத்துவர்.

பெண்களும் தங்கள் பங்குக்கு சேலையால் வாரி மீன்பிடிப்பர். கரப்பில் விரால், வாளை, கொக்கச்சான், மயறி, கணையன், பொட்டியன், பனையேறி என்பன சிக்கும். அவை கோர்வையிடப்பட்டு சம அளவில் பகிரப்படும்.

பெண்களிடம் நரிக்கெழுத்தி, கெண்டை, வெள்ளிக்கெண்டை, அயிரை என்பன சிக்கும். அதுவும் பங்குதான். கறி, பொரியல், தீயல், குழம்பு எனப் போக மீதி கருவாடு போடப்பட்டு ஒரு சாக்குப் பையில் போட்டு சகல அடுக்களைகளிலும் அடுப்புக்கு நேரே போட்டிருக்கும் பரணில் போடப்படும். வேட்டை விலங்குகளிலும் இதே காட்டெல்லை நடைமுறையி லிருக்கும்.

இறைச்சி மீன் கிடைக்காத நிறை குளக்காலத்திலும் மீனுணவு இறைச்சி, வற்றல் இருக்கும். இதேபோன்று தேனும் தானியங்களும் இருக்கும். வன்னியின் கால் நடைகளிலிருந்து பெறப்படும் பாலும் தயிரும் நெய்யும் கூட ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும். வன்னியில் வைத்தியம் கூட சித்தவைத்தியம்தான். மக்கள் மலையைக் கிள்ளி உடைப்பில் போடும் வலிமை யுடனிருந்தார்கள்.

இன்றும் இதே குளங்களும், இதே காடுகளும், இதே மீனும் இன்னும் அதிக நவீன ரகங்களும் உண்டு. நான் முன்னர் குறித்த மீனினங்களில் யப்பான் மீன் இல்லை என்பதை கவனியுங்கள். 1956 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கை அடுத்து நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் நவீன இனங்களாக நன்னீர் மீன் வளர்ப்பை பெருக்கவுமென யப்பானியர்களால் கொண்டு வந்து குளங்களில் விடப்பட்ட "திலாப்பியா" மீன்தான் யப்பான். நுளம்புக் குடம்பிகளை உணவாகக் கொள்வதுடன் பெருமளவு இனப்பெருக்கச் சக்தியும் கொண்டது யப்பான் மீன். கோதுமை மா வந்த காலத்தில் எப்படி எங்கள் மக்கள் ஏற்கவில்லையோ? அதேபோன்று யப்பான் மீனையும் ஏற்கவில்லை. இப்போது கோதுமைமா இல்லாமலும் எம்மக்களால் வாழமுடியாது,

யப்பான் மீன் இல்லாமலும் வாழ முடியாது. அடுத்தபடியாக ஏழைக்கும் உண்ணக் கூடிய அளவிலான அதன்விலை, அடுத்தது தாமே தூண்டில் போட்டோ குளவானில் சேலைபிடித்து வாரியோ, கறிக்குத் தேவையானதைப் பிடிக்க முடிந்ததும், மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

இன்று நிலை தலைகீழாக மாறி விட்டது. பெருமளவு நன்நீர் மீன்களைத் தந்துகொண்டிருந்த முள்ளிக்குளம், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள், கரும் புள்ளியான், அக்கராயன், இரணைமடு, முத்துஐயன்கட்டு, கூழாமுறிப்பு, மடுக்குளம் என்பன இன்று சுயதேவையைப் பூர்த்தி செய்யவில்லை.

அண்மையில் மல்லாவிப் பிரதேசத்தில் ஒரு குளத்தில் படகேறி வலை வீசுவதைக் கண்டேன். சரி ஒருகறிக்கு மீன் வாங்குவதற்காகக் காத்துநின்றேன். மீன் கரைக்கு வந்தது. ஆனால் அதை விற்க முடியாது என்று அதைப் பிடித்தவர் கூறிவிட்டார். உடனேயே ஒரு மீனேற்றும் வாகனம் வந்தது எல்லாவற்றையம் அள்ளிப் போட்டுக் கொண்டு போய்விட்டது. ஏன்னையே பார்த்துக்கொண்டு குளத்தில் குளித்துக் கொண்டிருந்த சிலர் சிரித்தார்கள். "நாங்கள் ஊர்ப்பிறந்தனாங்கள் எங்களுக்கே மீன் கிடைக்குதில்லை, எல்லாம் நேரந்தான்" என்றார்கள்.

ஏன் ஏன் இப்பிடி நடக்கிறது. ஒரு குடும்பமாக இருந்தால் கூட உழைக்க வேண்டும். சேர்க்கவேண்டும்தான். அது குடும்பத்திலுள்ளவர்களைப் பட்டினி போட்டதாக அமையக்கூடாது. பெருமளவு சனத்தொகை கிராமங்களில்தான் இருக் கிறது. பெருவாரியான உற்பத்திகளும் கிராமங்களில்தான் இருக்கிறது. ஆனால் தமது சொந்தக் கிராம உற்பத்தியை அவர்கள் நுகர்ச்சி செய்கிறார்களா என்றால் இல்லை. இதைவிட அந்த மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படத்தான் செய்கிறார்கள். பரிசோதிக்கும் வைத்தியர்கள் என்னவோ சத்துணவைத்தான் சிபார்சு செய்கிறார்கள்.



சத்தான உணவு என்றால் உயர்ரக பால்மா, போத்தலில் அடைத்து வரும் "டொனிக்'குகள், மாத்திரைகள் என்ற கருத்தே நிலவி வருகிறது. ஒரு போத்தல் தண்ணீரின் விலை முப்பத்தைந்து ரூபா வாக இருந்தாலும் ஒரு போத்தல் பாலின் விலை வன்னியில் பன்னிரெண்டு முதல் பதினைந்து வரைதான். மக்களின் பால் உற்பத்தியை ஊக்குவிக்க என்ன நடந்திருக்கிறது. நல்ல இன பாற் பசுக்கள் வைத்திருப்போரை விரல்விட்டு எண்ணி விடலாம். அவர்களும் பன்னிரண்டு ரூபா பால் விலையில் எப்படி மாட்டை பராமரிக்க முடியும். லக்ஸ்பிறே, அங்கர் போன்ற அந்நிய உற்பத்திகளை என்னவிலை கொடுத்தும் வாங்கத் தயாராக உள்ள மைக்கு போதிய பால் இல்லாமையே காரணம். பாலைக் கறப்பதற்குக்கூட எம்மக்கள் அக்கறை காட்டவில்லை. காரணம் அதற்கான பெறுமதிதான். அங்கீகரிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போர் சங்கம் ஒரு லீட்டர் பாலை பன்னிரண்டு ரூபாவுக்கே கொள்வனவு செய்கிறதாம்.

என்ன கொடுமை இனிக்கிராம வாசிகள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளமுடியாத அளவுக்கு இயற்கை அவர்களிற்கு அளித்த கொடைகளே இழக்கப்படுகின்றன. படிப்படியாக அவர்கள் பட்டினக் கரைகளுக்கு, ரோட்டுக்கு மண்பரவவும் சந்தைக் கூலியாகவும் மாறி வர கிராமத்து நிலங்களில் பற்றைகள் வளர ஆரம்பித்துள்ளன. தவிரவும் குளக்கரை களில் அமைந்துள்ள இயற்கையாகவே மண்ணரிப்பைத் தடைசெய்து நிற்கும் பாறைகள் கூட உடைந்து ஏற்றுமதியா கின்றன.

மண், மணல், கல், மீன், நெல், பால், முட்டை, இறைச்சி இதெல்லாம் எங்களுக்கு வெளியிலிருந்து வருகின்றன. இவையெல்லாம் வெளியிலும் போகின்றன. எது எப்படிப் போனாலும் கிராமங்களும் கிராம மக்களும் பாதுகாக்கப்படாத போது நாம் அழிவை நோக்கித்தான் போவோம். ஒரு மலரப்போகும் சுபீட்சத்துக்கு இது வழியுல்ல.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

காடு வாவாண்ணுது. வீடு போபோண்ணுது. இப்பதானல்லோ பேச்சுவார்த்தைக்கு காலங்குறிக்க வெளிக்கிடுகினம். ம்... அப்பேக்கை ஒரு பாட்டு வந்தது. ஞாபகம் வருதோ ஞாபகம் வருதோ... ஞாபகம் வருதோ... முதல் முதலாக பதவிக்கு வந்ததும் ஹெலிகப்டரொண்டு யாழில் இறங்கியதும்... சரி விடுங்கோ அது தொண்ணூத்தி நாலில மறந்திருப்பியள். அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததோ... ஏனைன் வீதியைப் பிடிச்சு... அதில காரேறிப் பயணம் செய்து யாழ்ப்பாணம் போறதெண்டு வைகாசிமாசம் அட்டமித்திதி செவ்வாய்க்கிழமை பதின்மூணாந் திகதி ஜெயசிக்குறுப் பயணத்தையும் தொடங்கி... பதினெட்டு மாசமா உன்னி உன்னி மண்ணத் திண்டு, ஓயாத அலை மூண்டு சுனாமியடிச்ச மாதிரி சுறுட்டி வீசிவிட்டதும்.

எல்லாம் நினைவிருந்தும், எல்லாம் தெரிந்திருந்தும் அவரே தந்திரங்களின் உறைவிடமாகி, தன்ர வீட்டோப் பவரைக்காட்டி எல்லாத்தையுங் கவுட்டுக்கொட்டினதும் ஒரு காலம். என்னவோ சித்தர் ஒருவர் பாடினாரே-ஆடி அடங்கும் வாழ்க்கையடா! ஆறடி நிலமே சொந்தமடா எண்டு. கர்ணனுக்கு பரசுராமர் சாபங்குடுத்தமாதிரி... கடைசிக் காலத்தில உனக்கு எதுகுங்கைகுடுக்காது எண்டு ஆர்போட்ட சாபம். கண்ணுக்குக் கண்ணாயிருந்த கதிர்காமர் போனார். எனக்கு முன்னாலதான் சத்தியப்பிரமாணஞ் செய்தவர் எண்டு வைப்பும் பொருளுமாச் சாட்சி சொன்ன சரத் (என்) சில்வா மாறியிற்றாரே. இது எவ்வளவோ வேதனை.

தனக்குத்தானே நீதிபதியா இருப்பார் எண்ட நம்பிக்கையிலதானே ஒரு குற்றவாளியாப்பிடிபட்ட மாமாவைப் பற்றி ஒரு முடிவும் எடுக்காமல் போட்டது போட்டபடி விட்டுட்டன். இன்னும், இருந்த காலத்துக்குள்ள என்னை ஆரும் முந்தக்கூடாதெண்ட நல்ல எண்ணத்தில, ஆரையும் பழக்கவுமில்லை. இத்தியாதி எண்ணங்களுக்க பொடிச்சி பேச்சு வார்த்தைய... அதுதான் பேச்சுவார்த்தை யத் துவங்கப் போறாவாம். பழைய குருடி கதவைத்திற வடியெண்டு ஆமியும், பொலிசுமா அசந்துபோன தமிழரட்ட ஐ.சீ கேட்டுப் பைய நிரப்பத் துவங்கிற்றினம். இந்த நேரம், காடு கூப்புடுது. நாடு துரத்துது. "பேச்சுவார்த்தைக் காறி பொய்மேடையில் வாறாஆடி" இல்லை... தெரியாமத் தான் கேக்கிறன் ஒருக்காப் பேசுறதுதான் எண்டாலும், ஒரு தடவை பேசிப்போட்டு மறுபடி பேச மாசக்கணக்காத் தவணை போடுவினம். இவையட கதைக்கு ஒரு உப்புப்புளி இருக்கோ.

இன்னும் மூண்டு மாசத்துக்க வீட்ட போற சனாதிபதி பொதுக்கட்டமைப்பக்கூட விடாத குழுவோட கூடி பேசப் போறாவாம். எது புலியோட பேசப்போறாவாம். எதைப் பற்றிப் பேசப்போறா. சுதந்திரம் கிடைக்கிறதுக்கு பதி னெட்டு வருசத்துக்கு முதலே துவங்கின இனவாதத்தை, மாறி மாறிக் கீழவிடாமத் தூக்கிக்கொண்டு வந்து இருக்கிற சந்ததியட்டக் குடுத்திருக்கிற பெருமையும் இவயளுக்குத் தான். என்னவோ-முற்றுங் கசந்ததெண்டு பற்றறுத்து வந்தவையள் ஜாதிகஹெல உறுமயவில நிண்டு சண்டைக்குப் போங்கோ சண்டைக்குப் போங்கோ எண்டு பின்னால தள்ளுகினமே, இவையளாரும் யுத்த முனைக்குப் போகத் தயாரா... இல்லை ஆட்டுத்தாடிய ஆட்டி ஆட்டி புலியள மடக்க சேதி சொல்லுற கட்சி எழுவத்தொண்டில ஆயுதமேந்திப் போராடின நேரம் இவர் எங்க கிடந்தவர். இவற்ற தோழர்கள் எல்லாம் தூக்கில தொங்க, இவர் பிளேனில தொங்கி ஓடினவர்தானே.

சனம் யோசிக்கத்தெரியாம வாக்களிச்சுப் போட்டு-நல்லாக் கஷ்ரப்படப்போறமெண்டு தெரியாமயே இருக்குங்கள். இப்பென்ன யுத்தநிறுத்தம் மட்டுந்தான் மூண்டுவரியமாக் கண்ட மிச்சம். அதுக்கையும் அம்மை யாற்ற தனியாட்சி துவங்கின பிறகு நடந்த படுகொலை யளுக்கு என்ன கணக்கு. வழியில தேங்காய எடுத்து தெருவில் பிள்ளையாருக்குடைச்சமாதிரி-எங்க எதைக் கண்டாலும் புலியள்தான் புலியள்தான் புலியளைத்தவிர வேறில்லை எண்டொரு புரளி கிழப்பல். என்ன எல்லாந் தெரிஞ்ச சர்வதேசத்துக்க புலியளப் பேச்சுவார்த்தைக்கு கூப்பிட்டா இவயட சாயம் வெளுத்துப்போயிருமாம். உள்நாட்டுக்க பேசவாம். என்னடாயிது.

அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பாபின்ன அரச கட்டில்ல மீசையோட இருந்தா சித்தப்பா. மீசையில்லாம இருந்தா(அப்பிடி ஆரும் இனி வருவினமோ?) அத்தை-எல்லாம் ஒரு குட்டையில ஊறின மட்டையள்தானே. இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கு. அதுக்குள்ள அரசசிலவில பாக்கிற நாடெல்லாம் பார்த்துப்போடவேணும். அதுதான் இப்ப முக்கியம்.






# எதிர்முகங்கள்

" கடவுள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே மூளையைக் கொடுத்திருக்கிறான். ஆனால் நான்தான் இரவல் மூளையில செயற்பட்டுட்டன்" மயூரதன் தனக்குள்ளேயே வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். கையிலே விதுரன் கொடுத்து விட்டுப் போன கடிதம் கசங்கிக்கொண்டிருக்கின்றது. நான் சுயாத்தாவை விரும்பினது தப்பில்லை. ஆனால் அவள் தன்னுடைய நிலைப்பாட்டைச் சொல்லேக்க நான் ஏற்றிருக்கவேணும் அருமையான ஒரு நட்பைத் தவற விட்டுட்டனே... பலவாறாக மயூரதன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது அந்தப் பல்கலைக் கழகம். "எத்தனை அறிஞர்களை உருவாக்கினேன்" என்ற திமிருடன் நிமிர்ந்து நிற்கின்றது. பாதையின் இருமருங்கிலும் வானைத் தொட நினைக்கும் அசோகா மரங்கள் மனிதரின் சிந்தனைகளும் மேல்நோக்கி இருக்க வேண்டும். என்ற சிந்தனையை ஊட்டுவதுபோல் அமைந்திருக்கின்றன. பச்சைக்கம்பளம் விரித்தது போல் விரிந்து கிடக்கின்றது மைதானம். அது மனித மனங்கள் அகலமாக இருக்கத் தூண்டும்.

மயூரதன் விரிவுரை வகுப்புக்காக வந்திருக்கின்றான். அவன் முகாமைத்துவ கற்கைநெறியில் இரண்டாம் வருட மாணவன். மயூரதன் எடுப்பான தோற்றம், பணிவு குடியிருக்கும் அழகிய வதனம், பாத்தவுடனேயே பண்பான குடும்பத்தில் பிறந்தவன் என்பது புலப்படும். அவனது சக பிரிவு மாணவிதான் சுயாத்தா எளிமையுடன் கூடிய அழகு. அவள் அதிகம் தன்னை அழகு படுத்திக்கொள்வதில்லை. அதுவே அவளது அழகை மேலும் மெருகூட்டி தனித்துவம் கொடுத்தது.

"வணக்கம் சுயாத்தா" "வணக்கம் வணக்கம்" வாய்நிறையப் புன்னகையுடன் பதில் வணக்கம் கூறினாள் சுயாத்தா. " என்ன அதிசயமாய்க் கிடக்கு இண்டைக்கு நேரத்துக்கே வந்திட்டீர்" "அது இண்டைக்கு எங்கட சேவல் நேரத்துக்கே கூவீற்றுது... அதுதான்..." அதுசரி "அந்த மாதிரியிருக்கு" மயூரதன் கண்களால் அவள் அணிந்திருக்கும் ஆடையைப் பார்த்துக் கூறினான். "எந்த மாதிரியிருக்கு" இது சுயாத்தா "நல்ல வடிவாயிருக்கு" " அப்ப உடுப்புத்தான் வடிவாயிருக்கோ நான் வடிவில்லையோ?...." செல்லமாகச் சிரித்தபடி கூறினாள்.

"சீசி ஆர் சொன்னது ... நீர் அந்த மாதிரி அமாவாசை நிலவு மாதிரி இருக்கிறீர்" " ம்ம் நிப்பாட்டும் பழய பகிடிதான்" "சுயாத்தா நான் சொல்லிவிட்ட அந்த நோட்ஸ் எழுதிக் கொண்டு வந்தனீரே" " இல்லை ராத்திரி நேரத்துக்கே படுத்திட்டன்" "பகிடி விடாமச் சொல்லும்" உண்மையா எழுதேல்லை" "எங்க கொப்பி யத் தாரும் பாப்பம்" அவன் சுயாத்தா கூறியதை நம்பாமல் அவளிடம் இருந்து கொப்பியை பறிக்கிறான். கொப்பியை புரட்டுகின்றான். அவன் எதிர் பார்த்த விடயம் எழுதப்பட்டிருந்தது. நிமிர்ந்து சுயாத்தாவைப் பார்க்கின்றான். அவள் சிரித்தபடியே "ராத்திரிப் படுக்கேக்க பன்னிரண்டு மணி" இருவரும் கதைத்தபடியே விரிவுரை மண்டபத்திற்கு செல்கின்றனர்.

அந்த பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பல்வேறு சூழலில் பழக்கப்பட்டவர்கள் ஒன்று கூடி ஒரே சூழலிற்கு தம்மை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி காலப்போக்கில் ஒரே சூழல் ஒரே பண்பு என்ற அடிப்படையில் மாறி விடுவார்கள். இருந்த போதும் ஒரு சிலர் தமது இயல்பான குணங்களில் இருந்து மாறுவது நாய் வால் நிமிர்ந்த கதைதான். மயூரதன் அந்த இயற்கை அழகு மிகுந்த அழகிய கிராமம் ஒன்றில் பிறந்தவன். வஞ்சகமற்ற கிராமத்து மக்களின் பண்பு அவனில் குடி கொண்டிருப்பது எதுவும் வியப்பில்லை. அவன் பல் கலைக்கழகம் தெரிவாகி வந்து இருப்பதற்கு வீடு தேடித் திரிந்து கொண்டிருக்கையில்தான் விதுரனின் தொடர்பு கிடைத்தது.

விதுரனின் "றூமில்" மயூரதனும் பங்கு போட்டுக் கொண்டான். இடத்தில் மட்டுமல்ல வாடகையிலும் தான். இருவருக்கும் இடையில் பல குண இயல்புகள் வித்தியாசப்பட்டிருந்தாலும் தவிர்க்கமுடியாத கட்டாயத்தில் நண்பர்கள் ஆகிக்கொண்டனர்.

மயூரதன் விரிவுரை மண்டபத்தில் தனிமையை இரசித்தபடி இருக்கின்றான். "ஹலோ என்ன கடும் யோசனை" சிந்தனையை குழப்பினாள் சுயாத்தா. ஒண்டுமில்லை... ஏன் லேற்? "லேற்றா இப்பதானே எட்டு முப்பது... இன்னும் மிச்சப் பிள்ளையளும் வரவில்லை..." "இந்தாரும் ...." ஏதோ பையுடன் நீட்டினாள் சுயாத்தா. "என்ன?" கையை நீட்டியவாறு கேட்டான். "நேற்று அக்காவின் மகளின்ர "பேத்டே" அதுதான் பலகாரம் எடுத்துக்கொண்டு வந்தனான் சாப்பிடும்" சுயாத்தா கூற ஒன்றை எடுத்துக் கடித்துக்கொண்டு "ம்ம்... நீரும் எடுத்துச் சாப்பிடும்" "நான் சாப்பிட்டிட்டன் நீர் எடுத்துக் கொண்டு மிச்சத்தை அங்கால குடும்..." ஏனைய மாணவர்களை கண்களால் காட்டினாள்...

மயூரதன் அயலில் இருந்த விதுரனுக்கும் கொடுத்தான். பாசல் ஒவ்வொரு மாணவர்களின் கைகள்பட்டு கசங்கியது. " நாளைக்கு நாங்கள் உங்கட வீட்ட வருவம் இது மயூரதன். "வரலாமோ...?" இதுவும் அவனே. தாராளமாய் வரலாம்... எத்தின மணிக்கு வருவியள்... " ஏன் நேரம் கேட்கிறீர்..." " நேரத்தைச் சொன்னா அந்த நேரம் ஒரிடமும் போகாம நிக்கத்தான்" "நாளைக்கு பின்னே ரம் மூண்டு மணிக்கு வாறம். நானும் விதுரனும் வருவம்" "சரி ஆங"

சுயாத்தாவின் வீட்டின் முன் மோட்டார் சைக்கிள் ஒன்று "ஹோண்" அடித்தது. எதிர்பார்த்திருந்த சுயாத்தா வெளியில் வந்து பார்த்தபோது "ஸ்பிலிண்டர்" மோட்டார்சயிக்கிளில் விதுரன் ஓட்டியவாறு அமர்ந்திருக்க பின் ஆசனத்தில் மயூரதன் " வங்கோ" வழமையான சிரிப்புடன் வரவேற்றாள். அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தாள்.

தனது தாயாரை அழைத்து அறிமுகம் செய்தாள். தனது தாயாரை அவர்களுடன் கதைக்குமாறு கூறிவிட்டு அவள் தேநீர் ஊற்றிக்கொண்டு வருவதற்காக அடுப்படிக்குச் சென் றாள். சிறிது நேரத்துள் தேநீரும் பிஸ்கற்றும் கொண்டு வந்து கொடுத்து விட்டு "சாப்பிடுங்கோ" சிரித்தவாறே கூறினாள். அழகிய அந்த வீடு அகலமான பல யன்னல்களைக் கொண்டிருந்தது. கண்ணாடியூடாக வரும் ஒளியையும், காற்றையும் வடிகட்டி விட்டபடி யன்னல் திரைச்சீலைகள் அசைந்து கொண்டிருந்தன. திட்ட மிட்ட முறையில் அமைக்கப்பட்டிருக்கும் பூந்தோட்டம் அவ்வீட்டில் வசிப்ப வர்களின் இயற்கை இரசனையை எடுத்துக்காட்டின. புயல் தன்னும் அப்பூந்தோட்டத்தின் ஊடாக உள்ளே புகுந்தால் தென்றலாக மாறிவிடும். "பிஸ்கற்ர... எடுத்துச் சாப்பிடுங்கோ" " அதில நாங்க வெக்கப்படமாட்டம் நீ அல்பத்தை எடுத்துக்கொண்டு வாரும்" கூறினான் மயூரதன். பல அல்பங்கள் இருந்தபோதும் தனது குடும்பப் படங்கள் நிறைந்த அல்பத்தை எடுத்து காண்பித்தாள் "இது தான் அப்பா! இது எங்கட அண்ணா... இவ்வாறு விளக்கியவாறு இருந்தாள் சுயாத்தா. "இது ஆரு" ஒரு படத்தைப் காட்டிக் கேட்டான் மயூரதன். சுயாத்தா "இதுது..." யார் எனச் சொல்வது எனத் தெரியாமல் யோசித்தாள். இது தெரிஞ்ச ஒராள் பெயர் மாறன்" "அவற்ரகால் ஒரு மாதிரி..." ஓம்

**சாரங்கன்**

அவருக்கு பிறப்பிலேயே அப்பிடித் தான். ஒரு கால் கொஞ்சம் சின்னனும் மெல்லீசும்... ஆனா ஆள் நல்லா வேலை செய்வார்" விளக்கினாள் சுயாத்தா.

சரி நாங்க வெளிக்கிடப்போறம். "சரி வாறம் அம்மா போற்று வாறம்" மோட்டார் சைக்கிள் உறுமியவாறு புறப்படுகின்றது. விதுரன் பின்னால் இருக்கும் மயூரதனிடம் "ஏன்ரா போற்றுவாறம் அம்மா எண்டு சொன்னனி போற்று வாறம் மாமி எண்டு சொல்லியிருக்கலாமே" மயூரதன் ஒரு சிரிப்பை மட்டும் உதிர்ந்தான்.

இதுவரை காலமும் நட்பு என்ற வரம்பிற்கு அப்பால் செல்லாமல் இருந்தது மயூரதன் சுயாத்தா உறவு. ஆனால் விதுரன் மயூரதனின் எண்ணத்தில் குளப்பத்தை உண்டு பண்ணி அவ்வுறவை காதல் சாயம் பூசினான். மயூரதனிடம் பலவாறு சுயாத்தா மீது காதல் உணர்வை தூண்டக்கூடிய வாறு பேசுவான். "டேய் அவள் உன்னோட மட்டும் இவ்வளவு நெருக்கமாய் பழகிறாள் எண்டால் என்ன அர்த்தமடா?"

"அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்கிறபடியால்தானடா" இவ்வாறு பலவாறு விதுரன் கூறக் கூற மயூரதனின் மனத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் ஏற்பட்டது. சுயாத்தா தன்னுடன் பழகிய நாட்கள் பழகிய விதம் எல்லாவற்றையும் விதுரன் சொல்வதோடு ஒப்பிட்டுப் பார்த்தான். விதுரன் சொல்வது சரி போலத்தான் கிடக்கு. மயூரதன் மனதிலும் அவள் மீது இருந்த ஆசை நட்பு என்ற வரம்பைத் தாண்டியது.

"நீ பயப்பிடாமல் உன்ரை விருப்பத்தை இண்டைக்குச் சொல்லு" விதுரன் அவசரப்படுத்தினான். மயூரதனிற்கு தத்தளிக்கிறது மனது. அவள் ஆரம்பத்தில் பழகும் போது கூறிய வார்த்தைகள் வந்து இடைக்கிடை தடைபோடும். இருந்தும் இன்று அவளிடம் கேட்டு விடுவதென்றே முடிவெடுத்தான்.

வழமைபோல் சந்தித்துக் கொண்டார்கள். மயூரதனின் முகத்தில் இன்று ஒரு பரபரப்பு. அதை அவள் புரிந்து கொண்டாள். "என்ன இண்டைக்கு ஒரு மாதிரி இருக்கிறீர்" "ஒண்டு மில்லை உம்மோடை ஒரு முக்கியமான விடயம் கதைக்கோணும்." "முக்கியமான விடயமா சொல்லும்..." அவசரப்படுத்தினாள். ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு மயூரதன் "நான் உம்மை..." சொல்லிவிட்டான்.

சுயாத்தாவின் முகம் இறுகுகின்றது. கறுக்கின்றது. இப்படி ஒரு கேள்வியை மயூரதன் கேட்பான் என்று சற்றும் எதிர்பார்க்க வில்லை. மன்னிக்கோணும் மயூரதன் நான் உம்மோட அப்பிடியான எண்ணத்தோட பழகவேயில்லை...

நான் ஆரம்பத்திலேயே சொன்னனான்தானே நாங்கள் இருவரும் எப்பவும் சிநேகிதராய் இருப்பம் எண்டு... அதுக்குப் பிறகுதானே நாங்கள் நல்ல நட்பாய் பழகின நாங்க..." சுயாத்தா கூறிக் கொண்டே இருக்கிறாள். மயூரதன் எதுவும் பேசவில்லை. மன்னிக்க வேணும் மயூரதன். நான் ஏற்கனவே ஒருவரை விரும்பியிருக்கிறன். எனி என்ர மனதில மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இது மயூரதனை உலுப்பியது. "நீர்சொல்லவில்லையே...." "யார் அந்தப் பெடியன்" வினாவினான். "நீங்கள் அண்டைக்கு அல்பத்தில பாத்தியள் "மாறன்" எண்டு ஒரு கால் ஏலாத ஆள் அவர்தான்"

"அவரா..." மயூரதனின் கேள்வியில் உதாசீனம் தெரிந்ததைப் புரிந்து கொண்டு சுயாத்தா "நாங்க இடம்பெயர்ந்து வன்னியில போய் இருக்கிறம் எங்களிட்டை ஒண்டுமே இல்லை சரியான கஸ்ரம். நாங்கள் சாப்பாட்டுக்கே கஸ்ரமான நிலைமை.அப்பேக்க மாறன்தான் எங்களுக்கு உதவி செய்தவர். அவர் நிறைய மரக்கறித் தோட்டம் செய்யிறவர் அவர் சந்தைக்கு புடுங்கிக் கொண்டு போகேக்க அயல் வீடு என்ற முறையில கறிக்கு தாராளமாய் மரக்கறி தந்திட்டுப் போவார். இப்பிடி பல உதவிகள் செய்து தருவார். நாங்க வீடு போடுறத்துக்குத் தடி வெட்டித் தந்து வீடு போடுறத்துக்கும் உதவி செய்தவர். இப்படித் தொடரேக்க தான் எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டது.

நான் தினமும் ஒரே சட்டையோட ரியூசனுக்கு போய்வரேக்க ஒரு கட்டத்தில படிப்பைவிடுவமோ எண்டு யோசிச்சனான். அப்பேக்கயெல்லாம் நம்பிக்கையூட்டி படிக்க வழிசெய்து தந்தவர் அவர்தான். அவர் என்ர வாழ்க்கையில குறுக்கிடாட்டி- இப்பிடி நான் பல்கலைக் கழகத்தையெல்லாம் நினைச்சும் பாத்திருக்கேலா... இப்ப வசதியாய் இருக்கிறம் என்டதுக்காக பழசுகளை மறக்கலாமோ? மயூரதன் நீரே சொல்லும் ..? பெரிய சொற்பொழிவை நிறுத்தினாள் சுயாத்தா. மயூரதனும் " அது சரி" என்ற பாணியில் தலை அசைத்துக்கொண்டே விடை பெற்றான்.

நடந்ததை எல்லாம் விதுரனுக்கு விளக்கினான். "மாட்டன் எண்டு சொன்னவளோ..." அவளுக்கு தான் பெரிய அழகெண்ட திமிரடா "நீயோசிக்காதையடா... அவளை மனம் மாறப் பண்ணுறது என்ர பொறுப்பு... ஒண்டை ஆசைப் பட்டுட்டா அதை அடைஞ்சே தீரோணும்" கர்ச்சித்தான் விதுரன். குறுக்கிட்ட மயூரதன் "இல்லையடா... அவள் ஆரையோ ஏற்கனவே விரும்பி இருக்கிறாளாம்" "டேய் எல்லாப் பெட்டையளும் ஆம்பிளையளை பேய்க்காட்ட உந்த வசனம் தான்ரா பாவிக்கிறவை"... வாதிட்டான் விதுரன்.

இயலாமையைால் "என்னடா செய்யச் சொலுறாய்.." என்றான் மயூரதன். "முதலில உன்னையும் சுயாத்தாவை யும் தொடர்புபடுத்திக் கதையைப் பரப்புவம்... பிறகு அவள் என்னதான் எதிர்ப்புத் தெரிவித்தாலும் விடாது தொடர்பு கொள்ளுவம். ஒரு கட்டத்தில் அவா மனசு மாறுவா மாறாட்டி மாற வைப்பம்...."

இப்போது வெறுவாய் சப்பித் திரிந்த மாணவர்களுக்கு மயூரதன்+சுயாத்தா என்ற அவல் கிடைத்திருக்கின்றது. சுயாத்தாவிற்கு வாழ்த்துச் சொல்வோர், திருமண வீட்டிற்கு கட்டாயம் சொல்ல வேண்டும் என்று விண்ணப்பம் கொடுப்போர், சோடிப் பொருத்தம் பற்றி விமர்சனம் செய்வோர், திருமணத்திற்குப்பிறகு எங்களை மறந்து விடாதேம் என்று அன்பை நிரூபிப்போர் என சுயாத்தாவால் தாங்கமுடியவில்லை.

அவளுக்கு "ஓ"வென்று அழ வேண்டும்போல் இருந்தது. அடக்கிக் கொண்டாள். வீடு புறப்படும் நேரம் அவள் வீதிக்கு வருகின்றாள். வாசலில் மோட்டார் சயிக்கிள் நிற்கின்றது. "ஏறுமன் மயூரதன் கொண்டுபோய் இறக்கி விடுவான்" விதுரன்தான் கேட்டான். அயலில் பல சக மாணவர்கள் விலத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவள் அவர்களை பொருட்படுத்தாதது போல் சென்றுகொண்டிருந்தாள். இது ஒரு நாள் இருநாள் அல்ல வீதியில், சந்தையில் கடைத் தெருவில் அவள் எங்கு செல்கின்றாளோ அங்கெல்லாம் அந்தமோட்டார் சயிக்கிள் பின் தொடரும். வழக்கமான பாதையை மாற்றி வேறு பாதையால் சென்றாலும் மோப்பம் பிடித்து வந்து குறுக்கே நிற்கும். பலர் முன்னிலையில் அவள் கேலி செய்யப்படுவாள். அவளால் தாங்க முடியாது வீட்டில் சென்று விம்மி விம்மி அழத் தொடங்கி விடுவாள். இனியும் பொறுக்க முடியாமல் நடந்ததை எல்லாம் தனது தாயிடமும் அண்ணனிடமும் கூறிவிட்டாள். "இப்பிடியானதுகளோட எல்லாம் ஏன் சிநேகிதம் வைக்கிறனி" சுயாத்தாவைக் கடிந்தான் அவளது அண்ணன். மயூரதன் நல்லவன் அவன்ர "றூம்" சிநேகிதன் விதுரன் தான் அவனையும் கெடுக்கிறான்" அழுதழுதே கூறிமுடித்தாள்.

மறுநாள் "ஹலோ நீரோ விதுரன்" இது சுயாத்தாவின் அண்ணன் "ஓம் நான்தான்" "உம்மட சிநேகிதன் மயூரதன் என்னுடைய தங்கச்சியை விரும்பியிருக்கிறார். ஆனால் தங்கச்சிக்கு விரும்பமில்லை எண்டு சொல்லிப்போட்டா... ஆனால் பிறகும் அவர் றோட்டு வழிய வைச்சு கரைச்சல் குடுக்கிறார்... என்னண்டு சொன்னா நான் காதலுக்கு எதிரானவன் அல்ல ஆனால் உண்மையான காதல் இருவரும் மனதார விரும்பவேணும்.... இது ஒருவர் மட்டும் விரும்பிப்போட்டு மற்றவரை கட்டாயப்படுத்தி விரும்பச் செய்யேலாது... இதை நீர்தான் உம்மடை சிநேகிதனிட்டை எடுத்துச் சொல்லோணும்..." சொல்லி முடித்தார் சுயாத்தாவின் அண்ணன். "நீங்க உங்கட தங்கச்சி எண்டு பாக்கிறீங்க... ஆனால் ஒருவன் ஒருத்தியை நினைச்சுட்டான் என்றால் அதை அடைந்தே தீரவேணும்..." அதை நீங்க தடுக்கக்கூடாது. எதிர்வாதம் செய்தான் விதுரன். "அப்ப தங்கச்சிக்கு விருப்பம் இல்லை எண்டாலும்..." "விரும்பவைப்பம்" விதுரன் சவால்விட்டான். சுயாத்தாவின் அண்ணன் திரும்பினான்.

சில நாட்கள் கழிந்தன "விதுரன் உனக்கு அம்மாட்டை இருந்து கடிதம் வந்திருக்கு" அவசரமாக அழைத்தான் மயூரதன். "ஆர் கொண்ணந்தது" " ஆரோ உங்கட வீட்டுக்கு பக்கத்தில இருக்கிறவராம் தந்திட்டுப்போறார்" இயல்பாகவே கடிதம் என்றால் ஏற்படும் அவசரத்துடன் கடிதத்தை உடைத்தான்.

அன்புள்ள விதுரனுக்கு
அம்மா எழுதிக்கொள்வது நீ ஒருக்கால் இங்கே வந்திட்டுப்போ... என்னவென்றால் உன்ர தங்கச்சி ரீயூசனுக்குப் போகேக்க வரேக்க ஆரோ ஒருத்தன் ஒவ்வொருநாளும் மறிக்கிறானாம்... மறிச்சு அவளை விருப்பம் கேக்கிறானாம்... அவளுக்கு ஆர் எண்டும் தெரியாதாம். அவள் ரியூசனுக்கும் போகேலாமக் கிடக்கு. ஒருக்கா நீ வந்து விசாரிச்சுப்போட்டுப் போ... அவளுக்கு கேக்க ஒருத்தரும் இல்லையெண்டு நினைச்சான் போல... உடனே வரவும் மீதி நேரில்.
இப்படிக்கு
அம்மா.

கடிதத்தை வாசித்துப் பார்க்கும் படி மயூரதனிடம் கொடுத்துவிட்டு வேகமாகப் புறப்பட்டான். எவ்வாறு வந்து சேர்ந்தான் என்று தெரியாமல் அவன் வீடு வந்து சேர்ந்தான். அவனது உதடுகள் கோபத்தால் படபடத்தன. அவனது உடல் ஒருவித வேகம் கொண்டிருந்தது. தங்கையிடம் விபரம் எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டான். அவள் சொன்னது போல் சொன்ன நேரத்துக்கே அவனும் வருகின்றான். "அவர்தான்..." காட்டினாள் தங்கை. " சரி நீ அங்கால போ" என்று கூறிவிட்டு நெருங்கி வரும் அந்த உருவத்தை பார்த்தபடி நின்றான். என்ன ஆச்சரியம் விதுரன் அதிர்ச்சி அடைந்து போனான்... அவனால் பேசுவதற்கு நா எழவில்லை. வெட்கத்தால் முகம் சுருங்கியது. வந்தது யாரும் இல்லை சுயாத்தாவின் அண்ணன் தான்... இருவரும் எதிரெதிரே பார்ப்பதும் வேறு திசை நோக்கிப் பார்ப்பதும் பின் மீண்டும் பார்ப்பதுமாய் இருந்தனரே தவிர எவரும் பேசவில்லை. சுயாத்தாவின் அண்ணன் மௌனத்தைக் கலைத்து "விதுரன் எல்லாரோடையும் உங்களுடைய சகோதரம் மாதிரி நினைச்சு நடந்திட்டீங்கள் எண்டா மற்றவர்களுடைய மனத்தையும் ஆசைகளையும் அவர்கள்படும் வேதனைகளையும் புரிந்துகொள்ளலாம்... அதற்கேற்ற மாதிரி நடந்து கொள்ளலாம். கூறி முடிக்க விதுரன் "ஓம் அண்ணை இனி இப்பிடி நடக்காது... நடந்ததை மன்னிச்சுக் கொள்ளுங்கோ"

மயூரதன் கடிதத்தையும் விதுரனின் செயற்பாட்டையும் ஒப்பிட்டுப்பார்த்து தான் புத்தியை இரவல் கொடுத்து நடந்ததை நினைத்து வெட்கப்பட்டான்.

# மலரின் நாடகம்

வானத்தில்
இரத்தினங்களாய்
விண்மீன்கள்
அரும்பியிருக்க!

நிலவு
முகத்திரையை திறந்து
வேடிக்கை
பார்த்திருக்க!

சாலையோர
பூவரசுகளின் கீழே
இருள்கள்
ஒளிந்திருக்க!

விரைந்த
முகிலினங்கள்
விரைத்தபடி
நின்றிருக்க!

ஆறுகளில்
நதிகள்
அமைதியாக
பாய்ந்து கொண்டிருக்க!

காற்றின் சங்கீதத்தில்
மலர்கள்
மௌன நடனம்
ஆடுகின்றன;
என் மனதைப் பார்த்து!

எங்கிருந்தோ
குயில்கள் கூவுகின்றன
என் உணர்வை
புரிந்து!

கு.பா.தீபச் செல்வன்

# புரிந்து கொள்

நீவென்றுவிட்டதாய்
மார்தட்டிக் கொண்ட உன் கைகளை
கீழே விடுமுன்னே தோற்றுப்போன
பாவப்பட்ட நெஞ்சமே
நான் கேட்காமல்-நீ
தந்து போன பரிசினை
உன் சிம்மாசனத்திலேயே
வைத்திருக்கிறேன்
எடுத்துக் கொள்.
உன் கட்டாயத்தில் குளிப்பதற்கு
நான் ஒன்றும் உன் வீட்டு
நாய்க்குட்டியல்ல....நீ
எறியும் பந்தினை
உன்னிடமே திருப்பித்தரும்
சுவரைப் போலவே நான்
புரிந்து கொள்.
மனங்களைப் புண்படுத்தி
அவர்களின்
கண்ணீர் நதியினில்தான்
உன்னைப்போல சுயநலவாதிகள்
உல்லாசப்படகேறி
ஊர்வலம் போகிறார்கள்.
நீ நடத்துகின்ற திருவிளையாடலில்
பங்கெடுக்க-நீ
ஒன்றும் சிவனுமல்ல
நான் அந்த நக்கீரனுமல்ல.
புரிந்து கொண்டு
இனிமேலாவது திருந்திவிடு.

ஆ.சுதர்சனா



# நம்பிக்கைப் படிகளில் ஏறுங்கள்

பெண்ணே வாழ்க்கை என்ற தீபம் சுடர்விட்டு ஒளிர்வதும் எரியாமல் அணைவதும் உன் கையில்தான் இருக்கின்றது. வாழ்க்கை என்பது கசப்பான காவியமென்று கணக்குப் போடாதே. அது இனிப்பான இலக்கியம். இடையில் வந்துபோகும் இன்னல்களால் சோதனைகள் சொந்தமாகலாம். ஆனால் அதுவல்ல நிரந்தரம்.

எப்போதும் வேதனைப்பள்ளங்களை பார்த்துக் கொண்டிருப்பதைவிட நம்பிக்கைப் படிகளில் ஏற முயற்சிசெய். உனை ஏற்றிவிடுவது படிகளேயன்றி பள்ளங்களல்ல. பெண்களின் கண்கள் அழுவதற்கு மட்டும்தான் என்ற அசிங்கமான இலக்கணத்தை மாற்று. கண்ணீருக்கு பலம் சேர்க்காதே. அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஜெயிப்பதைவிட போராடி தோற்றுப்போவது மேல். வெற்றி வாகைசூடி வீரமுரசு கொட்டி மங்கையர்கள் ஜெயித்துக்காட்டிய வரலாறுகளைப் புரட்டிப்பார்.

எண்ணங்கள் தளர்வில்லாத உறுதியாய் இருக்கட்டும். தீர்மானங்கள் இரும்பாய் இருக்கட்டும். செயற்பாடுகள் அனைத்தும் சீராயிருக்கட்டும். எதையும் முடிவு செய்துவிட்டால் அதை மாற்றாது போராடு. அப்போதுதான் நீங்கள் சாதிக்கலாம். சில பெண்களுக்கு வாழ்க்கை சொர்க்கத்திலல்ல, ரொக்கத்தில் நிச்சயிக்கப்பட்டுவிடும்.

அது கைமாற்றப்பட்டவுடன் சிலவேளை நீங்கள் கைகழுவப்பட்டிருக்கலாம். அப்படியானால் சமூகத்தின் பார்வையில் நீங்கள் சேறு பூசப்பட்டவர்கள் போல் ஆகிவிடுவீர்கள்.

வெட்டிவிடப்பட்ட மொட்டைமரம் எல்லோரும் தள்ளி வைத்த கள்ளிச்செடி போலாகிவிடும். போகட்டுமே தளராதே. வருந்தாதே. எல்லா விளக்குகளும் அணைந்து போனாலும் நிலவு நிச்சயம் இருக்கும் நிமிர்ந்து பார். உங்களைத் தொட்டுத் தூக்கிவிடும் கைகள் தூரப்போய் விட்டாலும் உங்கள் தோள்கள் இருக்கின்றன பெண்ணே. நீங்கள் நிமிர்ந்துகொள்ள இளைப்பாற நிழலைத் தேடுங்கள். ஆனால், சாய்ந்துகொள்ள எந்த மடியையும் தேடவேண்டாம். நீங்கள் நிற்பதற்கு உங்கள் கால்களை மட்டுமே நம்புங்கள்.

ஜெயிக்கவேண்டும் என்ற தைரியம் மட்டுமே உங்களுக்கிருந்தால், வாழ்ந்து காட்டத்தான் வேண்டும் என்ற வைராக்கியம் இருந்தால், அந்த துணிச்சல் நரம்புகளை அறுத்துவீச எவராலும் முடியாது. உங்கள் இலட்சியங்களை பெயர்த்துப்போகவும் எவராலும் முடியாது.


சிதறவிடாமல் நம்பிக்கையை நங்கூரமிட்டு நிறுத்துங்கள். எண்ணங்களை கடிவாளம் இட்டுக் கட்டிப் போடுங்கள். நீங்களாக ஒரு பாதையை வகுத்துக்கொள்ளுங்கள். அது கரடுமுரடான ஒற்றை யடிப் பாதையா னாலும் விழுந்து விழுந்து எழும்புங் கள் அடுத்தவர்களின் பாதை அழகான பளிங்குச் சாலையானாலும் உங்கள் பாதையின் தரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டாம்.

**எப்போதும் வேதனைப் பள்ளங்களை பார்த்துக்கொண் டிருப்பதைவிட நம்பிக்கைப் படி களில் ஏறமுயற்சிசெய்.**

கைகூடும் அதிஷ்டங்களைவிட கைநழுவும் துரதிர்ஷ்டங்கள் வாழ்க்கையில் ஏராளம். அதிஷ்டங்களை நம்பியே அனைவரது வாழ்க்கையும் தோற்றுப்போய் விடுகின்றன. அதனால் முதலில் உங்களை நம்புங்கள். விரைவில் ஜெயித்துவிடுவீர்கள்.

தவறவிட்ட ஒன்றுக்காகவோ, இழந்துவிட்ட ஒன்றுக்காகவோ ஏங்கித் தவிக்காதீர்கள். இனிக் கிடைக்கப் போவது வைரமாய் இருக்கலாம். இழந்ததோ ஒருவேளை கூழாங்கற்களாய்த் தோன்றும். அதனால் உங்கள் வாழ்க்கையில் இழப்புக்களே நிரந்தரமானவை என எண்ணி நொந்து நூலாகிவிடாதீர்கள்.

த.கம்சோ




## நாம் பேசும் ஒவ்வொரு சொல்லிற்கும் ஒவ்வொரு விளைவுகள் உண்டு.

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளிலும் பேசத் தெரிந்த இனம் என்றால் அது மனித இனம் மட்டுமே. பேச்சு என்பது ஒரு சொல்தான். ஆனால் எத்தனை வகை, எத்தனை செயற்பாட்டு வடிவம், இனிமையாக பேசுவதையே அனைவரும் விரும்புவார்கள். ஒரு மனிதனை கோபமூட்டுவதாயினும் சரி அவனை உற்சாகப்படுத்துவதாயினும் சரி அல்லது மகிழ்விப்பதாயினும் சரி பேச்சென்ற சொல்லில்தான் உள்ளது.

அன்பாகப் பேசுங்கள் ஆனந்தமாய் இருக்கும்!<br>
இனிமையாகப் பேசுங்கள் இன்பமாக இருக்கும்!<br>
பண்பாகப் பேசுங்கள் பரவசமாக இருக்கும்!<br>
வீரமாகப் பேசுங்கள் உற்சாகமாக இருக்கும்!




இப்படியாக நாம் பேசும் ஒவ்வொரு சொல்லிற்கும் ஒவ்வொரு விளைவுகள் உண்டு. இன்றைய உலகில் பல பிரச்சினைகளால் மனிதர்கள் அவதிப்படும் நிலையே உள்ளது. அவ்வேளையில் நிம்மதியும், ஆறுதலுமே அவர்களுக்குத் தேவையாக உள்ளது.

அன்பாகப் பேசுபவர்களிடமே தம் மனதைப் பறிகொடுத்து தங்களுடைய துயரங்கள்ளை தீர்க்கின்றார்கள். எந்தத் துயரமும் இல்லாத மழலைக் குழந்தைக்கே அன்பான பேச்சுத்தான் தேவை என்றால் நொந்த மனதிற்கு எப்படி தேவைப்படும். நல்ல பேச்சுக்களால் நாம் பலரை வழிப்படுத்தமுடியும்.

அன்பான வார்த்தைகளை எந்நேரமும் பேச முடியாதுதான். ஆனால் இடமறிந்து நேரமறிந்து பிறரின் மனம் அறிந்து பேசுவது நன்று. அரசியல் வாதிகள் கூட தங்களுடைய இனிமையான பேச்சுகளால் தான் மக்களை தம்வசப்படுத்துகிறார்கள். ஒருவன் ஒரு தவறு விட்டு மனம் நொந்திருக்கும் போது ஆதரவாகப் பேசுங்கள். பின்னர் பிழையைத் தண்டியுங்கள். எனவே இனிமையாகப் பேசுங்கள். மேன்மை அடையுங்கள்.

பா.கஸ்தூரி

## வெங்காயப் பிட்டு (பாற்பிட்டு)




தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| அரிசிமா | -1 தம்ளர் |
| உழுத்தம்மா (வறுத்தது) | -1/2 தம்ளர் |
| சிறிய வெங்காயம் | -100 கிராம் |
| தேங்காய்ப்பால் | -1 1/2தம்ளர் (முற்பால்) |
| சீனி | -2 1/2மேசைக் கரண்டி |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

★வெங்காயத்தை சுத்தம் செய்து வட்டமாக வெட்டவும்.

★அரிசிமாவுடன், 1/4 தம்ளர் உழுத்தம்மாவைக் கலந்து உப்பும் சேர்த்து கொதிநீர் அளவாகச் சேர்த்துப் பிட்டாகக் குழைத்து அவித்துக்கொள்ளவும்.

★தேங்காய்ப்பாலில் சிறிதளவு உப்பும் சேர்த்து, வெட்டிய வெங்காயத்தை இட்டுக் கொதிக்க வைக்கவும்.

★வெங்காயம் வெந்ததும் சீனியைச் சேர்த்துக்கொள்ளவும்.

★சீனி கரைந்து பால் தடித்ததும், அவிந்த பிட்டை உதிர்த்தி பாலுக்குள் இட்டுக் கிளறவும்.

★மிகுதி 1/4 தம்ளர் உழுத்தம்மாவை, பிட்டைக் கிளறும் போது தூவி இட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.

★கலவை ஒன்று சேர்ந்ததும் இறக்கி சிறிது நேரம் இறுக்கமாக மூடி வைக்கவும்.

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 56தொடக்கம் 60 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –56**
வி.வினிதாராணி,
இல:-307, 3ஆம் யூனிற்,
யோகபுரம் மல்லாவி.

**பரிசுத்திட்டம் –57**
திருமதி. யசோதா.இ,
புனித திரேசா பெண்கள் கல்லூரி,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –58**
S.நிதர்சினி,
டிப்போறோட்,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் –59**
வி. பரமேஸ்வரி,
மே.பா.வி.சாதனா,
1ஆம் வட்டாரம்,
லோறன்ஸ் திட்டம்,
புதுக்குடியிருப்பு.

**பரிசுத்திட்டம் –60**
தி.தர்ஷா,
குருமன்காடு, வவுனியா.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




**குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 63**

பெயர்:..............................................

முகவரி:............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## சொற்சிலம்பம் - 102

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | பி | ட | டு | ன | தா | ம |
| மா | கு | ல் | பா | ந் | மி | லா |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | வ |
| ஜெ | னா | ப | லி | னை | சீ | இ |
| ம் | ட் | தா | ஷி | ர் | லி | து |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | வு |
| ங் | வ | கே | ன் | கி | த் | ஹி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -100 இன் விடைகள்

01. மகேலஜெயவர்த்தன.

02. பில்கேட்ஸ்.

### சொற்சிலம்பம் - 100 இன் பரிசுக்குரியவர்

க.தருபன், தரம் -5c
மு/ஸ்ரீ சுப்பிரமணிய - வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 100 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. T.விதூசன், மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
02. பூ.பவனேஸ்வரன், கச்சார்வெளி, பளை.
03. பா.வேணு, 565 யோகபுரம், மல்லாவி.
04. கி.அபிராமி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.
05. மி.சாறுயன், தரம்-2d மு/சுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
06. கோபி, குருமன்காடு, வவுனியா.
07. பிரியா, நல்லூர், யாழ்ப்பாணம்.
08. சசி, பரந்தன், கிளிநொச்சி.

01. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு?
01) ..................................

02. இலங்கையின் பிரதான நதிகளின் பெயர் ஒன்று?
01) ..................................

சொற்சிலம்பம்-102
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..................................
முகவரி :-..................................
..................................
..................................

## நகைச்சுவை



"கால் ஒப் ரேஷனுக்குப் பிறகு நன்றாகக் குதிக்கலாம்னு நோயாளிக்கு சொன்னேன் டாக்டர்..."
"நல்லா புரிஞ்சுக்கிட்டாரா?"
"ஓவரா புரிஞ்சுக் கிட்டார் டாக்டர்..! பத்தாவது மாடியிலிருந்து குதிச்சுட்டார்..."




## தெள்ளுப் பூச்சி


தெள்ளுப் பூச்சி என்பது இறக்கைகளற்ற பூச்சி வகையைச் சேர்ந்தது. மனிதன் உட்பட வெப்ப இரத்தவோட்டமுடைய உயிரினங்களின் இரத்தத்தை உண்டு வாழ்கிறது. உலகெங்கும் காணப்படும். இது நோய்களைப் பரப்பக்கூடியது.

இது 3மி.மீ நீளமுடையது. தட்டையான உடல். பின்நோக்கி இருக்கும் மயிர் போன்ற முன் கால் மிக நன்றாக தாவக்கூடியது. தன் உடல். நீளத்தைப் போல 100 மடங்கு தூரம் வரை தாவும். எல்லாத் தெள்ளுப் பூச்சிகளுக்கும் கண்கள் கிடையாது. ஒரு சில வகைகளுக்கு மிகச் சிறிய கண்கள் உள்ளன. மிகச் சிறிய உணர் கொம்புகளும் சருமத்தைக் குத்தி இரத்தத்தை உறிஞ்சும் படியான வாயுறுப்புகளும் கொண்டவை.


பொதுவாக இவற்றில் பூனைத் தெள்ளு, நாய்த்தெள்ளு என்று பலவகைகள் பிளேக் நோயை உண்டாக்குவதும் இதிலே ஒரு வகைதான். மணல் தெள்ளு என்று ஒரு வகை சருமத்தினடியில் குடியமர்ந்து அல்சரை உண்டு பண்ணிவிடும்.

மற்ற வெப்ப இரத்தவோட்டமுடைய விலங்குகளின் ஒட்டுண்ணி போல இது ஆண்டு முழுவதும் இனப்பெருக்கம் செய்யும். இது பற்றும் விலங்கின் உடலிலோ அல்லது தரையிலோ முட்டைகள் இடும். இரண்டு முதல் 14 நாள்களில் முட்டைகள் பொரிந்து முட்டைப் புழு வெளிவரும். ஒவ்வொரு முட்டைப் புழுவும் பட்டினால் கூடு கட்டி கூட்டுப் புழு வாழ்க்கையைத் தொடங்கும். ஓரிரு வாரங்களில் வளர்ந்த தெள்ளுப் பூச்சி கூட்டிலிருந்து வெளிவரும். பூச்சிகளிலேயே இதற்குத்தான் ஆயுள் அதிகம். சாதாரணமாக இரண்டு ஆண்டுகள் வரை வாழும். இது பூச்சி இனத்தில் சைபனாப்டேரா எனும் வரிசையைச் சேர்ந்தது.

## கைவண்ணம்



வி.வசந்தன்,
புதுக்குடியிருப்பு.





மொத்த வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? ________

## மீனின் ஆசை




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்)



இலக்கியப்பகிர்வு

# வானொலி நாடகம்

## எஸ்.எஸ்.துரை

தற்போது கனடாவில் வசித்துவரும் எஸ்.எஸ்.துரை அவர்களின் வானொலிநாடகம் தொகுதி மூன்று அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எஸ்.எஸ்.துரை நாடகப்பிரதி எழுத்தாளர் நடிகர்-தயாரிப்பாளர் என பன்முகத்தன்மை உள்ளவர்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவர் அறிமுகமானவர் எனினும் இங்கு அவர் தொடர்பாக சிறிய அறிமுகம் ஒன்றைச் செய்யவேண்டிய தேவை ஒன்றுள்ளது.

இவர் சிறுவனாக இருந்த காலத்தில் பெரியவர்கள் நடிக்கும் நாடகங்களை விருப்பத்துடன் பார்ப்பார். இவரது அயலிலேயே பெரியவர்களின் நாடக ஒத்திகை நடந்தது.

இவர் அந்த நாடகங்களின் ஒத்திகைகளை பார்க்க முனைந்தார். பொதுவாக நாடக ஒத்திகைகளைப் பார்க்க விடமாட்டார்கள்.

துரை அவர்கள் மிகச் சிறிய பையனாக இருந்ததால் ஒத்திகை பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அதனால் ஒளித்து நின்று பார்க்கத் தலைப்பட்டாராம். ஆனால் அதைககூட யாரும் கண்டுவிட்டால் கலைப்பார்கள்.




அவர்கள் கலைப்பதும்-பிறகு வந்து பார்ப்பதுமான சூழலில் அந்த நாடகத்தை தயாரித்தவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்களாம்.

என்ன முடிவு?

அதாவது சிறுபையனாக இருந்த துரை அவர்களை நாடக நடிகனாக சேர்த்துக்கொள்வது என்று.

அதன்படி சிறுபையனான துரை அவர்களும் நாடக நடிகனாக்கப்பட்டார். அப்போது அந்தபெரியவர்கள் ஒத்திகை பார்த்த நாடகத்தில் புதிதாக ஒரு பாத்திரம் சேர்க்கப்பட்டது. பத்திரிகை விற்கும் பையன்தான் அந்தப்பாத்திரம். அந்த பத்திரிகைப் பையனாக துரை அவர்கள் மேடையில் தோன்றி நடித்தார்.

"சுடச்சுடச் செய்தி" என்று பேசிக்கொண்டு சிறுபையனான எஸ்.எஸ்.துரை நாடக நடிகனானார். இதன் பயனாக 15 வயதிலேயே துரை அவர்கள் நாடக பிரதி எழுத்தாளராக-நாடக தயாரிப்பாளராக மாறினார்.

"நல்லவள் எங்கே" என்ற நாடகம் அப்போது 12 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது. 18 வயதில் "விதியின் கரங்கள்" என்ற நாடகப்பிரதியை எழுதினார். அது பெரிதாக இருந்ததால் திரைப்படமாக எடுத்தால் நல்லது என பலரும் கருத்துத்தெரிவிக்க பிரபல சிங்கள தயாரிப்பாளரான "ரொபின் தம்பு" அவர் களிடம் ஒப்படைத்தார்.

ஒரு மாதத்திற்குப் பின்னர் பதில் சொல்வதாக ரொபின் தம்பு சொன்னார். ஆனால் பதில் சொல்லப்படவேயில்லை.

பின்னர் அந்தக் கதையின் சாயலில் ஒரு சிங்களப்படம் வந்ததாக அறியப்படுகிறது.

இதன் பின்னணியிலேயே அவர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தார். 1984-1994 காலப் பகுதியில் அதாவது கிட்டத்தட்ட பத்துவருடங்கள் எந்த நாடக முயற்சிகளிலும் ஈடுபடாமல் இருந்தார்.

இதற்கான காரணம் உண்டு. புலம் பெயர்ந்த நாடுகளில் தம்மை பொருண்மிய ரீதியாக நிலைநிறுத்திக்கொள்ள அக்காலப் பகுதி தேவைப்பட்டது.

எனினும் நாடக பிரதிகளை எழுதி சேகரித்து வந்தார். கனடாவில் பாடசாலைப் பிள்ளைகள் வருடாவருடம் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவார்கள். அதற்கு ரிக்கட் விற்பார்கள்.

அந்தப் பிள்ளைகளின் வரவால் ஏற்பட்ட தொடர்பில் "சிந்திக்கத் தொடங்கிவிட்டார் கள்" என்ற நாடகத்தை தயாரித்து நெறிப்படுத்தினார்.

அந்த நாடகத்தை கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த கலாதரன் அவர்கள் பார்த்தார். நாடகம் தயாரிக் கப்பட்ட விதம் பிடித்துக்கொண்டதால் துரை அவர்கள் கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நான்கு வருடங்கள் நாடகத் தயாரிப்பாளராக வேலை செய்தார்.

இதன் பிறகு கலாதரன் அவர்கள் இன்னும் சிலருடன் சேர்ந்து கனடிய தமிழ் வானொலி யைத் தொடக்கினார். அதன் நாடகத் தயாரிப்பாளராகவும் துரை அவர்கள் பணிபுரிந்து வருகின்றார்.

லண்டன் ஐ.பி.சி கனடாவின் கனடிய தமிழ் வானொலி, அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் வானொலிக்கென சுமார் 75 நாடகங்களுக்கு மேல் இவர் தயாரித்துள்ளார்.

இவரது முதலாவது நாடக நூல் கனடாவில் 2003இல் வெளியானது. இரண்டாவது நூல் 2004இல் தமிழ் நாட்டில் வெளியானது. இப்போது வெளியாகி இருப்பது இவரது மூன்றாவது நூல். இதில் "மரணங்கள் மலிந்த பூமி" "நிஜம்", "விடியலைத்தேடி", "காதலா? கடமையா", "உடலுக்கு அப்பால்" என்கிற ஐந்து நாடகங்கள் உள்ளன.

நாடகம் ஒரு கூட்டுக்கலை. மேடை நாடகம் போல அல்ல வானொலி நாடகம். வானொலி நாடகத்திற்கு பிரதானமானது ஒலி. அதாவது உச்சரிக்கப்படும் சொற்களே பிரதானமானது. அலையேவா வானொலியைக் கேட்கின்ற எமது மனத்திரையில் நாடக மேடையை உருவாக்குகின்றன.

வானொலி ஊடாக நாங்கள் கேட்கின்ற சொற்கள் அவை. உச்சரிக்கப்படும் விதத்தின் ஊடாகவும் பொருத்தமாகச் சேர்க்கப்படும் இசைக் குறிகளாலும் எங்கள் மனங்களில் காட்சிகளை அமைக்கின்றன.

நேரம் இரவா, பகலா, அல்லது பாத்திரங்கள் எங்கிருந்து கதைக்கின்றன தெருவா? வீடா, சந்தையா, கோயிலா என்பதையெல்லாம் ஒலிக் குறிப்புகளே எமக்கு உணர்த்துகின்றன.

வானொலி நாடகங்களின் தன்மைக்கு அடங்கியதாக துரை அவர்களின் நாடகங்கள் உள்ளதா? என்பதை எல்லாம் விட துரை அவர்களின் நாடகம் சமூகம் சார்ந்தது. எங்கள் மண்ணின் வாசனை கொண்டது. எங்களது உணர்வுகளை எங்கள் விடுதலையை, எங்கள் பண்பாட்டு விழுமியங்களைப் பேசுகின்றது.

இதனாலேயே இவருடைய நாடகங்கள் சிறப்புப் பெறுகின்றன. புலம்பெயர் நாடுகளில் உள்ள பல இலக்கியப் படைப்பாளிகள் மேற்கத் தைய கலை இலக்கிய கோட்பாடுகளை அப்படியே விழுங்கிக்கொண்டு எமது சமூகத்தில் புற நடையாக உள்ள விடயங்களை இலக்கியப் படைப்புக்களாக படைத்துக் கொண்டு திரிகின்றார்கள். அதனூடாக இலக்கிய உலகில் தங்கள் பெயர்களைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள்.

துரை அவர்களின் இந்த நாடக நூலை அவர் கனடாவில் இருந்து இங்கு வருகைதந்து வெளியிடுகின்றார்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள அவருக்கு இங்குள்ளவர்களின் ஆதரவு எப்போதும் உண்டு.

எனினும் துரை அவர்களின் இந்தத் தொகுப்பில் முரண்பாடான சில விடங்கள் ஆங்காங்கே தலை காட்டத்தான் செய்கின்றன.

இது படைப்பாளியின் குறைபாடு அல்ல. எங்கள் மண்ணின் யதார்த்த நிலையை அவரால் மிக நீண்ட தூரத்தில் இருந்து கொண்டு சரியாக அறிந்துகொள்ள முடியாமையே.

உணர்வு ரீதியாக அவர் எங்களோடு இணைந்திருந்தாலும் தகவல் அடிப்படையில் அவரால் சில விடயங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

முரண்பாடான விடயங்கள் தொடர்பில் இப்போது அவருக்கு ஒரு தெளிவு ஏற்பட்டு இருக்கும். அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் அவர் இத்தவறுகளை நீக்கிக்கொள்வார் என எதிர்பார்க்கலாம்.

இறுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன

# "கொல் ஈனும் கொற்றம்"

## கூத்துருவ நாடகம்

கிராமங்களில் இருந்த நாட்டுக்கூத்தை மக்கள் மயப்படுத்தி நகரிற்குக் கொண்டு வந்ததுடன் நகரத்தவர்களையும் கூத்தாட வைத்த பெருமை பேராசிரியர் சு.வித்தியானந்தனையே சாரும். கிராம ரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்த கூத்தை ஒன்றித்து வர்க்க வேறுபாடுகளைக் களைந்து நாட்டுக்கூத்தை புது மெருகுடன் வாழ வைத்தவர்கள்.

இன்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்கூத்து கலையையும் கலைஞர்களையும் அரவணைத்து கூத்துக் கலையை ஆவணப்படுத்தும் பெருமுயற்சியை திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டது. அதில் பாரிய வெற்றியையும் கண்டது. கூத்துக் கலையை நவீன மயப்படுத்தி அதற்குள் மக்களை



உள்வாங்கி வருகின்ற பெரும் பணியை கலாநிதி கலைத்தூது நீ-மரியசேவியர் அவர்களும் அவரது உருவாக்கமான கலைஞர்களும் மேற்கொள்கின்றனர்.

கூத்துக்கலையை தனியே அரங்காற்றுகையுடன் நிறுத்திவிடாது நூல் வடிவில் ஆவணமாக்குவதுடன் கூத்துக் கலைஞர்களை ஒன்றிணைத்து அவர்களது வெளிப்பாடுகளை, கருத்தாடல்கள் பயிற்சிப் பட்டறைகள் ஊடாக செயற்படுத்தி வருகின்றமையால் ஆரோக்கியமான கூத்துச் சமூகத்தை தோற்றுவித்துள்ள அதேநேரம் 40 வருடங்களாக பாரம்பரிய கலை வடிவங்களின் வளர்ப்புப் பெற்றோராகவும் செயற்பட்டுவருகின்றது திருமறைக் கலாமன்றம்.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார். கூத்துக் கலையை நேர்த்தியாக அதேநேரம் புதுவித உத்திகளுடன் கையாள்வதில் இன்றுள்ளவர்களிடையே முதன்மையானவர். "கொல் ஈனும் கொற்றம்"எனும் கூத்துருவ நாடகத்தை யூலை மாதம் 31ஆம் திகதி திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில் பார்த்தோம். அக் கூத்துருவ நாடகம் தொடர்பான நேர்நோக்கை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

இராமாயணத்தில் இடம்பெறுகின்ற கும்பகர்ணன் வதைப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட கதை ஓட்டத்துடன் நகரும் கூத்துருவ நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்தவர் பிரதி இயக்குனர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார். முற்றிலும் வேறுபட்ட வகையில் கூத்திற்குள் மக்களையும் மக்களிற்குள கூத்தையும் உட்புகுத்தியுள்ளார் என்பதனை பார்வையாளர்களது சம்பாசனையும் நாடகத்தை அவதானித்த முறையும் கோடிட்டுக் காட்டுகின்றது. யாழ்ப்பாணத்து கிறிஸ்தவக் கூத்துக்களையும் தென்மோடிக் கூத்தினையும் பார்த்திருந்த நாம் முற்றிலும் வேறுபட்ட கூத்துச் சூழலிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

இராமனின் மனைவியான சீதையை சிறைவைத்துள்ள இராவணன் மீது தர்மப்போர் புரிய வரும் இராமனிற்கு இராவணன் தம்பி விபீசனன் துணை நிற்கிறான். இராமனிற்கும் இராவணனிற்கும் இடையே போர் நடைபெறுகின்றது. போரில் தோல்வியுற்ற இராவணன் தன்னிலை இழந்திருந்த வேளை கும்பகர்ணனை போரிற்கு அனுப்புவதும், போர்க் களத்தில் விபீசனன் கும்பகர்ணனை (சகோதரர்கள்) போர் வேண்டாமென திரும்பிப்போக வலியுறுத்துகிறான்.

இதனை ஏற்றுக்கொள்ளாத கும்பகர்ணன் போரிட்டு இறப்பதும், இதன்பின் இராவணன் தன் மகன் இந்திரஜித்தை போர்க்களத்திற்கு அனுப்புவதற்கு அழைப்பதுமாக கையோட்டத்தை மிக நேர்த்தியாக கையாண்டுள்ளார் நெறியாளர். இக்கூத்துருவ நாடகத்தின் தென்மோடி, வடமோடி, வடபாங்கு, தென்பாங்கு, சிந்துநடை, இசைநாடகம் என இவற்றை உள்ளடக்கியதான ஆடல் பாடல்களைத் தழுவியுள்ளது. இவ் அறிக்கையில் 25 கலைஞர்கள் பங்குகொண்டனர்.

ஒவ்வொரு கலைஞர்களும் தாம் ஏற்ற பாத்திரத்தை மிகத்திறமையாகக் கையாண்டு அதில் வெற்றியும் கண்டுள்ளனர் என்பதற்கு சபையோரின் பாராட்டுதல்களும் அமைதியான அவதானிப்புக்களுமே தக்கசாட்சிகளாகவுள்ளன. பாத்திரத்தெரிவு, வேடஉடை, ஒப்பனை இவற்றில் திருமறைக் கலாமன்றம் சோடை போனதில்லை என்பதை மீண்டும் நிரூபித்தது. இராமன், இராவணன், கும்பகர்ணனின் பாத்திரத் தெரிவு, கதையின் நாயகர்களையே எம்முடன் உரையாட வைத்த உணர்வை ஏற்படுத்தியது.

கட்டியக்காரனும் பின்னணிப்பாடகர் குழுவினரும் அரங்கின் இடது கரையை அலங்கரித்து கதையை நகர்த்திச்செல்கின்றனர். இராவணனின் சுயநலன் கருதிய சுயகௌரவத்திற்கான போராகவே கும்பகர்ணன் வதைபடலம் அமைகின்றது. இறுதிவரை போரிடுவதே என்ற இராவணனின் போர்க்குணத்தையும், தன் பக்க நியாயத்தை போரின் மூலமாகவே நிறைவேற்றலாம் என்ற எண்ணக் கருக்களிற்கு அமையவே கதை நகர்கின்றது. இழப்பைக் கண்டு கலங்குபவனல்ல இலங்கைவேந்தன். எதிரியை முறியடித்து மண்ணைவிட்டுத் துரத்தும் வரை ஓயப் போவதில்லை. போர்... போர்... இவ்வசனமே இராவணனின் கதாபாத்திரத்தை தெளிவுபடுத்துகின்றது.

இராமனின் பாத்திரமேற்ற யாழ் பல்கலைக்கழக இசைத்துறை மாணவனான இரத்தினசிங்கம் ஜெயக்காந்தன் பாத்திரமாக மாறி தன் பங்களிப்பை வழங்கியதனை அவதானிக்க முடிந்தது. மனைவியை மீட்கும் வாஞ்சையுடன் யுத்தம் புரிபவனாக மிக அற்புதமாகத் தான் ஓர் இளம் கலைஞர் என்பதை பொய்ப்பித்தார் ஜெயக்காந்தன். இராவணன்,கும்பகர்ணன் ஆகிய இருவரும் அனுபவமுள்ள கலைஞர்கள் என்பதை நடிப்பாற்றலாலும் பாடல் வசனங்களை பிரித்தியம்பும் உச்சரிப்பினாலும் வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

கலைஞானச் செல்வன் என விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஏ.ஆர்.விஜயகுமார் யூட்ஸ் கொலின் இருவருமே இராவணன், கும்பகர்ணன் பாத்திரமேற்று அரங்கை மட்டுமல்ல அவையோரையும் ஆட்சிசெய்தனர்.

இக்கூத்துருவ நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்த ஜோ.ஜோண்சன் ராஜ்குமார் பல நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்தபோதிலும் இக்கலைஞர்களில் அநேகரைக் கொண்டு "கம்பன் மகன்" என்ற நாட்டுககூத்தையும் நெறியாள்கை செய்துள்ளார். நாட்டுக்கூத்து பலரது பாராட்டுதல்களைப் பெற்றதுடன் நூல் வடிவமும் பெற்றுள்ளது. "கொல் ஈனும் கொற்றம்" என்ற கூத்துருவ நாடகமும் இவ்வருட இறுதியில் நூல் வடிவம் பெறவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

சுமார் 2 மணித்தியாலங்கள் கூத்துருவ நாடகத்தின் வாயிலாகப் பார்வையாளரைக் கட்டிப்போட்ட கலைஞர்களும், நெறியாளரும் பாராட்டப்படுவதுடன், ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். காலத்திற்கு அமைவாக கலைஞரின் விருப்பறிந்து படைத்தளித்த இந்நாடகம் கொழும்பில் இரு தடவைகளும், நல்லூர் இளம் கலைஞர் மன்றத்திலும் அரங்கு கண்டுள்ளது.

இவ்வாறான இனிய கலைவடிவங்களினூடாகவே எம் பாரம்பரிய கலைவடிவங்களை மக்கள் மயப்படுத்தி, மக்களையும் கூத்தையும் ஒன்றிக்கச் செய்யலாம் என்பதற்கு "கொல் ஈனும் கொற்றம்" முன்னுதாரணமாகவுள்ளது. இப்படி யான கலைவடிவங்களே காலத்தின் தேவையா கவுள்ளது.

ஈழவன்

யாழ்ப்பாணம் அல்லாரையில் உள்ள கிராமியப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளுக்கு பெரும் மதிப்பு உள்ளதாக அறியப்படுகின்றது.

இந்த மதிப்பு எப்படி வந்தது என்பது கவனிக்கப்பட வேண்டியது. இந்தப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை வாங்குவதற்காக மக்கள் காலையில் இருந்தே காத்திருக்கின்றனர். இதன் பின்னால் உள்ள புதுமை என்ன?

உரவகைகள் எதுவும் பாவிக்காமலும், மருந்துகள் எதுவும் விசிறா



பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

மலும் இங்குள்ள பயிர்கள் பராமரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக தூய்மையான தீங்கற்ற மரக்கறிவகைகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

சுமார் 24 பரப்பு காணியில் இயற்கைப் பசளைகளைப் பாவித்து இந்தப் பண்ணையில் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. முன்மாதிரியாக மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் நாட்டின் எல்லாப்பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும்.

சாதாரணமாகவே எங்கள் விவசாயிகள் புரிந்தும், புரியாமலும் உச்ச விளைவை அல்லது உயர்இலாபத்தை பெறும் நோக்கில் பயிர் செய்யப்படும் நிலங்களுக்கு அதிக உரத்தினைப் பாவிப்பதும் கிருமிநாசினிகளை விசிறுவதும் இயல்பாகிவிட்டது. இதன் காரணமாக பயிர்நிலங்கள் மாத்திரம் அல்ல பயிர் செய்யப்படும் சூழலும் நீர்வளமும் கூட மாசடைகின்றன.

மேலும் இத்தகைய பயிர்களில் அறுவடை செய்யப்படும் விளைபொருட்களும் நஞ்சுறி நீண்டகால நோக்கில் உடலுக்கு பெரும் தீங்கினை விளைவிக்கின்ற அச்சுறுத்தலை சகலரும் அறிவோம்.



எனவே இயற்கைப் பசளைகளை பாவித்து பயிராகும் பயிர்களில் இருந்து கிடைக்கும் விளைபொருட்களை பாவிப்பதை இயலுமான வரை நாங்கள் கைக்கொள்ள வேண்டும்.

இதற்கு இது போன்ற பண்ணைகள் மேலும் உருவாக்கப்பட வேண்டும்.

திட்டமிட்ட முறையில் சகல பிரதேசங்களிலும் இவை உருவாக்கப்பட்டால் அந்தந்தப்பகுதி மக்கள் அவற்றினால் பெரும் நன்மை அடையமுடியும்.

அது மாத்திரம் அல்ல எங்கள் மரக்கறிச் செய்கையாளர்களும் இயலுமானவரை உரங்களையோ, கிருமிநாசினிகளையோ பாவிக்காமல் இயற்கை பசளைகளை இயற்கையான கிருமி நாசினிகளை பாவித்து தமது செய்கைகளை மேற்கொள்ள முனைய வேண்டும்.

நமது நிலங்கள் நமது சூழல் மாத்திரம் அல்ல நமது உடல் கூட இதனால் பாதுகாக்கப்படும்.

# மரவள்ளிப் பயிர்ச் செய்கையும் அதன் பயன்பாடுகளும்

**பயிர்ச் செய்கை:-**

மரவள்ளிப் பயிரானது ஓர் பல லாண்டுப் பயிராகும். இது சகல வகையான மண் வகைகளிலும் (களி, மணல், இருவாட்டி) நன்கு செழித்து வளரக் கூடியது. இது பொதுவாக தண்டுத் துண்டங்கள் மூலம் பயிர் செய்யப் படுகின்றது. இந்தப் பயிரானது அதிகளவு வெப்பத்தையும் குறைந்தளவு நீருடனும் நல்ல விளைச்சலைத் தருகின்ற வளம் குறைந்த மண்ணிலும் நன்றாக வளரும் இயல்புள்ளது.

பொதுவாக எம் தாயக விவசாயிகள் மரவள்ளிப் பயிரை கிழங்கைப் பெறும் ஓர் நோக்கத்திற்காகவே பயிர் செய்கிறார்களே தவிர அந்தப் பயிர் மீதிகளை எவ்வாறு கால்நடைகளுக்கு உபயோகம் உள்ளதாக மாற்றலாம் என்று அறிந்திருக்கவில்லை. அவற்றைப் பற்றி சற்று ஆராய்வோமானால்,

பயிரியல் இயல்புகள் (Agronomic Aspcets)



மரவள்ளிப் பயிரானது மணல் மற்றும் குறைந்தளவு உக்கல் கொண்ட மண்ணில் செழித்து வளரும், பீடைகள் நோய்களுக்கு எதிர்ப்புள்ள கடுமையான வெப்பத்தையும் தாங்கி வளரும் ஓர் பயிராகும்.

மரவள்ளிப் பயிரானது பின்வரும் பயிர்களுடன் ஊடுபயிராக பயிர் செய்யமுடியும். அவையாவன அவரை (bcan), சோளம்(Mazc) வெள்ளரி (Cucumber) மரவள்ளி-கௌபி ஊடு பயிர்ச் செய்கையானது நிலத்தின் பயன் பாட்டை 72.76% உயர்த்தி உள்ளமை அறியப்பட்டுள்ளது.

மரவள்ளிப் பயிரை நன்கு வளமான பயிர்செய்யும் நிலத்தில் பயிரிடும் பொழுது அந்த நிலத்தின் வளம் பாரிய அளவில் குறைந்து செல்லும் என்று ஆராய்ச்சி மூலம் அறியப்பட்டுள்ளது. குறிப்பாக பொசுபரசு (P) என்ற மூலகம் அதிகளவில் இழக்கப்படுவதாக அறியப்பட்டுள்ளது. இந்த வகைப்பட்ட இழப்பானது ஊடுபயிர்ச் செய்கை முறை மூலம் அதிகளவில் குறைக்கப் படுகிறது.

**மரவள்ளியில் இருந்து விலங்கியல் பயன்பாடுகள்.**

பொதுவாக மரவள்ளிப் பயிரை விலங்கு உணவாகப் பயன் படுத்துதல் என்று சொல்லும்போது பல விவசாயிகள் அதன் நஞ்சுத் தன்மை (மரவள்ளியின் நஞ்சுத்தன்மைக்குக் காரணம் ஐதரசன் சயனைட்(HCN) ஆகும்) காரணமாக சற்றுப் பின்னடிப்பது யாவரும் அறிந்ததே. ஆனபோதிலும் மரவள்ளிப் பயிரின் சகல பாகங்களையும் விலங்கு உணவாகப் பாவிப்பதனால் கால் நடைகளின் களிப்பொருள் தேவையை போதியளவில் குறைக்கலாம் என்று அறியப் பட்டுள்ளது. பொது மரவள்ளிப் பயிரின் பாகங்களை பயன்படுத்துகின்றபொழுது முறையான பராமரிப்பு முக்கியமாகும்.

முக்கியமாக அறுவடைக்கு பின்னர் பாரிய அளவிலான மரவள்ளிப் பயிரின் இலை மற்றும் தளிர்ப் பகுதிகள் கவனிப்பார் அற்று விடப்படுவது யாவரும் அறிந்ததே. இருந்தும் சில விவசாயிகள் சற்று முற்றிய இலையை நிழலில் வாடவிட்டு கால்நடைகளுக்கு சிறிய அளவில் பயன்படுத்துவது பொதுவான வழக்கமாகும். இருந்தும் இவற்றைப் பாரிய அளவில் பயன்படுத்துகின்ற பொழுது பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம்.

**மரவள்ளி இலையை சருகு ஆக்கி (Cassava Hay) வைக்கோல் உடன் கலந்து உலர் காலத்தில் பயன்படுத்தல்**

பொதுவாக வைக்கோலை மட்டும் பசு மற்றும் எருது மாடுகளுக்கு வழங்கும்போது நாங்கள் அதிகளவில் கட்டமைப்பு காபோவைதரேற்றுகளையே (Structural Car bohy drutcs) வழங்குகின்றோம். வைக்கோலுடன் மரவள்ளியின் உலர்த்தப்பட்ட இலையையும் சேர்த்து வழங்கும்பொழுது அதற்கு புரதமும் அதிகளவில் வழங்கப்படுகிறது. அத்துடன் Cassava hay யை அடர்தீவனத்துக்கு மாற்றீடாகவும் (அதாவது தவிடு, புண்ணாக்கு, மாட்டுத் தீவனம்) பயன்படுத்தலாம்.

Cassava hay யை உணவாக பால்கறக்கும் பசுக்களுக்கு வழங்கும் போது பசுப்பாலில் கொழுப்பு, புரதம் ஆகியவற்றின் பெறுமானம் அதிகரிப்பதாக அறியப்பட்டுள்ளது.

அத்துடன் Cassava hay வைக்கோலுடன் கலந்து வழங்கும் போது பசுமாட்டின் உணவு உட்கொள்ளும், சமிபாடு அடையும் தன்மை உற்பத்தி அளவு என்பனவும் அதிகரிப்பதாக அறியப்பட்டுள்ளது. அத்துடன் Cassava hay யை உணவில் சேர்க்கின்றபொழுது மாட்டின் உணவுப் பையில் (Rumen) காணப்படுகின்ற நுண்ணங்கிகளின் வளர்ச்சி அதிகரிப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

மரவள்ளி காய்ந்த இலையில் Cassava hay யில் நார்ப்புரதம் (CP)-25% HCN (ஐதரசன் சயனைட்டு 0.348mg% (இந்த அளவானது பச்சை இலையில் காணப்படுவதிலும் பார்க்க அதிகளவு மடங்கால் குறைக்கப்பட்டுள்ளது) அத்துடன் Cassava hay யின் சமிபாடு அடையும் அளவு (Digestibility) 71% ஆகும்.

**மரவள்ளியின் உலர்த்தப்பட்ட இலையைத் தயார் செய்தல் Cassava hay Making**

மரவள்ளிப் பயிரின் அறுவடைக்குப் பின்னர் கிடைக்கும் இலைகளை முதலில் நிழலில் உலர்த்தி பின்னர் பரவல் சூரிய ஒளியில் உலர்த்தி இலையைத் தொடும்போது முறியும் நிலைக்கு வரும்போது அதனை பயன்படுத்தலாம். அல்லது சேமிக்கலாம். சேமிக்கும்போது Cassava hay யின் நீரின் அளவு 10% இருத்தல் வேண்டும். கூடிய அளவு ஈரப்பதன் பங்கசுக்களின் (Fungus) வளர்ச்சியைத் தூண்டலாம்.

அத்துடன் ஒரு நாளைக்கு 0.61.7 kg என்ற அளவில் வைக்கோலுடன் கலந்து பசு மற்றும் காளைகளுக்கு உணவு ஊட்டலாம்.

**சி.குகானந்தன்**



# புன்னகை

புன்னகை என்பது உலகிலுள்ள உயிரினங்களில் மனித வர்க்கத்திற்கு மட்டும் காணப்படுகின்ற ஓர் சிறப்பான அம்சமாகும். இதுவே மனிதனின் அரும்பெரும் சொத்தாகும். இதனை இழந்தவன் பூவுலகில் வாழ்வதற்கு தகுதியற்றவனாக அமைகின்றான். புன்னகையே மற்றோரையும் தம்மையும் சந்தோசமாக வாழவைக்கும் வைரமாகும்.

புன்னகையில் வெவ்வேறுபட்ட வடிவங்கள் உண்டு. அவை அவரவர் வெளிப்பாடுகளில் அமைகின்றது. அரசன் சிரித்தால் ஆணவம், அல்லது அகங்காரச் சிரிப்பாகவும், சங்கீத வித்துவான் சிரித்தால் சங்கீதச் சிரிப்பாகவும் அமைகின்றது. இவ்வாறு பல்வேறுபட்ட சிரிப்புக்களை வெவ்வேறுபட்டவர்கள் மத்தியில் இருந்து அறிந்துகொள்ளலாம். புன்னகையினை வைத்தே அவரவர்களின் குணவியல்புகளை அறிந்துகொள்ள முடியுமென உளவியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிரிப்பு என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செயற்பாடாக அமைந்தபோதிலும் அதனைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்கள் பல்வேறு காரியங்களைச் சாதிக்கின்றனர். எடுத்துக்காட்டாக ஒருவர் இன்னொருவரை வாழ்த்தும் போது வெளிப்படையாக சிரித்தும் உள்ளொன்று நினைத்தும் வாழ்த்தமுடியும். சிலர் சிரிக்காது மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தக்கூடும். எனவே சிரிப்பினை வைத்து எல்லோரும் ஒரே வர்க்கத்தினர் என்று நினைத்துவிடுவது தவறாகும்.

புன்னகையில் சிறந்தவர்கள் பெண்கள் என பலவேறு கவிஞர்கள் பல்வேறு வடிவங்களில் வர்ணிக்கின்றனர். பெண்களின் சிரிப்பினை வர்ணிக்க சொற்பிரயோகம் இல்லை. இதனைவிட சிறப்பான அம்சம் யாதெனில் வயது சென்ற ஆச்சி, அப்பு ஆகியோரின் சிரிப்பினை வர்ணிக்கவே முடியாது. எனவே புன்னகையே வாழ்வில் சிறந்த மருந்தும் வரப்பிரசாதமும் ஆகும்.


"சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்கவாழ்ந்திடாதே"

**ப.கஜேந்திரன்.**

உலா 49

# ஏ9–ஏரம்பு

# கண்ணில்லாத புலி மாமாவின் படத்தில் கண் கீறிப் பார்க்கப்போறன்..!



வணக்கம் வணக்கம்! என்ன மாதிரி எல்லாரும் எப்பிடிச் சுகமாய் இருக்கிறீயள்? அரசியலில எத்தினையோ புதினங்கள் இருந்தாலும் சிறிலங்கா தன்ரை போக்காலையே அழிஞ்சு போகப்போகுது எண்டிறதுதான் இப்போதைக்கு எனக்கு இனிக்கிற புதினமாய் இருக்கிது.

அநுராவை வெளிநாட்ட மைச்சராய் ஆக்கினதைத்தான் சொல்லிறன். எட உல்லாசத் துறையில இருந்துகொண்டே 'அந்தமாதிரி' அனுபவிச்சுத்திரிஞ்ச சீவன், இப்ப இன்னுமொரு அமைச்சையும் எடுத்திருக்கிது. தன்ரை சொந்தச்சுமையையே சுமக்கேலாத ஆளுக்கு 2 அமைச்சர் பதவியள் ஆகலும் ஓவர் பாருங்கோ! முந்தி உங்களுக்கு சொன்னனானல்லே 4 நாளில 20 ஆயிரம் டொலருக்கு ஏதோ படம் பார்த்த கதையைப் பற்றி. இனிமேல் அடிக்கடி வெளியால போற சோலிசுரட்டுகள் கூடும். மொத்தத்தில நாட்டின்ரை கஜானா கா...லி!

எந்தக்கழுதை எக்கேடு கெட்டாலும் எங்களுக்கென்ன! அதுகளை விடுவம். எங்கட பக்கத்துவீட்டை உங்களுக்குத் தெரியுமோ? ஆ... தெரியாட்டியும் பரவாயில்லை. அவையின்ரை மகள் குடும்பம் கனடாவில இருந்து போனகிழமை வந்திருந்தவை. சரியில்லை ஒருக்கால் போய் முகத்தைக் காட்டிட்டு வருவோம் எண்டிட்டு போயிருந்தனான். போய் இருந்து அமைதியாய் இருந்து அவையள் சொல்லிறதைக் கேட்டன். கனடாவில அந்தப் பிள்ளையின்ரை புருசன் தொழிற்சாலை ஒண்டில வேலை செய்யிறார். அவா ரெய்லர்-கடை வைச்சிருக்கிறாவாம். ஒரேயொரு மகன். கொஞ்சநேரத்தில எனக்குப் பக்கத்தில வந்திருந்த அவையின்ரை மகனை, நான் தமிழ் தெரிஞ்சிருக்குமோ எண்டதொரு சந்தேகத்தில கதை கேட்டன். ஆனால், பொடியன் 7 வயசு. அங்கை பிறந்திருந்தாலும் உச்சரிப்புக் கூட வித்தியாசம் தெரியாத அளவுக்கு நல்ல தமிழில கதைச்சான்.

'ஆமியைப் பார்க்கப்பார்க்க எனக்கு சரியான கோபம். அவையின்ரை முகத்தைப் பிடிச்சுப் பிய்க்கோணும் மாதிரிக் கிடந்திச்சிது', கொஞ்ச நேர அமைதிக்குப் பிறகு பொடியன் சொன்னான். எனக்கெண்டால் 7 வயசு, அதுவும் எங்கையோ பிறந்த ஒரு சின்னனிட்டை இருந்து இப்பிடியொரு வசனத்தைக்கேட்க ஆச்சரியமாய் இருந்திச்சிது.

'தம்பி! பிய்க்கிற என்ன பிய்க்கிறது? சனம் சில இடங்களில ஆமியை வெட்டிற சம்பவங்கள் கூட நடக்கிற கட்டம் இது. ஆனால், அது பெரிய ஆக்கள் பார்த்துக்கொள்ளுவினம். நீர் சின்னப்பிள்ளை, ஒழுங்காய் படிச்சு நல்லாய் வரப்பாரும்! அதுசரி உமக்கு படிச்சு என்னவாய் வர விருப்பம்?'. 'கொம்பியூட்டர் இஞ்சினியராகவும் விருப்பம், Fire-fighter (தீயணைப்புப்படை) ஆகவும் விருப்பம்'. 'நல்ல வித்தியாசமான ஆசைதான். இரண்டையும் படியுமன்! ஆனால் ஒண்டு: தீயணைப்புப்படை எண்டால் சும்மா தூரத்தில இருந்து வாளியால எட்டியெட்டி தண்ணி தெளிக்கிற மாதிரி இருக்கக்கூடாது.

> ***காயப்பட்ட போராளி மாமா மாமியவை இருக்கிற இடத்துக்குப் போனனாங்கள். அங்கை ஒரு மாமாவுக்கு 2 கண்ணும் இல்லை. தன்ரை கதையெல்லாம் எனக்குச் சொன்னவர். சாப்பிடேக்கிளை கூட அவருக்கு ரேஸ்ற் ஒண்டும் தெரியாதாம் எங்களுக்காகத்தானே அவர் சண்டை பிடிச்சவர்! நான் அந்த மாமாவைப் படம் கீறப்போறன். கீறி அவருக்கு கண் வைச்சுப் பார்க்கப்போறன்.***

ஒவ்வொரு விதமான தீயையும் எப்பிடி இலகுவாய் அழிக்கலாம் எண்டு திட்டமிட்டு மக்களைக் காப்பாற்றிற மாதிரி இருக்கோணும். என்ன!'.

நான் சொன்னதுக்கு உறுதியாய் தலையாட்டின பொடியன், 'நாங்கள் தாத்தா! காயப்பட்ட போராளி மாமா, மாமியவை இருக்கிற இடத்துக்குப் போனனாங்கள். அங்கை ஒரு மாமாவுக்கு 2 கண்ணும் இல்லை. தன்ரை கதையெல்லாம் எனக்குச் சொன்னவர். சாப்பிடேக்கிளை கூட அவருக்கு ரேஸ்ற் ஒண்டும் தெரியாதாம். எங்களுக்காகத்தானே அவர் சண்டை பிடிச்சவர்! நான் அந்த மாமாவைப் படம் கீறப்போறன். கீறி அவருக்குக் கண் வைச்சுப் பார்க்கப் போறன்', தன்னோட ஆதங்கத்தைத் தெரிவிச்ச பொடியன் அமைதியாச்சிது.

'தம்பி! இப்போதைக்கு படத்தில நீர் கண் வைச்சுப்பாரும். ஆனால், உம்மள மாதிரி சின்னாக்கள் எல்லாம் நல்லாய் படிச்சு பெரீசாய் வந்தால் அந்த மாமா மாதிரி ஆக்களுக்கெல்லாம் உரிய வகையில கண்டு பிடிப்புகளைச் செய்து artificial (செயற்கை) கண்ணையெல்லாம் பொருத்தலாம். எனக்குமொரு சின்னத் தங்கச்சி ஒராளைத் தெரியும். சிரிச்ச சின்னதொரு முகம். முதுகில காயம் பட்டு, 2 காலும் வழங்காது. ஊனம் எண்டு இன்னும் தமிழில வழங்கப்படிற அப்பிடியான அர்ப்பணிப்புகள்தான், மாவீரர்களுக்கு அடுத்தபடியாய் எங்கட இனம் அனுபவிக்கிற நிம்மதிக்கும், தன் மானத்துக்கும் வழிசெய்திருக்கிது'.

'ம்... நீங்கள் பாருங்கோவன் ஒருநாளைக்கு நான் கொம்பியூட்டர் சயன்ரிஸ்ற்றாய் வந்து கனக்க கண்டுபிடிப்பன்! மற்றது எனக்கு நீங்கள் புலிமாமாவைப் பற்றி சொல்லுவீங்களே?'. 'இதென்ன தம்பி! வன்னிக்கு வந்திட்டு உதென்ன கேள்வி வேண்டிக்கிடக்கிது!'

'அப்பு! நீங்கள் நல்லாய்த்தான் மாட்டிக்கொண்டீங்கள். அங்கை நாங்கள் 'புத்தனின் பெயரால்' படத்தைப் பார்த்ததில இருந்து எந்தநேரம் பார்த்தாலும் உவன் நாட்டைப் பற்றின கதைதான். தன்ரை வகுப்பிலயும் அந்தப் படத்தையும், எங்கட பிரச்சினையைப் பற்றியும் speech (மொழியாற்றலை வளர்க்கிறதுக்கு தாங்கள் விரும்பின ஒரு தலைப்பைப் பற்றி ஒவ்வொருவரும் மாதம் ஒருக்கால் வகுப்பில தொடர்ச்சியாய் பேச்சு செய்யோணுமாம்) பண்ணினவர். கேட்கிற கேள்வியளுக்கு பதில் சொல்லிக் களைச்சிடுவீங்கள்', தாய் சொன்னா.

'இதென்னம்மா! நீங்கள் இஞ்சை பிறந்து, வளர்ந்தனீங்கள். இது அங்கை பிறந்த பிள்ளைக்கு தன்ரை அடையாளம் பற்றின கேள்வியள், விசாரணைகள் எழலாம் தானே!', எண்டு நான் சொல்லிக் கொண்டிருக்கேக்கிள்ளை சுவரில கொளுவிக்கிடந்த கலண்டரோட பொடியன் வந்திருந்தான். அதில இருந்த படங்களைக் காட்டி என்னைக் கேள்வியள் கேட்டான் எண்டு சொல்லேலாது. எல்லாத்தையும் தானே சொல்லி, ஓமெல்லோ எண்டு மட்டும் என்னைக் கேட்டான்.

தியாகி திலீபன், அன்னை பூபதி, மாலதி, மில்லர் உட்பட 'சீ-ரைகர்' மாமா எண்டு கனபேரையும் பொடியன் கலண்டரில காட்டினது மட்டுமில்லாமல், எங்கட தேசியக் கொடியை அலங்கரிக்கிற நிறங்களையும் விளங்கப்படுத்தினான். எனக்கு தாய்நாடு குறிச்ச அந்த 7 வயசின்ரை ஈடுபாடு, மனசில இனிமேல் இல்லையெண்ட சந்தோசத்தைத் தந்திச்சிது. பொங்குதமிழ் பாட்டெல்லாம் பாடிக் காட்டிச்சிது பொடியன்.

'தாத்தா! நான் புலிமாமாவைப் பார்க்கலாமே?'. 'இதென்ன தம்பி கேள்வி ! வெளிக்கிடும். உந்த ஏ9 இல போய்நிண்டால் எத்தினை புலிமாமா, மாமிக்களைப் பார்க்கலாம். உமக்கு ஆரோட கதைக்கோணுமோ அவையளைக் காட்டும். நான் மறிக்கிறன். என்னை மீறி ஆராவது ஏ9 வீதியைக் கடந்திடுவினமே! துலைச்சுப்போடுவன், துலைச்சு. வாரும்!'. 'ஐயோ! உங்களுக்கு நான் சொல்லிறது விளங்கேல்லை!', எண்டு சொன்ன பொடியன்ரை விருப்பத்தை தாய் எனக்கு விபரிச்சா.

'அவர் புலி மாமா எண்டால் அது தலைவரைக் குறிக்கும். மற்றாக்களுக்கு போராளி மாமா, மாமி எண்டு பெயர். அங்கை வெளிக்கிட்டதில இருந்து ஒரே சொன்னபடி, தலைவரின்ரை மடியில ஒரேயொருக் கால் இருக்கோணுமாம்'. தாய் சொல்லிக் கொண்டிருக்கேக்கிளையே அவருக்கு வெட்கம் வந்து, கவலையில முகம் கொஞ்சம் நீளிற மாதிரியும் ஆகீட்டிது. 'தம்பி! உம்மட ஆசை எனக்கு விளங்கிது. தலைவருக்கும் உங்களை மாதிரி சின்னப்பிள்ளையளைப் பார்க்க விருப்பமாய்த்தான் இருக்கும்.

ஆனால், யோசிச்சுப் பாருங்கோ! உம்மை மாதிரியே அவரைப் பார்க்க விரும்பிற சின்னப் பிள்ளையளையெல்லாம் அவர் சந்திச்சுக்கொண்டிருந்தால் அவருக்கு திட்டங்களைப் போடிறதுக்கு நேரம் இல்லாமல் போயிடுமெல்லோ. நாளைக்கு ஆமி சண்டையைத் தொடக்கேக்கிளை என்னண்டு திருப்பத்தாக்கிறது எண்டெல்லாம் இப்பையே எல்லாம் ஆராய்ஞ்சு திட்டங்கள் போட்டு வைச்சிருந்தால் தானே நாங்களெல்லாரும் வெல்லலாம். அப்ப சொல்லும் பார்ப்பம்: தலைவர் மாமா அர்ஜுனைச் சந்திக்கோணுமோ? இல்லாட்டி போதுமான நேரமெடுத்து திட்டங்கள் போட்டு எங்களை வெல்ல வைக்கோணுமோ?'.

'ம்... இல்லை அவர் ஆறுதலாய் பிளானுகள் போடட்டும். இருந்தும் ஒரேயொரு உக்குறுட்டிணி நிமிசமெண்டாலும் அவரைப் பார்த்தால் காணும்', எண்ட பெருமூச்சு அந்த சின்ன இதயத்துக்குள்ளை இருந்து வந்திச்சிது. அப்பிடியே இருந்து கனநேரம் கதைச்சிட்டு திரும்பிட்டன். இருந்தாலும் மனசுக்கு ஏதோ ஒரு மாதிரி இருந்திது. தலைவரைப் பார்க்கோணும் எண்டு எல்லாருக்கும்தான் ஆசை. ஆனால் அதுக்கு நான் என்ன செய்யிறது! பேந்து வெளியால போனநேரம் ஏதோ யோசினையில புத்தகக்கடையில தேசியத்தலைவர் சிரிச்சவடி நிற்கிற படம் போட்ட குறிப்பேடு ஒண்டை வேண்டிக்கொண்டுபோய் அந்தப் பொடியனிட்டை குடுத்திட்டு சொன்னன், 'இது உமக்குத்தான் ரெலிபோண் நம்பர்கள் எழுதிவைக்கலாம். கனடாவுக்குப்போய் நல்லாய் படிக்கோணும். நாட்டை மறக்கக்கூடாது'.

வெறும் 16 ரூபாவுக்கு ஒரு சின்ன முகத்தில இப்பிடியொரு சந்தோசத்தைப் பார்க்கலாமெண்டு சத்தியமாய் நான் நினைச்சிருக்கேல்லை. கொஞ்சநேரத்துக்கு அவரின்ரை கால் தரையில முட்டாத சந்தோசம். அந்த வளவு, வாய்க்கால் எல்லாம் துள்ளியடிச்சு அந்தக்குறிப்பேட்டைக் கொண்டுதிரிஞ்சு உள்ள எல்லாருக்கும் காட்டி, பின்பக்கத்தில இருந்த மாவீரரில தனக்குப் பேர் தெரிஞ்சிருக்காத ஆக்களையும் விசாரிச்சு ஒரே அல்லோலகல்லோலம்.

'புலிமாமாவின்ரை படம் போட்ட டயறி! ஹூ...', எண்டுகொண்டு அடுத்த பள்ளிக்கூட விடுமுறைக்கு திரும்ப வாறதாய், என்ரை விலாசமும் அந்தக் குறிப்பேட்டில எழுதிக் கொண்டு, அண்டைக்கு பயணம் வெளிக்கிட்டார். வெற்றுப்பெருமை பேசத்தான் எட்டுக்கோடி எண்டு நினைச்சுக் கவலைப்படிறனான். ஆனால் இந்த ஈழமண்ணுக்கெண்டு ஒரு தனித்துவமும், தலைமையும் இருக்கெண்டு மனம் சந்தோசப்பட்டிது. அந்த உணர்வும், தலைமை மீதான பற்றுறுதியும் உலகம் முழுக்க எங்கட இனமக்களிட்டை வியாபிச்சிருக்கு. இல்லாட்டி எங்கையோ பிறந்ததொரு பிள்ளைக்கு என்னண்டு 7 வயசிலையே இந்த மண்ணோட அப்பிடியொரு பிடிப்பு வரும்! அந்தப்பெற்றோருக்கு நன்றி சொல்ல மனம் சம்மதிக்கவில்லை. ஏனென்றால் அவ்வளவிற்கு நம் தாயக அன்னையின் மகளில் ஒருத்தியாய், ஆரென்று அறியாமலிருந்தும் சகோதரியாய், உறவாய் தன் சந்ததியையும் வேர்களுக்கு நெருக்கமாக அவள் வளர்த்திருந்தாள். உறவுகளுக்கிடையில் நன்றி பேசுதல் வழக்கில்லை! சரி நான் வெளிக்கிடப் போறன். பேந்து சந்திப்போம்!

# மனிதன் மனிதனாகவே வாழட்டும்

ஒரு தனி மனிதன் நடத்தைகள் நெறிப்பட்டன வாக, ஒழுங்குற அமைவனவாக அமைய வேண்டும் என்பதாகப் பலரும் விரும்புகின்றனர். பிறக்கும்போது தனியனாகப் பிறந்தவன் இறக்கும்போதும் தனியனாகவே போகின்றான். வாழும் காலத்தில் மனிதன் உருவாக்கப்படுகின்றான். உருவாகிக் கொள்கின்றான். சமூகத்தில் வாழும்போது ஒருவன் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தனிப்பட்டவன் வாழ்வின் மீது பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒழுக்கப் பண்புடன் அமைதியாக வாழ்வை ஓட்டிக்கொண்டவன் இப்போது ஏன்? இப்படி நடந்துகொள்கின்றான்? அவனுக்கே எங்கே நிம்மதி? மனித உள்ளத்துக்கே நேர்ந்த இந்தத் துன்பத்துக்கு மருந்து என்ன? நல்லதோர் உலகை அவன் காணவே முடியாதா? பிறந்தது முதல் மரணம் வரை , எத்தனையோ விதமான நடி பங்குகளை மனிதன் ஏற்று நடிக்கின்றான்.

உண்மையானவை எத்தனை? போலியானவை எத்தனை? மதிப்பீடுகளும் மறுத்துரைப்புகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

எவ்வாறெல்லாம் மனிதன் வாழ்கிறான்? ஆம்! அனுபவம் கற்றுத் தருகின்ற பாடத்தை அறிவு கற்றுத் தருவதில்லை. இந்தச் சமூகத்தில் எப்படியான பட்டங்களையெல்லாம் தன்னகத்தே சூடி மௌனம் காத்து, மடக்கி அமுக்கும் போது திமிறிக் குரல் கொடுத்து, நொந்து, மனம் வாடி வாழ்வின் அர்த்தங்களையெல்லாம் பறி கொடுத்தவர்கள் ஏராளம். ஆயினும் அவனுக்குள் நம்பிக்கை என்பது தான் பிரகாசிக்கின்றது. உலக வரலாற்றை எழுதி முடித்த ஒரு பெரிய சரித்திர ஆசிரியரிடம், மனித வரலாற்றில் அவர் அறிந்த மிகச் சிறந்த பாடம் எது என்று கேட்டார்கள். அவர் சொன்னார் "எப்போது வானம் இருள் படர்ந்து மிகக் கறுப்பாக்கிறதோ அப்போது நடசத்திரங்கள் தலை காட்டுகின்றன" இங்கே ஒருவரின் வாழ்வில் விபத்து ஏற்பட்டு, ஏற்படுத்தப்பட்டு பெருந் துன்பத்தில் ஆழ்கின்ற போது நம்பிக்கையே ஒளி காட்டுவதாக அமைகிறது.

மனிதன், மனிதனையே அடிமைப் படுத்துகின்றான். தனியாள் வேறுபாடுகள் ஒரு கையில் ஐந்து விரல்கள் போன்றவை. இவ்வேறுபாடுகள் வழி சாதி,சமயம், அந்தஸ்து போன்ற இன்னோரன்ன விடயங்கள் வழி வில்லங்கப் படுத்துகின்றான். மனிதனை மனிதனே வஞ்சிக்கின்றான். தொந்தரவுகள் கொடுக்கின்றான். இச்சந்தர்ப்பங்கள் பகைமை உணர்வைத் தோற்றுவிக்கின்றன. "விழுந்து கொண்டிருக்கின்ற வேலியை எல்லோருமே தள்ளுவார்கள்" என்பது சீன ஞானி ஒருவர் சொன்ன வாசகம். ஒரு மனிதன் தனித்து நொந்து வாழும் போது, தன் பங்கிற்கு எல்லோரும் சேர்ந்து ஆளாளுக்கு துன்பத்தை விளைவிப்பார்கள் இது யதார்த்தமானதும் கூட.

தாய் தந்தையரைப் பேணுதல் தலை சிறந்த கடமை. முதியோர் இல்லங்கள் தோற்றம்பெறக் காரணம் மனிதம் மலிவாகி அற்றுப்போய்விட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் பொறுப்புக் களைத் தாங்கும் வலிமையினை இயற்கை கொடுத்திருக்கிறது. கடமைகள் கட்டாயம் செய்யப்பட வேண்டியன. தவிர்க்க முடியாதன. அதன் பின்னே எம்மாலான பணிகள். இவை ஒரு தனிமனிதனை பரிகாசம் செய்து பெருந்துன்பத்திற்குள்ளாகாமல் இருக்கவேண்டுமே. மனித சமூகம் அனைத்தின் நன்மைக்காக நாம் பிறந்துள்ளோம் என்றே கருதவேண்டும். நாம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை.

ஒருவனுடைய சக்தி மிகவும் அதிகமானதாக இருக்குமானால், அதாவது அவனது அதிகாரம் உயர்ந்தாக இருக்குமானால், அவன் தன்னுடைய எண்ணத்தை மற்றொருவர் மீது தணிக்கலாம். பாரத்தைச் சுமக்கின்றவன் பாரிய துன்பங்களை எதிர் நோக்கலாம். ஒரு நேரம் அவன் இறந்து கூடப் போகலாம். இவ்வாறான கொடுமையான துன்பங்களைச் செய்பவர்கள் ஏதோ ஒருவித காரணத்துக்காகவேனும் வருந்த வேண்டியிருக்கும்.

ஒருவன் இன்னொருவனைப் பயமுறுத்தும் போது, பயமுறுத்தப்படுகின்றவனின் போகத்திற்கும் வெறுப்புக்கும் ஆளாகிறான். தொடர்ந்து மிரட்டலுக்கு ஆளாகின்ற எவரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் திருப்பித் தாக்கவே செய்கின்றனர். நடத்தைக் கோலங்கள் மாறுபாடடைகின்றன.


மனிதன் தனது புத்திசாலித்தனத்தையும், எண்ணத்தையும் இன்று தவறாகப் பயன்படுது கின்றான். இதனாலேயே சமூகத்தில் தீமையான விளைவுகள் ஏற்படுகின்றன. சக மனிதனது வாழ்வையும் மனதையும் பாதிக்கின்றன. இதனால் அந்தக் குடும்பமே பாதிப்படைகிறது. வாழ்வை நாசமாக்கிதமல்லாமல், அவனுக்கேற்படும் விளைவுகளைப் பார்த்து ரசித்து, அதற்கும் பல்வேறு பெயர்களில் பட்டங்களைச் சூட்டி தான் தப்பித்துக் கொள்கின்றான்.

வாழ்க்கையில் நாம் ஆசைப்பட்டுத்தேடும் பணம், அதிகாரம், பெருமை எல்லாமே நாம் இறந்துபோன பின் நம்முடன் வரக்கூடியவை அல்ல. வாழுங் காலத்தில் பிற மனிதர்களை கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் சிறுவேலைகள் செய்து காலம் போக்குதல் அபத்தமானது. இந்த உலகம் ஒவ்வொருவரும் எப்போது கீழே விழுவார்கள் என்பதாக எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. ஏனெனில் அவர்கள் மீது ஏறி ஓடுவதற்காக.

ஒருவனுக்கு ஆன்மீகம் இன்றியமையாதது வழிகாட்டி. ஒரு தொட்டியில் உள்ள தெளிந்த நீரில் இரண்டு தங்க மீன்கள் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தன. இரண்டு மீன்களும் கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பதைப் பற்றித் தீவிரமாக விவாதித்துக்கொண்டன. கடைசியில் ஒரு மீன் ஆத்திரத்துடன் ஒரு கேள்வி கேட்டது. "கடவுளே இல்லை என்றால், இப்போது இந்தத் தொட்டியில் உள்ள நீரை யார் மாற்றிவைக்கப் போகிறார்கள்? கடவுள் இல்லை என்பதாக வாதிப்போர், முதல் என்ற ஒன்று இல்லாமலே இரண்டாவதையும், சக்தி என்பது இல்லாமலே செயல் நடப்பதையும், சிந்திக்கிறவன் இல்லாமலே சிந்தனை தோன்றுவதையும், சூனியமான ஒன்று சூனியத்திலிருந்து ஒன்றைத் தோற்றுவிப்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தாய் தந்தையரைப் பேணுதல் தலை சிறந்த கடமை. முதியோர் இல்லங்கள் தோற்றம்பெறக் காரணம் மனிதம் மலிவாகி அற்றுப் போய்விட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் பொறுப்புக் களைத் தாங்கும் வலிமையினை இயற்கை கொடுத் திருக்கிறது. கடமைகள் கட்டாயம் செய்யப்பட வேண்டியன. தவிர்க்க முடியாதன. அதன் பின்னே எம்மாலான பணிகள். இவை ஒரு தனிமனிதனை பரிகாசம் செய்து பெருந்துன்பத்திற் குள்ளாகாமல் இருக்க வேண்டுமே. மனித சமூகம் அனைத்தின் நன்மைக்காக நாம் பிறந்துள்ளோம் என்றே கருதவேண்டும். நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை.

ஒரு மனிதனைப் பல்வேறு குற்றங்களைச் சுமத்தி தண்டனை வழங்குகிறது சட்டம். சட்டத்தின் முன் அனைவரும் சமன். ஆயினும், எத்தனைபேர் குற்றம் செய்து தண்டனை பெறுகிறார்கள்? எத்தனை பேர் குற்றமிழை யாமல் தண்டனை பெறுகிறார்கள்? குற்றமிழைத்தவர் எத்தனை பேர் தப்பித்துக்கொள் கிறார்கள்? சமூகம் முழுவதும் ஒரு தனிமனிதனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, இல்லாத, பொல்லாத சுமைகளை ஏற்றும் நிலை எப்போது மாறும்? ஒருவன் எளிமை யான உணவை உண்பது குற்றமாகாது. மனிதனை கெடுக்கும் எளிய எண்ண[illegible] எண்ணுவதே குற்றமாகும்.



மனிதன் மனிதனாகவே வாழட்டும். அவனது மனிதத்தை, சுயத்தை பறிக்கும் பணியே வேண் டாம். ஒழுக்கமாக வாழ்ப வனே சிறந்த போதகன். தனிமனிதன் எப்பணியைச் செய்தாலும், நினைத்தாலும், கூறினாலும் பல்வேறு குற்றப் பத்திரிகைகளை வாசித்து அவனை அவனாக வாழ விட மறுக்கின்றோம். இந் நிலை மாறவேண்டும். நேர்மை என்ற முத்திரை பதித்த முகங்களாக நமது முகங்கள் ஒளி வீசட்டும். அதுவே ஒளி வீசும் பிறரை மயக்கும் உண்மையான அழகு.

மாதங்கி

# நகரமயமாக்கம்

'மேம்பாடு' எனும் கருத்தாக்கத்தினுள் நகரமயமாக்கம்-நகரத்துவம் (Urbanisation and Urbanism)எனும் வளர்ச்சி நிலைக் குறிகாட்டிகளின் முக்கியத்துவம் இன்று உணரப்பட்டு வருகின்றது. நவீனத்துவம் நகரமயமாக்கம் ஆகிய பல்வேறு அபிவிருத்திப் பாங்கான முன்வைப்புகள் கிராமிய ரீதியிலும், சமுதாய ரீதியிலும் முன்னெடுக்கப்படுகின்றன. கைத்தொழில் புரட்சியோடு ஆரம்பமாகிய நகரமயமாக்கமானது இருபதாம் நூற்றாண்டில் ஓர் உலக முறைமையாகக் காணப்படுகின்றது. கைத்தொழில் தொழில் மயமாக்கம் அடைந்த நாடுகள் அனைத்திலும் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் நகரப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். நவீன நகர வாழ்வானது நகரத்தில் வாழ்வோரை மட்டுமன்றி, அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்குள்ளாக்கின்றது.

1900 ஆம் ஆண்டிற்கு முன்பு அநேகமான நகர அமைப்புகள் மேற்குலகிலேயே காணப்பட்டன. ஆயினும் கடந்த ஐந்து தசாப்தங்களில் மூன்றாம் உலக நாடுகளில் பல்வேறு நகரங்கள் தோற்றம் பெற்றன. உலக சனத்தொகை வளர்ச்சியோடு ஒப்பிடும் போது நகர சனத்தொகை வளர்ச்சி மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீட்டின்படி 1975 இல் உலக சனத்தொகையின் 39 வீதமானோர் நகரத்தில் வாழ்ந்தனர். இத்தொகை 2000 ஆம் ஆண்டளவில் 50 வீதமாகும் எனவும்; 2025 இல் 63 வீதமாகுமெனவும் கணிப்பிடப்பட்டுள்ளது; அத்துடன் இக்காலப் பகுதியில் இதன் 50 வீதமான சனத்தொகை கிழக்கிலும், தெற்காசிய நாடுகளிலும் காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நகரத்தில் மக்கள் பெருந்தொகையாக வாழ முற்படும் நிலைமையே நகரமயமாக்கம் எனப்படும். எமது நகரங்கள் பேச்சளவில் மட்டுமே நகரமாகத் திகழ்கின்றன. நகரத்துக்குரிய முன்னேற்றங்களையோ, வாழ்விட வசதிகளையோ இவை மிகக் குறைந்தளவிலேயே கொண்டிருக்கின்றன.

நவீன உலகின் மிகப் பிரதான அம்சமாக நகரமயமாக்கம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் நகரங்களானவை நீண்ட காலத்தில் தோற்றம் பெற்றன. ஆனால் இந் நூற்றாண்டில் மிகக்குறுகிய காலத்தில் மிக விரைவான நகரமயமாக்கம் ஏற்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது. எனவே இது தொடர்பான சிந்தனைகள் சமூகம் சார் அறிஞர்கள் மத்தியில் தோற்றம் பெறலாயிற்று.

நகரம் எனும் கருத்துக்குப் பல்வேறு நிலைமைகளில் நாம் அர்த்தம் கொள்கின்றோம். சமூக, பொருளாதார மேம்பாட்டு நிலைகளின் களமாகக் கூட எம்மிடையே இனம் காணப்படுகின்றது. சமூகவியல் நோக்கில், தங்களது தேவைக்கான உணவு உற்பத்தியை மேற்கொள்ளாத, பெருந்தொகை மக்கள் நிரந்தரமாக வாழும் பிரதேசமே நகரம் எனப்படும். நகரமயமாக்கம் என்பது கிடைக்கக் கூடிய மிகையுணவு உற்பத்தி (Availability of a Food Surplus) என்பதிலேயே தங்கியுள்ளது.

விவசாயிகள் தமது சுய தேவைப் பூர்த்தி மட்டத்திற்கு மேலாக உற்பத்தி செய்கின்ற போதே, ஏனைய பெருந்தொகையான மக்கள் விவசாயத்தைக் கைவிட்டு,அதற்குப் பதிலீடாக வேறும் பல விவசாயம் சாராத, தங்கள் சிறப்பானது எனக் கருதும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். இவ்வாறான செயன்முறைகளில் ஈடுபடுவோர் விவசாயிகள் போன்று அல்லாது மிகவும் குறைவான நிலப்பரப்பில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறே ஆரம்பத்தில் நகரங்கள் தோன்றின.

ஆயினும் நகரத்தின் வளர்ச்சியும் பரம்பலும், கைத்தொழில் புரட்சியின் தூண்டுதலுக்கு உள்ளானது. கைத்தொழில் புரட்சியானது, வீதிகள், புகையிரதப் போக்குவரத்து, விமானசேவை, கப்பல் போக்குவரத்து போன்ற வசதிகளில் அதீத வளர்ச்சி ஏற்படுத்தியதோடு,தொழில்நுட்ப வளர்ச்சியானது, குளிரூட்டல், தகரத்தில் அடைத்தல், இரசாயனப் பொருட்களின் பாவனை என்பவற்றினூடாக சேமிப்பு முறைமைகளையும் உருவாக்கியது.

எமது நகரம் தொடர்பான வாழ்வு முறைகள் கைத்தொழில் ரீதியானவையும், வர்த்தக மையங்களாகவும் வளர்ந்து வரக் காண்கின்றோம். நிலங்களின் அளவுகள் குறைவதுடன் கடும் போட்டி நிலைமைகளூடான விலையேற்றங்களே உடமைகளைத் தீர்மானிப்பதாய் அமைகின்றன. நகரம் தொடர்பான ஆய்வில் சமூகம் சார் அறிஞர்கள் நிலப்பயன்பாடு பற்றி மட்டும் கவனம் செலுத்தவில்லை. மாறாக சமூக ஒழுங்கமைப்பு, வாழ்வுமுறைமை, நகர வாழ்வின் சமூக, பொருளாதாரத் தாக்கங்கள் என்பவை பற்றியும் கருத்தில் கொள்கின்றனர்.

நகரச் சமூகவியல் பரப்பில் றொபேட் பாக் (Robert park), ஏணெஸ்ற் பேகெஸ் (Urnest Burgess) லூயிஸ் வேத் (Louis wirth) என்போர் முன்னோடிகளாக விளங்குகின்றனர். இவர்களாலேயே நகரச் சமூகவியல் தொடர்பான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இவர்கள் இரு பிரதான அணுகுமுறைகளை முன் வைத்தனர்.park, "Ecological Approach" (உயிரினச் சூழலியல் அணுகுமுறை) என்பதனையும்; "Wirth, Urbanism As a Way of Life", (நகரத்துவம் ஓர் வாழ்வு முறைமை) என்பதனையும் முன் வைத்தனர்.

**நவீன மனிதனின் வாழ்விடமாகவோ அல்லது தொழில் தளமாகவோ மட்டும் நகரம் விளங்குவதில்லை. நகரமானது அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வாழ்வு முறைகளைக் கட்டுப்படுத்துகின்ற, அவற்றுக்கு இடையே இடைவினையினை ஏற்படுத்துகின்ற மையமாக விளங்குகின்றது.**

நகரம் என்பதனுள் சூழல் என்பதன் தாக்கம் முதன்மையாகக் கவனிக்கப்படவேண்டியது. சூழல் பாதுகாப்புப் பற்றிய பிரதிமையை எம்மவரிடையே தோற்றுவிப்பதற்கு காலாக அமைவது அறிஞர்கள், உயிரினச் சூழ்லியல் (Urban Ecology), எனும் பதத்தினில், பௌதீக விஞ்ஞானத்திலிருந்து பெற்று, அதனை நகர நிலைமையினை விளக்குவதற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

மனித குடியிருப்புக்களின் பௌதீக ஒழுங்கமைப்பின் மீது (physical Arrangement) தாக்கம் செலுத்துகின்ற, இயற்கையான சமூக சூழல் காரணிகள் மீது நகர ஆய்வு தொடர்பான உயிரினச் சூழலியல் அணுகுமுறை (Ecological Approach) கவனம் செலுத்துகின்றது. இயற்கை சூழலில் வேறுபட்ட உயிரினங்கள் வாழ்கின்ற போது, அச்சூழலில் வாழும் உயிர்களிடையில் ஓர் சமநிலை (Equilibrium) காணப்படுகிறது. இவ்வாறே, இவ்வணுகுமுறையினை முன் வைத்த ஆய்வாளர்கள் நகரக் குடியிருப்புக்கள் மத்தியில் வாழ்கின்ற மக்களிடையே ஓர் சமநிலை நிலவுக்கின்றது என்பதனை விளக்குகின்றார்கள். இது எவ்வளவுக்கு உண்மையென்பது கூட ஆய்விற்குரியதே.

நகரங்கள் எழுமாற்றாகத் தோன்றியவை அல்ல, மாறாக சூழலின் சாதகத் தன்மைகளை மையமாக வைத்தே அவை உருவாகின. இயற்கையான சூழலில் போட்டி, உட்புகுதல், வெற்றி பெறுதல், (Competition, Invasion, Succession) என்பவை மூலமாகவே நகரங்கள் உருவாகின்றன. இருப்பிட அமைவின் தன்மை, மீள் இருப்பிட அமைவு, நகர்வு என்னும் அம்சங்கள் (Location, Relocation, Movement) நகரச் சூழலில் சமநிலையினைப் பாதிக்கின்றன.

நவீன நகரங்கள் ஆரம்பத்திலே உருவாகிய போது மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல், உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்தல் என்பனவற்றிற்கு வசதியான பகுதிகளிலே தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றன. மக்கள் கூட்டங்கள், தொழில் இடங்களைச் சூழக்குடியேறின. இப் பகுதியில் மக்கள் வாழ்ந்து வெவ்வேறுபட்ட இயல்புகளை உள்வாங்கிக் கொண்டனர்.

அபிவிருத்தி அடைந்த தேவைகள் கவர்ச்சி மிக்கவையாக மாறின. போட்டி நிலைமைகள் தோன்றின. நிலத்தின் பெறுமதியும், வரியின் அளவும் உயர்ந்தது. இவை அனைத்தும் மக்கள் நகரின் மத்திய சூழலில் வாழ்வதில் பல சிக்கலைத் தோற்றுவித்தன. தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வகையில் புறநகர் தோற்றம் பெறலாயிற்று. நகரங்களின் நெருக்கமான குடியிருப்புகள் சமூக ஒழுங்கைப் பெரிதும் பாதித்த வண்ணமிருந்தன.



நகரச் சமூகவியலாளர்களின் கருத்துக் கணிப்பில் நகரின் உள்ளக வேறுபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்கள் இருந்திருக்கின்றார்கள். மாறாக, நகரத்துவம் ஒரு சமூக நிலை (Social existance) என்பதற்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றனர். நகரத்துவம், நகர வாழ்வின் இயல்பும் கருத்தும் என்பதே இவர்களது வாதமாக முன் வைக்கப்படுகின்றது.

**இனியவள்**

சமகால நகரம் என்பது முழுமையாக மக்கள் தொகை எனும் கருத்தினை /காரணியினை மட்டும் வைத்து அளவிடப்படுவதில்லை. மாறாகப் பண்பாடு, கலாசாரம், சமூக உறவு, சமூக வாழ்வு என்பவற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகளை அடிப்படையாக வைத்தே ஆராயப்படுகின்றது. நவீன மனிதனின் வாழ்விடமாகவோ அல்லது தொழில் தளமாகவோ மட்டும் நகரம் விளங்குவதில்லை. நகரமானது அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வாழ்வு முறைகளைக் கட்டுப்படுத்துகின்ற, அவற்றுக்கு இடையே இடைவினையினை ஏற்படுத்துகின்ற மையமாக விளங்குகின்றது.

நகர மக்களின் இடைவினைக் கோலங்கள் வித்தியாசமானவை. மரபு ரீதியான கிராமங்களில் மக்களிடையே நெருங்கிய உறவும், தனிப்பட்ட முறையிலான அறிமுகமும் காணப்படும். இதற்கு முற்றும் மாறுபட்டதாக நவீன நகரத்தில் அறிமுகம் அற்ற தன்மை (Impersonality) காணப்படும். நகரவாசிகள் இடையே உறுதியான இடைவினை இடம் பெறுவதில்லை. நகர மக்களின் நகர்வு (Mobility) வேகம் அதிகமாக இருந்தாலும் அவர்கள் இடையேயான பிணைப்பு மிகவும் நலிவுற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. இந்நிலையினை வேத் எனும் அறிஞர் விளக்கும் போது, நகரமக்களை 'அறியப்பட்ட அந்நியர்கள்' (Familier Strangers) எனக் குறிப்பிடுகின்றார்.

நகரச் சூழலில், அன்றாட வாழ்வில் அறியாத நிலை (Impersonality) என்பது சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாததாகின்றது. பொதுவாக இந்நிலைமை சமூக வாழ்வின் உண்மை நிலையாகும். நகரத்துவம் சமூகத்தின் ஓர் பகுதி அல்ல. மாறாக இது பரந்துபட்ட சமூக அமைப்பினை வெளிப்படுத்துவதோடு, செல்வாக்கும் செலுத்துகின்றது. பல்வேறுபட்ட அரசியல், சமய, சமூக, பொருளாதார, இனப் பின்னணியினைக் கொண்ட மக்கள் ஒன்று சேர்கின்றபோது, பல்வேறுதுணைப் பண்பாடுகளும், துணைச் சமூகங்களும் உருவாக வழிபிறக்கின்றது.

பாரிய நகரம் அந்நியர்களின் உலகமாகும். (World of Strangers). வேறுபட்ட அந்நியர்கள் நகரில் வாழ்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் 'அறிமுகமாகாத நண்பர்கள்' (Potential Friends). பரந்துபட்ட வாழ்க்கை வடிவங்கள் (life styles), ஆர்வங்கள் என்பவை மட்டில் மக்கள்; உள்ளக, வெளி நகர்வுகளில் பங்கு கொள்கின்றனர்.

மாக்சிய கோட்பாட்டாளர்களான; டேவிட்காவி (David Harvey), மனுவல் காசில்ஸ் (Manuel Castells) என்பவர்கள், நகரத்துவம் என்பது உருவாக்கப்பட்ட சூழல் (Urbanism and the created enuironment), என வாதிடுகின்றனர். கைத்தொழில் மய முதலாளித்துவம் (Industrial capitalism) என்பதன் மூலம் உருவாக்கப்பட்ட சூழல் இயல்புகளில் ஒன்றாக நகரத்துவம் கொள்ளப்படுகிறது. நகரமயமாக்கற் போக்கில், பாரிய தொழிற்சாலைகளைக்கட்டுதல், தொழில்நுட்ப ரீதியான உற்பத்தி, அபிவிருத்தி, ஆய்வுத்திட்டங்கள் போன்ற அனைத்தும், அரச ,தனியார் துறைகளால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயல் முறை நகரமயமாக்கத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்துகின்றது.

நகரம் என்பது, 'நகரப்பகுதி' எனும் குறிப்பானதோர் அமைவிடத்தினைக் குறிப்பது அல்ல. மாறாக இது 'கூட்டு நுகர்வின்' (collective Cosumption), ஒரு பூரண வடிவம். நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உருவான பொருட்கள், சேவைகளின் பங்களிப்பு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இயற்கை இட அமைவில் மட்டுமன்றி (Natural spatial process) நிலமும், உருவாக்கப்பட்ட

(21ஆம் பக்கம் பார்க்க)

# பணிநிலை வெற்றிடத்திற்கான நேர்முகத்தேர்வு

155 ஆம் கட்டை பாரதிபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவன தலைமைப்பணிமனையில் AUP திட்டத்திற்கு (21 மாதங்கள்) கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு ஆளணி நியமிப்பது தொடர்பான நேர்முகத்தேர்வு 07.09.2005, 08.09.2005 திகதிகளில் புதன்கிழமை,வியாழக்கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் நடைபெறவுள்ளதனால் கீழ் குறிப்பிடப்படும் தகைமையுடையோர் சகல ஆவணங்களுடனும் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**(01) தொழில் நுட்ப உத்தியோகத்தர்:-**

I. அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப சான்றிதழ்.
II. கல்வித்தகைமைச் சான்றிதழ்.
III. ஆகக் குறைந்தது 5 வருடங்கள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
IV. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
V. ஏனைய தகுதிகள் இருப்பின் விரும்பத்தக்கது.

**(02) சிரேஸ்ர வெளிக்கள அலுவலர்:- 03**

I. கல்விச் சான்றிதழ்.
II. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
III. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
IV. அனுபவச் சான்றிதழ்.
V. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(03) நிதி முகாமையாளர்:- 02**

I. கல்விச் சான்றிதழ்
II. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
III. ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
IV. அனுபவச் சான்றிதழ்.
V. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(04) வெளிக்கள அலுவலர்:- 08**

***கல்வித்தகைமைகள்***
I. க.பொ.த.உ/த கற்றிருத்தல் வேண்டும்.
II. முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(05) உளவள/பாலின உதவியாளர் :- 03**

I. இத்துறையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றிய முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
II. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 20 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(06) நிர்வாக உதவியாளர்கள்:- 02**

I. க.பொ.த.சா/த சித்தியடைந்திருத்தல்.
II. நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 45 வயது வரை.

**(07) களஞ்சியப் பொறுப்பாளர்:- 02**

I. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் பயின்றிருத்தல் வேண்டும்.
II. ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 50 வயது வரை.

**(08) கணக்குப்பதிவாளர்:- 02**

I. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
II. கணக்கியலில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
III. ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும்.
IV. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 20வயது தொடக்கம் 40 வயது வரை.

**(09) சமூக அலுவலர்கள்:- 08**

I. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II. ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் கடமையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 25வயது தொடக்கம் 40 வயது வரை.

**(10) காவலாளிகள்:- 03**

I. 08 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
II. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 40 வயது வரை.

**(11) பராமரிப்பாளர்கள்:- 03**

I. ஆகக்குறைந்தது 05 ஆம் ஆண்டு பயின்றிருத்தல் வேண்டும்.
II. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 50 வயது வரை.

***குறிப்பு:-***

01. இருபாலாரும் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கலாம்.
02. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
03. இத்திட்டம் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதால் அந்தந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி.12660)


# கல்வி

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்ற முதுமொழிக்கு அமைய ஒருவன் கருத்தரித்த காலம் முதல் கல்லறை செல்லும் காலம்வரை கற்றுக் கொண்டேயிருக்கின்றான். மனித வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் அவனுக்குரிய சிறப்பான காலமாகவே அமைகின்றது. ஆனால் சிலரோ அவ்வாறு கிடைக்கும் நேரத்தினை தவறான முறையில் பயன்படுத்தி தமது எதிர்காலத்தை வீணடிக்கும் நிகழ்வு தற்காலத்தில் இடம்பெற்றுக்கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இவ்வாறு வீணடிக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் சிறந்த நேர முகாமைத்துவத்தின் கீழ் பயன்படுத்துவதன்மூலம் எமது சந்ததியினர் எதிர்கால அதிமிகு சிறந்த சிற்பிகளாக நாட்டின் தூண்களாக மிளிரவேண்டும்.

கல்வி என்பது தனியே ஏட்டுக்கல்வியுடன் நின்றுவிடாது அனுபவக்கல்வியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏட்டுக்கல்வியானது தனியே நூல்களையும். அவற்றினூடாக வரலாறுகளையும் கற்றுக்கொள்வதாகவே அமைகின்றது. ஆனால் அனுபவக் கல்வியானது வரலாற்றுக் கல்வியுடன் செயன்முறையினையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. அனுபவக்கல்வியே வாழ்க்கையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு முக்கிய தூண்களில் ஒன்றாக அமைகின்றது. மனிதன் தாயின் கருவில் முளைத்து மனித உருப்பெற்று பூவுலகில் புகுந்து தத்தித் தவழ்ந்து நடைபயிலும் காலந்தொடக்கம் தலைநரைத்து பல் உதிர்ந்து தடிபிடிக்கும் காலம்வரை கற்றுக்கொண்டேயுள்ளான்.

ஏட்டுக்கல்வியானது பொதுவாக 5.6 வயது முதல் 50.60 வயதுவரையே தொடர்கின்றான். ஆனால் அனுபவக்கல்வியானது மண்ணுலகிற்குப் புகுந்ததிலிருந்து விண்ணுலகை அடையும்வரை தொடர்கின்றது. அதற்கு மேலும் தொடர்கின்றதோ யாமறியோம்.

ஏட்டுக்கல்வி தொடர்வதற்கு பின்னூட்டியா அமைபவர்கள் பெற்றோர்களும். பாதுகாவலர்களுமே ஆவர். எனினும் குறிப்பிட்ட நபரின் சுய விருப்பமும் முயற்சியுமே அடிப்படையாக அமைகின்றது. இருப்பினும் பெற்றோர் பாதுகாவலர்களின் பின்னூட்டலுடன் சுயமுயற்சியும் இணைந்த ஏட்டுக்கல்வியானது தோல்வியுற்றதாக சரித்திரமே இல்லை. ஆனால் அனுபவக்கல்வியினை மனிதன் அறிந்தும் அறியாமல் தொடர்ச்சியாகக் கற்றுக்கொண்டேயிருக்கின்றான். எனவே கல்வியில் சிறந்து எதிர்காலத்தில் மிளிரும் தமிழீழத்தில் சிறந்த தூண்களாக மிளிர்வதற்கு நேரமுகாமைத்துவத்துடன் கூடிய சிறப்பான கல்வியே சிறந்ததாகும்.

"வறுமை என்பது கல்விக்குத் தடையல்ல. அது கல்வி வளர்ச்சியின் ஆரம்பப்படியும்

ப.கஜேந்திரன்

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூழலும் சமூக, பொருளாதார அம்சங்களோடு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதிலும் கவனம் செலுத்துகின்றது. நவீனத்துவக் கோட்பாடானது, "நகரச்சூழல்" என்பது, மக்கள் வளர்ச்சி, நகர்வு, ஒருங்கிணைவு என்பவற்றின் மையம் எனக் கூறுகின்றது. சமூக அபிவிருத்தியின் ஊக்கியாகப் புலப்படுத்தப் படுகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலும், நகர மையங்களானவை முற்போக்குச் சிந்தனையினைத் தூண்டுபவையாகவும், தனித்துவத்தன்மையினை வலுவூட்டுவதாகவும், மரபு ரீதியான தடைகளைத் தகர்த்தெறிபவையாகவும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. எமது நகரச் சூழல்களில் இவ்வாறான கருத்துக்கள் எவ்வளவிற்கு ஏற்புடையவை என்பதும் கவனத்தில் கொள்ளப் பட வண்டியவை.

நகரமயமாக்கமானது, ஒருபுறம் முற்போக்கு மிக்கதாகவும், முன்னேற்றத்தைத் தோற்றுவிப்பதாகவும் காணப்படுகின்றது. மறுபுறமாக நகரமயமாக்கம் விரும்பத்தகாத விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. வாழ்விட வசதிஇன்மை, வேலையின்மை, சுகாதாரவசதியின்மை, வறுமை, சூழல் மாசடைதல், போக்குவரத்து வசதியின்மை போன்ற பிரச்சினைகளை நகரக் குடியிருப்பாளர்கள் எதிர்நோக்க வேண்டியவராயிருக்கின்றனர்.

எமது தேச நகரங்கள் நகரமயமாக்கத்தின் பின்னணியில் தோற்றம் பெறவில்லையாயினும் பல்வேறு வகையிலான நகரத்துவ சாயல்கள் படித்திருப்பதைக் காண்கிறோம். மென் மேலும் நவீனத்துவப் பாங்கில் எமது நகரங்கள் வளர்த்தெடுக்கப் படவேண்டியன. இந்நிலைமைகள் வரலாற்று ரீதியில், சமகால நோக்கில் பரந்துபட்ட மாற்றங்களினடிப்படையில் ஆராயப்பட வேண்டியன.


# காணி விற்பனைக்குண்டு

*கிளிநொச்சியில் அமைந்துள்ள வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பின்பக்கமுள்ள ஆலயத்திற்கு அருகிலுள்ள 14-பரப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு.*

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**
**கிளிநொச்சி நகரம்,**
**கிராமசேவை உத்தியோகத்தர்,**
**இர[illegible] என்பவருடன்,**
[illegible]

(சி.12658)

வேள்ட் விசன் [illegible]
சுனாமி வீடமைப்பு திட்டம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

# கட்டட ஒப்பந்தக்காரர் பதிவு செய்தல்

சுனாமி வீடமைப்புத்திட்டம் எமது நிறவனத்தினால் தொடங்க விருப்பதனால் இக்ராட் (ICTAD) பதிவு உள்ள ஒப்பந்தக்காரர்கள் தங்கள் விபரங்களைக் கீழ்க்காணும் விலாசத்தில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் 08.09.2005 இற்கு முன்னர் தங்களை பதிவு செய்து கொள்ளும் படி பணிவன்புடன் வேண்டு கின்றோம்.

**எமது வீட்டுத்திட்டம் அமைய இருக்கும் இடங்கள்**

- கோவில் குடியிருப்பு (80 வீடு)
- வட்டுவாகல் (235 வீடு)
- கள்ளப்பாடு தெற்கு (276 வீடு)
- சாளம்பன் (172 வீடு)

மாவட்ட முகாமையாளர்,
வேள்ட் விசன்,
முல்லைத்தீவு.

(6607)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 14

### பகுதி -62




“ஓம்” தலையை ஆட்டியபடியே டிப்ஸ் சொன்னான். எனக்குத் தெரியும்”

நான் அவனது ஒக்ஸ்போட்களின் நூல்களைப் போட்டு அவனிடம் கொடுத்தேன்.

“நன்றி” என்று டிப்ஸ் சொன்னான்.

“ நீங்கள் எப்ப கேட்டாலும் உதவுவன்” பதிலாகச் சொன்னேன்.

அவன் முகத்தில் புன்னகை மலர்ந்து கொண்டது. “ எப்பவும் எனக்கு உதவுவீங்கள்” என்று சத்தம் போட்டுச் சொன்னான். சேவல் கூவுவது போல் கூவிக்கொண்டே செட்டை களை அடிப்பது போல் கைகளை அசைத்தான். பெரிதாகச் சிரித்தான். “ சந்தோசமான டிப்ஸ்” என்றவன் தொடர்ந்து, “ வெளிக்கிடு டிப்ஸ். தண்ணிக்குக் கிட்டப்போ! தண்ணிக்குழாய்க்குக் கிட்டப்போ!” சப்பாத்துக்களைப் போட்டு இறுக் கமாக நூல்களைக் கட்டிக்கொண்ட பின் கெந்திக் கொண்டே தண்ணீர்க் குழாய் தொட்டிக்குப் போய், கதவுகளைத் திறந்து, தண்ணீர்க் குழாயை முழு வேகத்தில் திறந்து விட்டான். சூப்பிப் போத்தலை எடுத்து நீர்க்குழாய்க்குக் கொண்டு சென்று அதற்குள் இருந்த நீரைத் தொட்டிக்குள் ஊற்றிவிட்டு அதனை மீள நிரப்பிக்கொண்டான். நீர் அறையெங்கும் விசிறியடித்தது. குடிக்கும் நீர்க்குழாயைத் திறந்து விட்டு அதன் துவாரத்தை விரலால் அரைகுறையாக அடைத்துப் பிடித்துக் கொண்டு நீர்த் தாரையொன்றை அறைக்குள் பாயச் செய்தான். “ நான் தண்ணிய பீச்சியடிக் கச் செய்யுறன்” என்று கத்திச் சொன்னான். பிறகு தன் சேட்டின் கைப்பகுதிகளை உருட்டி மேலே விட்டுக் கொண்டான். பிறகு சூப்பிப் போத்தலை நிரப்பி சூப்பியை போடமுயன்றான். போட முடியாமல் அது வழுக்கிக் கொண் டிருந்தது.

“சூப்பிய மிஸ் ஏ உனக்குப் போட்டுத் தருவா டிப்ஸ் அவ மறுக்க மாட்டா” என்றான்.

“ நான் உங்களுக்கு அத போட்டுத் தருவன் எண்டு நினைக்கிறீங்களோ?” என்று நான் கேட்டேன்.

“ ஓமோம் நீங்கள் அப்பிடிச் செய்வீங் கள் எண்டு எனக்குத் தெரியும்” என்றவன் போத்தலையும் சூப்பியையும் என்னிடம் தந்தான். நான் சூப்பியைப் போத்தலில் மாட்டி அவனிடம் கொடுத்தேன்.

அவன் எனக்கு நேரே நின்றபடி சூப்பியைச் சூப்பிக்கொண்டே வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்துக்கொண்டிருந் தான்.

“ நீங்கள் என்ன முட்டாள் எண்டு சொல்லுறயில்ல.” என்றவன் தொடர்ந்தான். நான் உதவச் சொன்னா உதவுறீங்க. எனக்குத் தெரியாது எண்டு சொன்னா அது உங்களுக் குத் தெரியுது. என்னால ஏலாதெண்டு சொல்லு றதுகள் உங்களுக்கு ஏலும்”

“அப்ப அது உங்களுக்கு என்ன மாதிரி உணர்வுகளக் கொடுக்குது?” என்று நான் கேட்டேன். கருத்தூன்றிய விதமாக என்னை பார்த்தவன் வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தான். பிறகு நீர்த் தொட்டியை நோக்கித் திரும்பி தண்ணீரை விசிறியடித்தான். சிரித்துக் கொண்டே நிலத்தின் மேலும் வடிமானப் பலகையிலும் நீரை ஊற்றினான். “தொப்பலா நனையவிடு” என்று கத்திச் சொன்னான். தண்ணீர்த் தொட்டிக்குமேலே உள்ள றாக்கை யிலே அழுக்கு நீக்கும் தூள் இருந்த பேணி ஒன்று இருந்ததைக் கண்டுகொண்டான். மேலே ஏறி அதை எடுத்துக்கொண்டான்.

“இந்தப் பேணியில என்ன இருக் குது?” என்று கேட்டான். “அழுக்குப் போக்கிற தூள்” என்றேன். அவன் அதை மணந்து பார்த்தான். பேணியைக் குலுக்கி சிறிதளவு தூளைக் கையில் கொட்டிக்கொண்டான். உற்றுப்பார்த்தான். பின் திடீரென அதை சுவைபார்க்க விரும்பியது போல் அதை வாயில் போட்டுக்கொண்டான்.

நான் திடுக்கிட்டுப்போனேன். “ஐயோ டிப்ஸ்! அது சலவைத் தூள். அத ருசிபார்க் கக்கூடாது!” என்றேன். திரும்பி என்னைப் பார்த்த அவனது பார்வையில் உணர்ச்சிகள் எதுவும் தெரியவில்லை.இந்தத் திடீர் உணர்ச்சி வெளிப்பாடு எனது வழமையான இயல்புக்கு அமைவானதாக இருக்கவில்லை.

“ருசி பார்க்காம அது என்ன ருசி எண்டு நான் எப்படிச் சொல்லுறது” கேட்ட அவன் குரலில் மகிமை தொனித்தது.

“வேறு வழி ஏதும் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை” என்று சொன்ன நான், “ஆனால் நீங்கள் அத விழுங்கக்கூடாது எண்டு தான் நான் நினைக் கிறன். அத வாயிலபோட்டு சுவைபார்க் கக்கூடாது.”



அவன் வாயி லிருந் ததைத் தொட்டிக் குள்துப்பினான். “வாயில கொஞ்சம் தண்ணிய எடுத்து அலசித் துப்புங்கோ” என்றேன். அவன் அப்படியே செய்தான். என்னுடைய பதில் வினை அவனைக் குழப்பிவிட்டிருந்தது. சலவைத் தூளை றாக்கையில் வைத்துவிட்டு உணர்ச்சிகளற்ற பார்வையை என்மீது செலுத்தினான்.

“என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ டிப்ஸ். யோசனையில்லாம நடந்திட்டன் எண்டு நினைக்கிறன். ஆனால்... வாய் நிறையச் சலவைத்தூளை நீங்க போடுறத நான் காண விரும்பயில்ல” என்றேன்.

அவன் உதட்டைக் கடித்தபடி யன்னலை நோக்கிச் சென்றான். அவனுடைய உணர்வுகள் துன்பத்துக்குள்ளாகும்போது அவன் மாட்டிக்கொள்ளும் அவனது கூருணர்வு கவசத்தை மாட்டிக்கொள்ள அவன் தயாராகி விட்டது போலிருந்தது. இறுதியாக அவன் நீர்த்தொட்டியின் அருகில் சென்றான். தண்ணீர்ப் பாத்திரத்தை நீரால் நிரப்பிவிட்டு அதனை வடிமானப் பலகைமீது ஊற்றினான். சூப்பிப் போத்தல்களை நீரில் வைத்து தொட்டியில் நீரை நிரப்பிவிட்டு அவற்றை ஒன்றாகத் துளாவினான். வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே அவற்றைக் கலக்கினான். நீர் முழு அளவு விசையோடு ஓடிக்கொண்டிருந்தது. அவற்றுள் ஒன்றைத் தூக்கிப்போட அதுபோய் நீர்க்குழா யில் மோதியது. “அதுகள் உடைஞ்சு கையில வெட்டப்போகுதுகள்!” என்று உரத்துச் சொன் னான். அதே வேகத்திலேயே, “எனக்காகப் பயந்து போனீங்களா?” என்று கேட்டான்.

ஏற்கெனவே நல்ல தொரு பாடம் படித்திருந்தேன். “உங்கள எப்பிடி காக்கிற தெண்டு உங்களுக்குத் தெரியும் எண்டு நான் நினைக்கிறன்” என்று அவனுக்குச் சொன்னேன். அவன் கண்ணாடிப் போத்தல் களை அகற்றி விட்டு பிளாஸ்ரிக் கோப்பை களை உள்ளே போட்டான்.

“ இந்தா சுத்திச் சுத்திக் கீழே போகினம்” என்று கத்திச் சொன்னான். “சின்னக் கோப்பைகள்... சின்னத்தட்டுகள்... சின்னப் பீங்கான்கள்... வாருங்கோ... தண்ணி யில நீந்துங்கோ. தண்ணிய எடுத்து வீசுங்கோ” என்று மகிழ்ச்சிபொங்கக் கத்திக் கொண்டே கோப்பைகள் நிறைய நிறைய நீரை எடுத்து அறையெங்கும் வாரியிறைத்தான். “ பின்னுக்குப் போங்கோ... பின்னுக்குப் போங்கோ” என்று கத்தினான். உடுப்புகள் கவனம். பின்னால போங்கோ... கவனமாயிருங்க... அல்லாட்டி நீங்க நனைஞ்சு போவீங்கள்”

நான் ஒரு பாதுகாப்பான மூலைக்குள் ஒதுங்கிக் கொண்டேன். டிப்ஸ் தொடர்ந்தும் நீரை வாரியிறைத்துக் கொண்டிருந்தான்.

“ என்ர வாழ்க்கையில ஒரு நாளும் இப்பிடி அற்புதமான குழப்பத்தச் செய்யவில்ல” என்று மகிழ்ச்சியோடு கத்திச் சொன்னான். தொட்டிக்குள் நீர் மட்டம் கூடிக்கொண்டே வந்து வெளியே வழியும் கட்டத்தை எட்டிக்கொண்டி ருந்தது.

“ இஞ்ச பாருங்கோ தண்ணிய என்று கிளர்ச்சி பொங்க உரத்துச் சொன்னான் “தண்ணி வெளியில ஓடுறது நீர் வீழ்ச்சி மாதிரி இருக்கும். தண்ணி நிரம்பி வழியப்போகுது” நீரைப் பார்த்துக் கொண்டே மேலும் கீழுமாய்த் துள்ளியபடி அங்கே நின்றான். கைகளைச் சடாரென்று நீருக்குள் வைத்த அவன் ஈரக் கையால் முகத்தை ஈரமாக்கி விட்டு முகத்தின் மீது சிறிது நீரை அடித்துக்கொண்டான்.

“ ஓ... ஈரமான... ஈரமான தண்ணி. எவ்வளவு குளிராயிருக்கு... எவ்வளவு வேகமா வருகுது...” என்றான். முகம் நீரைத் தொடும் வரை முன்னால் குனிந்து கொண்டே போனான். நீர் வெளியே வழியத் தொடங்கிய உடனேயே நீர்க்குழாயை வேகமாகப் பூட்டி விட்டான்.

“ நான் கொஞ்சத் தண்ணிய வெளி யில அனுப்பப் போறன்” என்று கூறிவிட்டு கோப்பைகளையும் தட்டுகளையும் விசையோடு கலக்கினான். றாக்கையில் இருந்த சிறிய பிளாஸ்ரிக் கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள், கத்திகள் எல்லாவற்றையும் அள்ளி நீருக்குள் போட்டான்.

“ இந்தச் சின்னச் சாமான்கள் வடிகால் குழாய்க்குள்ளால கீழ போய்விடும்” என்றவன் அவற்றை வழித்தெடுத்து வடிமானப் பலகை மீது பரப்பினான்.

“ இந்த விளையாட்டுக் காணும்” என்றவன் தொட்டியின் அடைப்பை எடுத்து விட்டான். நீர் களகளத்துக்கொண்டு கீழே ஓடியது. இப்போது சுடு நீர் வரும் குழாய்க்காகக் கையை நீட்டினான்.

“ அந்த தண்ணி சரியாச் சுடும் டிப்ஸ். முதல் பச்சத் தண்ணியத் திறந்து விடுங்க”

டிப்ஸ் முள்ளுக் கரண்டிகளை மீள ஒழுங்கு செய்தான். பிறகு அவற்றை எண்ணி னான். விரைந்து கையை மேலே தூக்கியவன், சுடுநீர் வரும் குழாயைத் திறந்துவிட்டு விரலால் நீரைத் தொட்டுப் பார்த்துவிட்டுச் சடக்கெனப் பின்னால் இழுத்துக் கொண்டான்.

“ இது சூடாத்தான் இருக்குது!” வியப்புக்குரலில் அவன் சொன்னான்.

“ நீங்களே அதத் தெரிஞ்சு கொள்ள வேணும் எண்டுதானே நினச்சனீங்கள். இப்ப உங்களுக்குத் தெரிஞ்சிட்டுது” என்றேன்.

“ஓம்” என்ற டிப்ஸ் “ சரியான சூடா இருக்கு” என்றான். மேசை மீது இருந்த சூப்பிப் போத்தலை எடுத்துச் சூப்பியை வாயில் வைத்து அதை உறிஞ்சினான்.

(தொடரும்)

---

# முயற்சி...!



மானிடனாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் இலட்சியம் உண்டு. வைத்தியராக, ஆசிரியராக, விஞ்ஞானிகளாக, பாடகராக, எழுத்தாளராக, கவிஞனாக, ஓவியராக வர வேண்டும் என்று ஒவ்வொருவரும் முயற்சி செய்கின்றார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரும் தமது இலட்சியம் நோக்கி பயணித்துக்கொண்டிருப் பார்கள். சிலருக்கு இப்பயணத்தில் சில தடைகள் ஏற்படும். இவர்கள் தடைகள் ஏற்படும்போது துவண்டு விடுகின்றார்கள். இதனால் மேலும் பயணிக்க முடியாமல் போய்விடுகின்றது. “தடைகள் ஒவ்வொன்றும் தடங்கல் அல்ல. வெற்றியின் படிக்கற்கள்”

எனவே நீங்கள் செய்ய வேண்டிய நேரத்தில் உரிய வேலையை செய்யாமல் ஒத்திப் போடுவதனால், சில தடைகள் ஏற்படுவதுண்டு. தடைகள் ஏற்பட்ட பின்னர்தான் “அடடா” இதனை கவனிக்காமல் போய் விட்டோமே!? என்று வருந்தினால் என்ன பயன்?

ஆகவே காரியம் பெரியதானாலும், சிறியதானாலும் ஒத்திப் போடாமல் செய்து முடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

“செயல்கள்தான் தடைகளுக்குத் தீர்வினை உண்டாக்குகின்றன. செயலில்லா மல் வாழ்க்கை இல்லை. செயல்படத் தெரிந்த வனே வாழத்தெரிந்தவனும் ஆகின்றான்”.


பல தடைகளால் ஏற்படும் துயரங் களுக்கு மத்தியிலும், நம்பிக்கையுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். துயரங்களுக்கு மனத்தைப் பண்படுத்தும் ஆற்றல் உண்டு. எனவே நம்பிக்கையே மனதிற்குத் தெம்பூட்டும்.

நாம் இலக்கு நோக்கி பயணிக்கும போது, ஏற்படும் தடங்கலுக்கு பிறர் ஆலோ சனை கூறலாமே தவிர எமக்காக முடிவெடுக் கக்கூடாது. நாம் முடிவெடுத்து அப்பயணத்தில் தடைகள் ஏற்பட்டாலும். அடுத்த முறை முன் அனுபவத்திலிருந்து பலன் பெறலாம்.

ஆனால் பிறர் எமக்காக முடிவெடுக் கும்போது, நாம் அவர்களைச் சார்ந்து நிற்கின்றோம். இதனால் நாம் எதுவும் சாதிப்பதில்லை. உங்களுக்கு சிலர் அக்கறை கொண்டு ஆலோசனை சொன்னாலும் அதற்கு முடிவெடுக்க வேண்டியது நாம்தான். அந்தப் பொறுப்பை நாம் தட்டிக்கழிக்கக் கூடாது.

எப்போதும் காரியங்களை ஒத்திப் போட்டுச் சோம்பலுக்கு இடம் கொடுக்கக் கூடாது. நீங்கள் அனைவரும் தடைகளுக்குள் சிறிது சிறிதாக நுழைந்து வெற்றிபெற முயலுங்கள்!! இதுவே உங்கள் இலட்சியம் நோக்கி வீறுநடைபோட வழிவகுக்கும்.

த.செந்தமிழ்.




**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா!*

*உமக்குப் பிடித்த தாயகப்பாடல் எது?*

*தெ.மோகனதாசன்,*
*புளியங்குளம்.*

செவிவழி இதயத்தைத் துளைத்து ஆத்மாவை வருடும் எல்லாப்பாடலுமே எனக்கு பிடித்த பாடல் தான்.

*பாவலா!*

*பெண்களே பெண்களைப் பழிவாங்குவது பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*கி.செல்வி,*
*கோணாவில்.*

தென்னிந்திய தொலைக் காட்சிகளில் 'மெகா சீரியல்'களைத் தொடர்ந்து பார்ப்பதன் விளைவு தான் அது.

*பாவலா!*

*சனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கா? ரணிலுக்கா? நீர் வாக்களிப்பீர்?*

*லதா,*
*கிளிநொச்சி.*

சிறிலங்காவுக்கான சனாதிபதியை தேர்ந்தெடுக்க தமிழீழப் பிரஜையான நான் ஏன் வாக்களிக்கவேண்டும்.

*பாவலா!*

*கெட்டு குட்டிச்சுவராக போ! என்று திட்டுகின்றார்கள் அப்படியென்றால்?*

*சிவா,*
*பரந்தன்.*

கெட்டுப் போய் தீருவேன் என அடம்பிடிப்பவன் தன்னையோ, தன் குடும்பத்தையோ, சமூகத்தையோ, அல்லது தான் வாழும் நாட்டையோ பாதுகாக்கவல்ல அரணாக இருக்க முடியாது என்பதால்....

*பாவலா!*

*என் மனைவி வருமானத்திற்கு மிஞ்சிச்செலவு செய்கிறாள் என்னசெய்யலாம்?*

*செல்வன்,*
*கனகபுரம்.*

உமக்காக நீரே அனுதாபப் பட்டுக்கொள்ளலாம், அவ்வளவு தான்... வருமானத்திற்கு மிஞ்சிச் செலவு செய்யும் குடும்பம் தன் மானத்தை இழக்கநேரிடும்... அவ்வளவுதான்.

*பாவலரே!*

*சந்திரிகாவை கௌரவப் பிரஜையாக அறிவிக்குமாறு கேட்டுள்ளாரே இது கேட்டு வேண்டுவதா? அதற்கு அவர் தகுதியானவரா?*

*யாழினி,*
*யாழ்ப்பாணம்.*

பிறர் கௌரவத்தை அங்கீகரித்து மதிக்கத்தெரியாதவர்கள் சுய கௌரவத்தை யாசித்துத்தான் பெற வேண்டி வரும்.

*பாவலா!*

*ஆனந்தசங்காரிக்கு அறிவு உண்டா? இல்லையா? அதிரடிப் பதில் தாரும்?*

*தரன்,*
*புதுக்குடியிருப்பு,*

இப்படியொரு அர்த்தமற்ற ஆராய்ச்சியில் இறங்கி தலையைப் பிய்த்துக் கொள்ளும் உமக்கு முதலில் அறிவு உண்டா?

*பாவலா!*

*நடைபெற்றுவரும் மக்கள் எழுச்சி மாநாடு பற்றி?*

*பிரபா,*
*வட்டக்கச்சி.*

தமிழ் மக்களின் எழுச்சி தமிழின விடுதலை விடியலுக்கான அறைகூவலின் அடையாளம்.

*பாவலா!*

*எனது நண்பனின் அறைக்கு போனால் ஒரே சினேகா படம் தான் இவனைப் போன்றோரை என்ன செய்யலாம்?*

*சுரேஸ்,*
*மல்லாவி.*

'சினேகிக்'காமல் விடலாம்....!

*பாவலா!*

*நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்றால் மற்றக் குடும்பங்கள்?*

*ரதி,*
*கிளிநொச்சி.*

'நேர்ஸறி'ப் பாடசாலைகள்

*பாவலா!*

*இராணுவக் கட்டுப் பாட்டுப்பகுதிகளில் இளைஞர்களிடையே அதிகரித்துவரும் கோஷ்டி மோதலின் காரணம்?*

*கௌரி,*
*புதுக்குடியிருப்பு.*

ஒழுக்க கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையே...!

*பாவலா!*

*கடவுள் பற்றி உமது கருத்து?*

*ரமணன்,*
*கோணாவில்.*

கடவுள் இருக்கிறாரா? அது எனக்குத் தெரியாது.

கடவுள் இல்லையா? அதுவும் எனக்குத் தெரியாது.

இது எனது கருத்தல்ல... அறிஞர் இங்கர்சாலின் கருத்து.

*பாவலா!*

*மறைக்க முடியாதது எது?*

*பிரியா,*
*கிளிநொச்சி*

அடக்கப்படுபவனின் எழுச்சியை...




"சீபியெஸ்ஸில ரெண்டு மூடை நெல்லெடுக்கிறாங்களாம். நீங்கள் போய்ப் பாக்கேல்லயே"

"அதுக்கு விவசாய அட்டை வேணுமாம்"

"ஒண்டை எடுத்து வைச்சிருக்கலாமே"

"முறைக்கு முறை இடம்பெயர்ந்ததில என்ர காட் துலைஞ்சிட்டுது. இனி உவளதூரம் ஆர் அலையிறது. ஒருநாள்ள முடியிற விசயமே. விட்டிட்டன்"

"வெளியில நெல் என்ன விலையாம்"

"எழுநூறெண்டாங்கள்"

"ஏன் இப்ப வவுனியாவுக்க கொண்டு போய் விக்கலாமாம் வரியில்ல"

"அதுக்கு சிவப்பு நெல்ல விதைச்சிட்டன் வவுனியாவுக்க வெள்ளைக்குத்தான் மதிப்பு"

"அப்ப என்ன செய்யப்போறாய்"

"அறா விலையெண்டாலும் குடுத்தாத்தானே-கூலியக் குத்தகையச் சரிக்கட்ட"

"நிவாரணங் குடுக்கிறாங்களாம் உங்களுக்கில்லையே..."

"இல்லாம. யப்பானரிசி அமெரிக்கா அரிசியெண்டு சுனாமியில உவள அரிசி வந்து கொட்டுப்பட்டதில நெல்லுவிலை இறங்கிப்போச்சு".

"எங்கட அரசாங்கம் நெடுக உப்பிடித்தான் இருக்கிறத விட்டிட்டுப் பறக்கிறதப் பிடிக்கிறது. அடுத்த நாடுகளக் காக்கா பிடிக்கப்போய். ஊருக்குள்ள உள்ளதுகளை உருப்படாமச்செய்யுது"

"சும்மாயிருக்கச் சுகமொண்டு வருதெண்டு உதைத்தான் பட்டினத்தார் சொன்னவர்"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 135



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 135

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : .......................................................

முகவரி : .......................................................

.......................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 134



**ஆ.சுதர்சிகா,**
**உழவனூர்,**
**தருமபுரம்.**

## பரிசுக்குரிய வரிகள்

*குறிபார்த்து கல்லை அடிக்கும்*
*குட்டித் தம்பியே! விழித்துக் கொள்-நீ*
*பார்க்கும் குறி குருவிக்கே-ஆனாலும்*
*உன் வாழ்க்கை குறியை நழுவவிடாதே!*

## பாராட்டுக்குரிய வரிகள்

*'கவண்' எடுத்து குறி பார்க்கும் தம்பி*
*உனக்குள் வீரப்புதையல் ஒளி(ர்)ந்திருக்கிறது*
*உன்னிப்பாக உணர்வுடன் செயற்படு*
*உறுதியுடன் வெற்றி உன்னடியில்.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*ஈழத்தமிழ் வீரன் இவன்!*
*பண்டாரவன்னியன் பரம்பரையல்லவா?*
*குறிதப்பாது எய்திடுவான்*
*பார் போற்ற வாழ்ந்திடுவான்.*

ம.கலைநிலா,
முல்லைத்தீவு.


*தாயைவிட மேலாய் தாய் நாட்டை நேசிக்கும்*
*கரிகாலன் காலத்து மறவர் வழி வந்த வீர மகன் நீயெடா*
*கடுகளவும் பயம் வேண்டாம் உந்தன் நெஞ்சமதில்*
*எதிரியவன் தலை சிதற இலக்குப் பிசகாமல் வீசடா கல்லை.*

சு.சி.தமிழினி,
கைவேலி.

*இலக்கதை பார்த்து நீ பறித்திடும் 'பட்சி' உடலது*
*செத்திட துடிக்கையில் நீ மகிழ்வாயோ...? தம்பி*
*உன் உறவினர் குளறிட உயிரதை எடுத்தவர் கொடும்*
*வதைப்பினை கண்டு சிரிப்பாயோ...*

ம.அருள்யோண்சன்,
விசுவமடு.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்




அருச்சுனா புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு





















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்





## முருகனும் பாரதியும்

தோகைமேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை.

ஒவ்வொரு ஆண்டும்நல்லூர் இருபத்தைந்து நாட்களுக்கு திருப்பெரு விழாக்கோலம் கொள்வது வழக்கம். வெற்றி வாகையினையே சுமக்கும் வேலை வணங்கும் வேலை யுடையவர்களாக யாழ்ப்பாணத்து மக்கள் இருப்பர். இருபத் தைந்து நாட்களும் காலையிலே கோயிற் சுற்றுப் புறத்திலே இளைஞர்களின் இயக்கத்தினைக் காணலாம். "முருக னுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா" என்று சொல் லிக் கொண்டு உடலை உருட்டி வேகமாக உருண்டு செல் லும் இளைஞர்களைப்பார்க்கும் போதுதான் "வேலை வணங்குவது எமக்கு வேலை" என்பதன் பொருள் தெளிவா கின்றது. மேற்படி பாடலைப் பாடியவன் பாரதி. விநாயகர், முருகன், கண்ணண் அன்னை பராசக்தி ஆகியோரை பாரதி தன்னுடைய அருமையான பாடல்களிலே பாடியுள்ளான். முருகனைப் பற்றிப் பாடும்போது அவன் வீரத்தினையும் காதலையும் பாடுகின்றான்.

"வெற்றி வடிவேலன் -அவனுடைய
வீரத்தினைப் புகழ்வோம்.
சுற்றி நில்லாதே போ- பகையே
துள்ளி வருகுது வேல்"

என்று அவன் வீரத்தினைப் புகழ்கின்றான் "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" என்று சங்க இலக்கியம் முருக வீரத்தை குறித்தது போலவே பாரதியும் முருகனு டைய வீரத்தைப்போலவே பராசக்தியுடைய வீரத்தையும் பாடுகின்றான்.முருகவீரத்தைப்பாடுவதற்கு முன்னர்.

"சொல்லுக் கடங்காவே - பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள்- பராசக்தி
வாழியென்றே துதிப்போம்"

என்று பாரதி பாடுவதை நோக்கலாம்.

சங்க கால தமிழருக்கு வீரத்துக்கும் காதலுக்கும் எடுத்துக்காட்டுக் கடவுளாக திகழ்ந்தவன் முருகன், முருகனைப் போன்ற கோபம் என்று அவனுடைய சினத்தி னையும் தலைவியை இரவில் காண வரும் தலைவனை முருகனைப் போலவருகின்றான் எனவும் சங்க இலக்கியங் கள் பாடுகின்றன. பாரதி அந்த சங்கத் தமிழ் மரபினை தன்னுடைய பாடல்களிலேபுதுமையுடன் தருகின்றான்.

"வில்லினையொத்த புருவம் வளைத்தனை
வேலவா- அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி
ஆனது வேலவா
சொல்லினை தேனிற் குழைத்துரைப்பாள் சிறு
வள்ளியைக் -கண்டு
சொக்கி மரமென நின்றனை
தென்மலைக் காட்டிலே"


என்னும் பாடலிலே முதலில் முருகனுடைய வீரம் பேசப்படு கின்றது. வேலனுக்கு சினம் ஏற்பட்டுவிட்டது. அதன் அடை யாளமாக அவனுடைய புருவம் வில்லைப் போல வளைந் தது. அது வளையவும் கிரெளஞ்சம் என்னும் மலை பொடிப் பொடியானது. புருவவளைவும் கிரெளஞ்ச நொருங்கலும் ஒரே காலத்திலே நடைபெறுகின்றன என்று கூறலாம் போலும். அடுத்தது வள்ளியுடனான அவனுடைய காதல். சொற்களைத் தேனிலே குழைத்துப் பேசுகின்றாள் வள்ளி. அவள் குரலினிமை காதுக்குட் புகுந்து மூளைக்குச் செல்வதற்கிடையில் அவளுடைய தோற்றப்பதிவும் உட்செல்கின்றது. இரண்டும் மூளையைத் திணற டிக்கின்றன. மின்சாரம் பாய்ந்தால் Schock அடிக்கும் என்று சொல்வார்கள். வள்ளியினுடைய குரலினிமையும் தோற்றப் பொலிவும் மின்சாரம் பாய்ந்தது போலுள்ளது. முருகன் சொக்கிப்போய் மரமென நிற்கிறான். வள்ளியினுடைய தகப்பனும் சகோதரர்களும் வந்த போது முருகன் மரமாகி நின்றான் என்று கந்தபுராணம் பாடும். ஆனால் பாரதியோ வள்ளியின் குரலினிமையும் அழகும் முருகனைச் சொக்கவைத்து மரமாக நிற்கவைத்தன என்று பாடு கின்றான். பராசக்தியைப் பாடும் போது அப்பாடல்களூடாக அரசியற் கருத்துக்களை வெளிப்படுத்துவது போல் முரக னைப்பாடும் போதும் பாரதி அரசியல் நிலைப்பாட்டினையும் சொல்லத் தவறவில்லை.

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கியையோ"

இறைவனிடம் மேலோர்களையும் நூலோர்களையும் விடுவித்து அருள வேண்டுமென மறைமுகமாகக் கேட்கும் பாரதி முருகனிடம்

"அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித்தருள்வாய்
முடியா மறையின் முடிவே அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே"

என்று அடியார்களாகிய சுதந்திர வீரர்கள் பலர் சிறையிலும் வேறு இடங்களிலும் இருந்து வாடுகின்றனர். எனவே




"அவரை விடுவித்தருள்வாய்" என்று பாரதி முருகனிடம் வேண்டுகை செய்கின்றார்.

அடியார்கள் எல்லோரும் எங்கு நின்றும் பார்த்து வணங்கத்தக்கவனாய் இன்று அந்த முருகப் பெருமான் தேர் ஏறி வருகின்றான். அவனுடைய வீரத்திருவிழிப் பார்வையும் வெற்றி வேலும் மயிலும் என முன்னின்றே எந்த நேரத்திலும் எங்களை அவன் காக்கும் நல்லூரான் தேரிலே வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. ஒவ்வோராண்டும் போலவே இந்தக் காட்சியைக்காண எம்மவர்கள் கூடி வந்து சேர்ந்திடுவார். பிற நாடுகளிலே இருக்கும் எம்மவர்கள் மனம் குளிர ஒலி பரப்பிகள் உதவுகின்றன. நல்லூரான் வீதி நடந்தால் வினை தீரும். தேரோடு நடந்து முருகப் பெருமானுடைய பேரருளைப் பெறுவோமாக.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்,
யாழ் பல்கலைக்கழகம்.

சிறப்பிதழாக்கம்
காரையூரான்



## சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்!

தமிழ் வடிவாய் வந்த தமிழ்த்தலைவா போற்றி!
தமிழ் குடியை காக்கின்ற இறைவா போற்றி!
உமையென்றும் உளம்மறவா உயிரே போற்றி!
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே போற்றி!
இமைத்திடும் முன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மயிலில் பறந்து வரும் இளையோய் போற்றி!
தமிழ் கவிதை தனிற்பிறந்த தலைவா போற்றி!
தனைவணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி!
தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாக கந்தா நின்றாய்
உமையவணன் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப்பொருள் அனைத்தும் உளத்திற்கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கோர் அழகைச்சேர்த்தாய்
அழகுக்கும் அழகாக அவதரித்தாய்
தமை நத்தும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்

-அருள் அனுசூயா-







இன்று நல்லைக்கந்தன் தேர்த்திருவிழா!
தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன்
தேர்த்திருவிழா திருவருட்காட்சியைக்
அடியார்கள் கண்டுகளிக்கவும்
நல்லைக்கந்தன் அருள் பெறவும்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ்நகரில்...
என்றும் மலிவு விலையில்
நிறைந்த ரகங்கள்
நிகரில்லா தரங்கள்

கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி. (சி-12742)



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்



ஆறுமுகனே! உன் அருள்தனைப்பெறவே
இருகைகூப்பித்தொழுகின்றோம்.

Coloris France Colourbank

Multilac

உங்கள் கலர் வர்ணங்களின் தெரிவுக்கு

வர்ணவங்கி

**கந்தவேலன் ரேடர்ஸ்**

இல-110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021-222 2822

COLORIS FRANCE Colourbank

---

இன்று தேரேறிவரும் நல்லைக் குமரனருள் நாடெங்கும் பரவட்டும்!

துவிச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்,
பெப்சி, மிராண்டா சோடா வகைகள்
ரீ.வி, றேடியோ, வீடியோ, ஓடியோ கருவிகள்
அழகு சாதனப் பொருட்கள்

E.S.P E.S.P

விற்பனையில் யாழ் நகரில்
தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

50.52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-12748)

தொலைபேசி-021-2222988
தொலைநகல்-021-2222368

---

நல்லூரான் நல்லருள் நாடெங்கும் பரவட்டும்!

டீவி, டெக், குளிர்சாதனப்பெட்டி,
றேடியோ, மின்விசிறிகள், ஜெனரேற்றர்,
கணனிகள், ஓடியோ வீடியோ சீடிப்பிளேயர்
இவையனைத்தையும் ஒரு வருட
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**

இல:1C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 5349

(சி-12747)

---

நல்லூர் நாயகன் தேரில் வரும் இந்நாளில் எல்லோர் மனங்களும் இன்பம் அடைக!

செரமிக்பொருட்களை கண்கவர் நிறங்களிலும் நவீன டிசைன்களிலும்
நேரடியாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து யாழ் நகரிலும்
கொழும்பிலும் விற்பனை செய்பவர்கள்

யாழ் நகரில் செரமிக் பொருட்கள்
விற்பனையில் 25 வருடகால
அனுபவமுள்ளவர்கள்

**விமாகி**

இல:27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 6738

இல:51, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே:0112-423030

(சி-12749)

---

RAMCO CEMENT

தேரிலேறி வரும் நல்லூரான் அருள் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

**றாம்கோ சீமெந்து**

**RAMCO CEMENT**

ஆசியாவின் முதல் தர(நம்பர்-1)

SLS -107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002தரம் பெற்றது
BSS-12-1991தரத்திற்கு அமைவானது

நூற்றாண்டு காலமாக பாவனையில் உள்ள
போட்லாண்ட் சீமெந்து ராம்கோ சீமெந்து.
பாவித்துப்பயன்பெற்றவர்களுக்கு இதன்
தரம் தெரியும். தரம் தெரியாமல் தவிக்கிறீர்களா?
இது பிரித்தானிய தரத்திற்கு அமைவானது.
உலக தரம் வாய்ந்தது. இலங்கைத்தரம் வாய்ந்தது.
நூறு வீதம் ஓ.பி.சி. சீமெந்து தான் ராம்கோ சீமெந்து.
தரத்தைத்தெரிந்து விட்டீர்களா? உடன் நாடவேண்டிய இடம்

யாழ் மண்ணில் ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்

**ஈஸ்வரபகவான் & கொம்பனி**

இல:91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2222350

(சி-12750)

RAMCO CEMENT




# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்

SM Garphics



டாட் என்ரபிறைஸ்
Dart Enterprise

இலத்திரனியல் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப்பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இல:11,12 நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
இல:02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகாமையில்)

தேர் ஏறிவரும்
நல்லூரான் அருள்
நாடெங்கும்
பாலிக்குக!

T.P:021-222 3098
021-222 7622
Fax:021-222 3098

(சி-12718)



FedEx Express®

நல்லையில் கந்தன் இரதமேறும் இந்நாளில்
அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும்
வேலவன் அருள்பெற வாழ்த்துகின்றோம்

WESTERN UNION®
பணப் பரிமாற்றம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027 Fax - 021 226 2993

(சி-12717)

சைவ உணவுப்பிரியர்கள் அனைவருக்கும் தேரேறிவரும் நல்லைக்கந்தன் அருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்



ஸ்ரீ வாணி விலாஸ் சைவஉணவகம்

இல:372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:077-9007837

உங்கள் உணவுத்தேவையை
பூர்த்தி செய்ய விஜயம் செய்யுங்கள்

ஸ்ரீ வாணி விலாஸ் சைவஉணவகம்

(சி-12716)

சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகளின் அரங்கம்




ஓராறு முகம் கொண்டு
உலகை ஆளும் திருக்குமரா!
ஈராறு கரமதாலே
எங்களை தினம் காத்திடுவாய்!



அனைத்துத்தரப்பினருக்கான சேட், ரீசேட், கோட் சூட் வகைகள், டெனிம்,
சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணி வகைகள்,
ஜம்பர் வகைகள், பட்டு சாறி வகைகள், பேபி கவுண் வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், சல்வார் கமீஸ் வகைகள்,
கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகளை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

மிலேனியம் பெஷன்
& பொம்பே பஸார்

10, மின்சார நிலைய வீதி, பெரியகடை,
யாழ்ப்பாணம். (மலாயன் கபே முன்பாக)

(சி-12715)

வண்ண அருளொளி வீசித் தேரில் வலம் வரும்
எழில் குமரனின் அருள் எல்லோருக்கும்
கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.



Sanshigaa
JEWEL HOUSE

சன்சிகா நகையகம்
සන්ෂිගා ජුවෙල්හවුස්

சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்



114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு -11

(சி-12714)

# யாழ்ப்பாணம் – நல்லூர்

# தேர்த்திருவிழாச்சிறப்

நல்லை ஆறுமுக வேலன் –தன் அருளொடு இன்பம் அனைத்தும்
இன்றைய நன்நாளில் எல்லோர்க்கும் சந்திப் பிரார்த்திக்கின்றோம்.
உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22கரட்
தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்.
சாரங்கா நகைமாடம்
இல:157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T-P-021-2222480, Fax- 021-222 2480
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
இல.45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP-021 - 2226059
(சி-12727)

ஆறுபடை வீடுடைய
ஆறுமுகக் கடவுளே!
எங்களைத் தினம் காத்திடப்பா!
நங்கையர் விரும்பும் நவநாகரிக
நகை வடிவங்களை நம்பிக்கையுடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
சிறி நதியா நகை மாளிகை
சானுயா
சிறிரூபா
நகை மாளிகை
இல:01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-2222709
(சி-12728)

வண்ணத்தேரேறி வீதி வலம்வரும் திருக்குமரன்
நம் மக்கள் துயரறிந்து – அவர் மனம்
குளிர மனதார வேண்டுகின்றோம்.
உங்கள் நாவிற்கினிய குளிர்பான
வகைகளை சுவைத்து மகிழ ஒரு முறை
விஜயம் செய்து பாருங்களேன்.
கல்யாணி கிறீம்
ஹவுஸ்
இல:73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-12729)

## தேரேறி வருகின்றான் நல்லை

அடியவர் அல்லல் அனைத்தும் தவிர்த்தருளும் நல்லூர் கந்தன் கண்டா மணி நாதம் கணீர் கணீர் என்று அடியார்கள் செவியில் விழுகின்றது. ஒவ்வொருநாளும் கேட்கும் மணியோசை இன்று விடியற்காலையில் ஆனந்தப் பரவசமூட்டும் அற்புத சக்தியுடன் கேட்பதற்குரிய காரணம் என்ன? நல்லையிற் கோயில் கொண்ட முருகப்பெருமானின் மகோற்சவம் எப்போது வரும் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த முருகனடியார் செவிகளில் நல்லூர் அசையாமணியின் நாதம் நவசக்தியுடன் புத்துணர்ச்சியுடன் நுழைவதில் வியப்பொன்றுமில்லை.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கை முழுவதிலும் மாத்திரமல்ல கடல்கடந்து வெளியூர்களில் வதியும் யாழ்ப்பாணத்தவர்களிடம் மாத்திரமல்ல முருகனடியார்வாழும் உலகம் முழுவதிலும் காணப்படுகிறது.

திருவிழா நிகழும் காலத்தில் நல்லூர்க் கோயில் பூலோகக்கைலாசமாகக் காட்சியளிக்கின்றது. தெருவீதிகளெல்லாம் புனித வீதிகளாக மாறுகின்றன. திருவிழா வேளையில் எந்த மயமும் கந்தமயமாகவே காணப்படுகின்றது.

**பக்தி வெள்ளம்**

எல்லாவூரிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மகோற்சவம் நடைபெறும் இருபத்தைந்து நாளும் தினந்தோறும் விரதம் அனுஷ்டித்து திருவிழாவிற் பங்குபற்றி முருகன் அருள்பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகையை அளவிட முடியாது.

ஐயா! முருகையா! பன்னிருகையா! நிகழும் புனித காலத்தில் உன் திருவருள் வெள்ளம் பெருகிக் கரைபுரண்டோடுகிறதென்று சொல்லி உன்னடியார் அதனைப் பருகிப் பரவசமடைந்து ஆனந்தக்கூத்தாடுகின்றனரே!

முருகனே! மாயோன் மருகனே! ஒரு கைமுகன் தம்பியே உன்திருச் சந்நிதியில் வந்துநின்றால் பெரியார், சிறியார், இளைஞர், முதியோர், கற்றார், கல்லார், வறியர், செல்வர், நல்லார், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் குகனடிய
மறந்து உம் மீது காதலாகி


நல்லைப் பெருமானே!
சந்நிதிக்கு அடியாரை இ
புரிகின்றாய். இது நூத
சூரபத்மனையும் கொன்றரு

"தீயவை புரிந்தாரே
குமரவேள் திருமுனு
தூயவராகி மேலைத்
ஆயவும் வேண்டும்
அடுசமர் இந்நாட்செய
மாயையின் மகனும
வரம்பிலா அருள் பெ

**உற்சவ விரதம்**


தினந்தோறும் உன் சந்நி
பிரதான திருவிழா நாட்க
நாட்களிலும் வந்து வழிபடு
வெளியூர்களிலுள்ள உன்
இருந்துகொண்டே உற்சவ
வருகின்றார்கள். பொல்லா
நல்லைக் கந்தன் எல்
வியாபகமாய் இருக்கும் பு

நல்லை வாழ் ஆறு
அடியார் செய்யும் வழிபாடு
தொடுப்பர் சிலர், பசியடக்



ஈழமண்ணில் அமைதி நிலவ
எழுந்துவாடா திருக்குமரா!
நாளும் வாழ்வில் நன்மைபயக்க - தேரில்
நகர்ந்து வாடா நல்லைக்கந்தா!
Music World
புதிய,பழைய video CD'S
புதிய,பழைய,இடைக்கால Audio CD'S
அனைத்து வகையான MP3 CD'S
அனைத்து வகையான பக்திப் பாடல் CD'S
உலக நாடுகளின் டிஸ்கவரி CD'S
இன்னும் பல வகையான CD'S
என்றும்
மலிவு
விலையில்
மியூசிக் வேள்ட்
பலாலி வீதி,
தபால் பெட்டி சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ. பே:021-2226554
(சி-12735)

தேரில் ஏறிவரும் நல்லைக்கந்தன்
அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்
MD–90 மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கி
அசிட் வகைகள், சோலர் வகைகள் அனைத்தையும்
அருள் விநாயகர் மே
TOYOTA
GENUINE PARTS
IZUMI
Guaranteed
Motor Spares
from
M. M.
Organisation
TAKOMA
MINTYE
இல-108, ஸ்ரான்லி வீதி,
அருள் விநாயகர் றே
இல-106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்ப
(சி-12730)



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்






மயிலேறி விளையாடி - நம் மனம் குளிர வைப்பவனே!
தேரிலேறி வந்து நம்தேசமதைக் காத்திடையா!

அழகிய கலைநயம்...
எழிலுறு தொழில் வளம்...
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு...



22கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

தயா நகைப்பூங்கா

213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021-2225846
0777-840379

(சி-12754)



தேரினில் ஏறி வரும் எம் தெய்வ முருகனின் தேவ அருள்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்,
சாறி வகைகள், சல்வார் கிற், சோளிகிற்,
ஸ்கேட் அன் பிளவுஸ், சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்.
பட்டு வேட்டி வகைகள், நூல் வேட்டிகள், ரீசேட் வகைகள்

ஆகியவற்றினைகொழும்பு விலையில்
மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் எண்ணக்கருவூல
டிசைன்களில்
வண்ணத் தெரிவுகளுக்கு
வருகை தாருங்கள்



(சி-12753)

Kamaleshwary Tex

கமலேஸ்வரி புடைவையகம்

77,1/1, பெரியகடை வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2226303

நல்லைப் பதியுறையும் நாயகனே!
உன்வரவு நாடெங்கும் நலம்புரிய
நல்வரவாகட்டும்!



TVS

TVS Lanka Private Ltd.இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S)
யாழ் முகவர்





TP-0777-340056
021 222-6185

சுசுக்கி ரேடர்ஸ்

இல:-59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-12751)

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
தேசநலன்காக்க தேரிலேறி வருக!

2 Year Warranty

STAFFORD MOTOR CO-LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட
(3S)யாழ் முகவர்


RG இரத்தினகோபால்ஸ்

இல:-63,65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TP-0777-340056
021 222-6185



(சி-12752)



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்




ஆறுமுகனே! உன் அருள்தனைப் பெறவே
இருகை கூப்பித் தொழுகின்றோம்!


LG யாழ்ப்பாண மின்னகம் LG

எமது மண்ணில் மங்காப்புகழ் பூத்த
மாபெரும் மகத்தான LG ஸ்தாபனத்தாரின்
இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும்
யாழ் நகரில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
அபான்ஸ் லிமிட்டெட்டின்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்




யாழ்ப்பாண
மின்னகம்

இல:141,மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 5766




இல:06,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 2353

(சி-12744)



தங்க வேலோன் தேரேறி உலாப்போகும் நேரம்- எங்கள்
தமிழினத்தின் தலையாவும் நிமிர்கின்ற காலம்: வீரம்
பொங்கி வரும் வேளையிலே வேலுக்குண்டு வேலை - உடன்
பொசுங்கி விடும் கந்தனாலே கவலை எல்லாம் நாளை.

யாழ்ப்பாணம்- சுன்னாகம் பழரசத் தொழிலகம்

ஜசுபி தயாரிப்புக்கள்

மாம்பழகோடியல்
பழக்கலவை கோடியல்
தேசிக் கோடியல்

உள்ளூர்
பழத்தில் இருந்து
முற்றிலும் சுகாதார
முறையில்
தயாரானது

நெல்லி ரசம்
மாம்பழ ஜாம்
விளாம்பழ ஜாம்
ஸ்ரோபரி ஜாம்
பழக்கலவை ஜாம்

தக்காளி சோஸ்
மிளகாய் சோஸ்

மாம்பழ சட்னி, தேசி ஊறுகாய்
மோர் மிளகாய்

(சி-12743)




எமது உற்பத்திப்பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுன்னாகம்
ப.நோ.கூ.சங்கம்.
TP 0602-212380
0602-212813
ஜசுபி தொழிலகம்
உடுவில்.



முருகா சரணம்! முத்துக்குமரா சரணம்!!
தேரிலேறி வந்து எங்கள் துயரம் தீர்ப்பாய்!!!

1981 ஆம் ஆண்டு தொடக்கம்
ஜப்பான்-கொண்டா மோட்டார் கம்பனியுடன்
தொடர்பை ஏற்படுத்தி
ஜப்பான்-சீனா கூட்டுத் தயாரிப்பு

JIALING

மோட்டார் சைக்கிள்

JL90-1



Model JL90-1 Jialing Electric start

நீண்ட நாட்களுக்குப் பின்
அநேக வாடிக்கையாளரின்
விருப்புத் தெரிவுக்குள்ளான

இன்று வரை இந்நிறுவனம்
ஒரு கோடி இருபது இலட்சம்
மோட்டார் சைக்கிள்களை
விற்பனை செய்துள்ளது.

காத்திரமான சக்தி கொண்ட
உறுதியான தயாரிப்பு

JL110-5



இலங்கையின் ஏக இறக்குமதியாளர்


யசோ மோட்டோர்ஸ்

இல: 163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-2222544

(சி-12745)

# ...ர் கந்தசுவாமி கோவில்
# ...ப்பிதழ் - 02-09-2005



## ...ல்லைக்கந்தன்

...குகனடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை ...காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர். ...நுமானே! இரும்பு காந்தத்தை இழுப்பதுபோல் உன் ...ாரை இழுத்து அவர்களை நல்லவர்களாக்கி அருள் ...து நூதனமல்ல. உன்னுடன் சமர் புரிய வந்த ...கொன்றருளிய அருட்கடலல்லவா நீ?

...ரிந்தாரேனும்
...திருமுனுற்றால்
...மேலைத் தொல்கதியடைந்தவரென்றோ
...வண்டும் கொல்லோ!
...ந்நாட்செய்த
...மகனுமன்றோ.
...அருள் பெற்றுய்ந்தான்"
...தம்

...உன் சந்நிதியில்தரிசித்து தலைவணங்க இயலாதவர்கள் ...ழா நாட்களிலும் தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா ...து வழிபடுகிறார்கள். மகோற்சவம் நடைபெறும் காலத்தில் ...ள உன் அடியார்கள் தாங்கள் வசிக்கும் ஊர்களில் ... உற்சவ விரதத்தை அனுஷ்டித்து முருகனை வழிபட்டு ...பொல்லா வினையகற்றி எல்லார்க்கும் அருள் புரியும் ...ர் எல்லோருடைய உள்ளமாகிய பெருங்கோயிலில் ...ருக்கும் புதுமையை அறியாதார் யார்?

...வாழ் ஆறுமுகனின் திருச்சந்நிதியிலும் கோயில் வீதியிலும் ...வழிபாடு அற்புதமானது. காவடி எடுப்பர் சிலர். பாவடி ...பசியடக்கியொரு முக்காலமும் இருப்பர் சிலர், என்று பக்தர்கள் புரியும் தொண்டுகள் ஏராளம்.



இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்ட நல்லூரான் ஆறுமுகங்களோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காத்திட தேரேறி வருகின்றான். நல்லூர் இன்று இந்திரவிழா நடப்பதுபோல் பக்தி பூர்வமாக காட்சியளிக்கின்றது. எந்த மயமும் கந்தமயமாகவே காணப்படுகின்றது. இலட்சோப இலட்சம் மக்கள் இன்று நல்லூரில் கூடுகின்றனர்.

யாழ்ப்பாணத் தெருக்களெல்லாம் மகர தோரணங்கள் கட்டப்பட்டு நிறைகுட கும்பம் வைக்கப்பட்டு எந்நேரமும் அடியார் கூட்டத்தை எங்கும் காணக்கூடியதாகஉள்ளது. தேரேறி அருள்பாலிக்கின்ற நல்லைக்கந்தன் நாட்டிலே நிரந்தரத் தீர்வையும் அமைதியானவாழ்வையும் சமாதானத்தையும் தரவேண்டுமென இந்நன்நாளில் வேண்டுவோமாக.

**மதுரகவி**
**காரை எம்.பி அருளானந்தன்.**

## வடம் பற்று கின்றோம் மனம் பற்றி வா!



தேரேறி வா கந்தா
மனம் ஏறி வா
ஊர்காண வா கந்தா
அருள் கோடி தா!

பூமாரி வான் பொழிய
அசைந் தாடி வா
பா பாடிப் புகழ்ந் தேற
மனம் நாடி வா!

ஈராறு விழி கொண்டு
இருள் ஓட்ட வா
போராடும் எம் மண்ணின்
விதி மாற்ற வா!

தீர்துயரை இன்றே நீ
தீந்தமிழின் நாதா
ஊர்பட்ட வலிபோதும்
ஓர் விடிவைத் தாதா!

கூர் வேலை எடுகையில்
குறை தீர்க்கும் கந்தா
ஓர் நாளில் பிணி தீரும்
ஓம் முருகா என்றா!

தேர் கண்ட விழியாலெம்
தேசம் காண அருள்தா
போர் வெல்லும் எம் தலைவன்
பாராள வரம் தா!

வடம் பற்று கின்றோம் எம்
மனம் பற்றி வாவா
இடர் அற்றுப் போம் என்றே
ஒளியேற்ற வாவா!

கடல் வெள்ளம் போல் வீதி
கரைதட்ட வாவா
இடர் உள்ளம் எது வென்று
உணர்ந்து வரம் தாதா!

*வேலணையூர் சுரேஷ்*




நல்லை நகராளும் நாயகனே! உன் அருள்
எல்லோருக்கும் கிடைத்திடஉன் தாள்
பணிந்து நிற்கின்றோம்.

ரீ.வி, டெக் ரேடியோ, மணிக்கூடுஅழகு சாதனப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளஅன்றும் இன்றும் என்றும் நன்மதிப்பை பெற்று விளங்கும் ஒரே ஸ்தாபனம்.

**ராஜு ஸ்ரோர்ஸ்**

இல:67,69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-0094-21-2225224
190 நாடுகளில் இருந்து விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

WESTERN UNION | மனி டிரான்ஸ்ஃபர் SM
*உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி.*

பணம் மாற்றும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும். (சி-12734)






தந்தைக்கு உபதேசம் சொன்ன
தங்கவேலோன் தங்கரதம்
மீதேறிவரும் நன்னாளில்
தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து
வாழபிரார்த்திக்கின்றோம்.

நயம்! நாணயம்!! உத்தரவாதம்!!!

**சிறி கருமாரி நகையகம்**

அசல் 22 கரட் தங்கத்தில்
காலத்திற்கும் கருத்திற்கும் உகந்த
நவீன டிசைன்களில் தங்க நகைகளை
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

இல: 205/6, கஸ்தூரியார்வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம்,
யாழ்ப்பாணம்.
**T.P.021-2225385** (சி-12733)





வண்ண அருளொளிவீசித் தேரில்
வலம்வரும்எழில் குமரனின் அருள்
எல்லோர்க்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.



சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகளுக்கு
யாழ்நகரில் கைராசியான நிறுவனம்

**சீமாட்டி புடைவைக்கடல்**

122,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-12732) T.P-021-2222196



...பிரார்த்திக்கின்றோம்.

...சைக்கிள்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், பற்றரி வகைகள் ...த்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

...ீ மோட்டோர்ஸ்
யாழ்ப்பாணம்.
...ரேடர்ஸ்
...யாழ்ப்பாணம்.






நல்லூரானின் பாதகமலங்களை பணிந்து
சேவலும் மயிலுக்கும் போற்றி கூறி
இப்புனிதமான நன்னாளில்இருந்தாவது
அருட் பிரசாதமாகவிளங்குகின்ற
வீபூதி எனும் பெரும் பாக்கியத்தைதருகின்ற
பசுக்களையும் இடபங்களையும் கொன்று புசித்து
நரக வேதனையை அடையாமல் இருப்போமாக



வாழ்க பசுக்கள்!
வளர்க மானிடம்!!



**வேணி களஞ்சியம்**

165 K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021-222 2661,021-2222046
(சி-12731)


நல்லூர் கந்தசுவாமி கோவில்
தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்
SM Garphics



நல்லைக்கந்தனே! தேரிலேறி வந்து
எங்களைத் தினம் காத்திடுவாய்
சிவனருட்செல்வன் அரிசி ஆலை
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
S. R. M
சம்பந்தன் அரிசி ஆலை
இல:93.ஸ்கந்தபுரம்
(சி-12723)



தொல்லைவினை தீர்க்கும் நல்லைக்கந்தனே!
தேரிலேறி வந்து எங்களைத் தினம் காத்திடுவாய்
அசல் 22 கரட் தங்கத்தில் தரமான
தங்க நகைகளுக்கு கிளிநொச்சி நகரில்...
மணி ஐயப்பா நகைமாடம்
யாழ்சாலை, (ஈழநாதம் பணிமனை முன்பாக)
கிளிநொச்சி.
தொ.பே: 021- 228 5981
(சி-12724)


அலங்காரத்திருமுருகன் -தேரில் எழுந்தருளும் இந்நாளில் -பட்ட
அவலமெல்லாம் நீங்கட்டும் எங்கும் அன்புச்சுனை பெருகட்டுமென வேண்டுகின்றோம்.
றாபா பன்முக வர்த்தக நிலையம்
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-12722)


முருகனே! முத்துக்குமரனே! தேரிலேறி வந்து எங்களைத் காத்திடுவாய்!
சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பி அணியும் அசல் 22 கரட் தங்க
ஆபரணங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
மைதிலி நகைமாடம்
இல:89,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-222 7902
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
157,செட்டியார் தெரு. கொழும்பு-11
தொ.பே-011-2396239
(சி-12721)


சித்திரத்தேரில் வலம் வரும் சிங்கார வேலனே! தேரேறி வந்து எமக்கொரு தேசம் தருவாயா!
யாழ் நகரில்...
அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்
நவீன வசதிகளுடன் கூடிய
முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்
மிலேனியம்
Millennium Guest House
உல்லாசப்பயணிகள் விடுதி
உங்களை அழைக்கின்றது.
உங்கள் தொடர்புகளுக்கு:
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
76/30, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். தொ.பே-021-222 2810
(சி-12720)


கொள்ளை எழில் நல்லூரில் குடியமர்ந்த குருபரனே!
இன்று தேரிலேறி அடியவர்கள் அனைவருக்கும்
அருள் பாலித்திட பிரார்த்திக்கின்றோம்.
நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
தரம் குன்றா தங்கநகைகள்
தங்கநகை உலகில் தமக்கென
தனியிடம் பதித்தவர்கள்.
கணேசா நகையகம்
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP - 021 222 5987
(சி-12719)
123,பஜார் வீதி,
வவுனியா.
தொ.பேசி: 024-2222464
யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு- 11.
T.P- 011-2336252



# நல்லூர் கந்தசுவாமி கோவில்
## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்






தியாக வரலாற்று வீதியிலேவண்ணத் தேரிலேறும் கந்தா!
எங்கள் எண்ணமெலாம்உன்னிடத்தை நாடிநிற்குதே-வாய்
ஏற்றிப் புகழ் பாமாலை பாடிச் சொல்லுதே!

யாழ்நகரில் அழகு சாதனப் பொருட்களின்
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

**லக்சுமி பென்சி**

இல:-244,கே.கே.எஸ்வீதி,
யாழ்ப்பாணம்
(சி-12763)



பாரெங்கும் முருகன் புகழ் பாடவேண்டும்! எங்கள் திருக்குமரன்
நல்லருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்!!.

அச்சகபேப்பர் வகைகள்,
அச்சக மை வகைகள்,
காகிதாதிகள்,
அலுவலக உபகரணங்கள்
இவை அனைத்தையும் நீங்கள் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**அற்புதா ரேடிங் கொம்பனி**

இல: 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021-222 2505
(சி-12770)



நல்லூர் நகரினிலே - தேரில்வலம்வரும் நாயகனே!
எல்லையில்லாத வரமளிப்பாய்
பல தொல்லையில் இருந்து எம்மைக் காப்பாய்.

இன்று கனடா வாழ் இந்து மக்களால் அன்னதானம் வழங்கப்படும்.

**மூத்ததம்பி அன்னதான மடம்**

**C.Somaskandan**

139,கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-12764)



ஆறுமுகனின் நல்லருள்
அனைவருக்கும் கிடைப்பதாக!

புதிய வடிவமைப்பில் நவீன
கண்ணாடிகளைப்பெற்றிட.......

முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட...
மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக் கொள்ள
கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

**எரிக்கணேஷ்**

பல்கட்டும் இடமும் மூக்குக் கண்ணாடி அகமும்

564,566. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:
சுன்னாகம்,
கொக்குவில் சந்தி.



(சி-12769)



தேரேறும் திருக்குமரன் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

தரம் குன்றா தங்கப்பவுண் நகைகளை
செய்து பெற்றிட வாரீர்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

**அசோகா நகை அகம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

111, கஸ்தூரியார் வீதி, T.P-021-2226290 யாழ்ப்பாணம்.
(சி-12765)



ஓராறு முகம் கொண்டுஉலகை ஆளும் திருக்குமரா!
ஈராறு கரமதாலே எங்களை தினம் காத்திடுவாய்!

யாழ் நகரில் மக்கள் போற்றும்
மகத்தான ஜவுளிகளின் சங்கமம்

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**

41, பெரியகடை வீதி,யாழ்ப்பாணம்.
T.P-021-2222063
(சி-12768)

தேரில் வலம் வரும் வண்ணக்குமரனருள்
அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்



மக்கள் வங்கியின்

**ஜனஜய**

சேமிப்புடன் முன்னோக்கி

ஜனஜய ஏனைய சேமிப்பு கணக்குகளை போன்று சாதாரண சேமிப்பு கணக்கல்ல. சரியான திட்டமிடலுடன் சேமிக்கும் உங்களுக்கு பல்வேறு அனுகூலங்களை பெற்று தரும் சேமிப்பு கணக்காகும். ஜனஜய, சேமிக்கும் அதேவேளை உங்களின் எதிர்கால எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் உதவி புரியும்.

நீங்கள் செய்ய வேண்டியது நீங்கள் திட்டமிட்ட எதிர்காலத்தை நோக்காக கொண்டு ஜனஜயவுடன் சேமிப்பது ஆகும்.


**ஜனஜய கணக்கு மூலம் கிடைக்கும் அனுகூலங்ள்**

- கடன் உதவிகள்.
  வீட்டுக் கடன், உங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் திருமணத்திற்கு, வியாபாரத்திற்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் வாகனங்களை பெற்றுக் கொள்ள கடன் வசதிகள்.
- சேமிப்பு கணக்கில் ரூபா 100,000/=அல்லது அதற்கு மேல் பேணி வந்தால் பீப்பில்ஸ் லீசிங்கினால் இலகுவான நிபந்தனைகளுடன் லீசிங் வசதி
- க்ணக்கில் ரூபா 50,000/= த்தினை ஆறு மாதங்களுக்கு பேணி வந்தால் விமான பயண சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது பீப்பில்ஸ் டிரவல்ஸினால் விசேட விலைக் கழிவு.
- சாதாரண சேமிப்பு கணக்குகளைவிட 0.75% அதிகவட்டி
- இலவசமாக வழங்கப்படும் ATM காட் அட்டையுடன் சலுகை விலைக்கு பீப்பில்ஸ் வீஸா காட் அட்டை.
- கணக்கில் ரூபா 50,000/=த்தினை 12 மாதங்களுக்கு பேணி வந்தால் திடீர் விபத்துகளின் போது ரூ.300,00 திடீர் விபத்துக் காப்புறுதி.
- மாதாந்தம் கணக்கில் ரூபா 10,000/= அல்லது அதற்கு மேல் பேணி வருவதன் மூலம் ஜய ஸ்ரீ சீட்டிழுப்பில் பணப் பரிசுகளுடன் ஆடம்பர ஜக்குவர் மோட்டார் காரை வெல்லும் சந்தர்ப்பம்.
- கணக்கில் மேலதிகமாக சேரும் ஒவ்வொரு 5000/= ரூபாய்க்கும் மேலதிக வெற்றி சந்தர்ப்பங்கள்.

விசேட பிரதிபலன்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டிருக்கும் ஜனஜய கணக்கை ரூ. 2,000/= த்தினை கொண்டு ஆரம்பிக்க முடியும்.

சேமிப்புடன் வாழ்க்கையில் முன்னோக்கி செல்ல ஜனஜய

மக்கள் மனமறிந்த வங்கி
**மக்கள் வங்கி**
(சி-12766)




நேர்த்திகள் செய்தோம்
நல்லைப் பதிக்கரசே!
கார்த்திகை மைந்தனே
கீர்த்திகள் தருவாய்!
வள்ளலே வருக
வெற்றிக் கொடியோடு வருக!
வள்ளி தெய்வயானையுடனே
வருக! வருகவே!!

**ஹீரோ சைக்கிள் நம்பர் 1 உலகெங்கும்**

HERO CYCLES


உன்னத சவாரிக்கு
100% உத்தரவாதம்

வடமாகாண
ஏக முகவர்கள்



**ஈ.எஸ்.பி. வர்த்தக நிறுவனம் (துனியார்) வரையுள்ளது**

இல.5, ஜம்மா பள்ளி வாசல் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்,
தொ. பே: 021-2228162, 2227281
(சி-12767)




# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்




பொன்னம்பலம் அரிசி ஆலை
PONNAMPALAM RICE MILL

நல்லூரின் நாயகனே!
தேர்மீது வந்து
திருவருள் தாரீர்!

தரமான அரிசி
வகைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

பொன்னம்பலம் அரிசி ஆலை
A-9வீதி, பரந்தன் - கிளிநொச்சி
(சி-12740) தொ.பே:021-228 5742





இன்று தேரில் பவனி வரும் ஞானக்குமரனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

நியூரோன் எலெக்ரிக்கல்

இல:440,442,ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 2037

ஏகவிநியோகஸ்தர்கள்:
எ.சி.எல் வயர்,சொங்கி சுவிச், ரியூப் பிற்றிங்,
மற்றும் மின்சாரப்பொருட்கள் எஸ்லோன்
பைப் வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
(சி-12741)



DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

தேரேறி வரும் திருக்குமரன் திருவருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.





சுப்ப சூஸ்





434, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 5543

DSI பாதணிகள், சொப்ற் நைற் காலுறைகள் என்பவற்றின்
யாழ்குடாநாட்டிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்
(சி-12739)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI





கல்யாணப்பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனம்

ராசி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் உங்கள் விருப்பத்தெரிவுக்கு
கைராசியான இணை நிறுவனங்கள்

தேரேறி வரும் நல்லூரான்
நல்லருள் நாடெங்கும்
பாலிக்குக!

அனைவருக்கும் ஏற்ற ஆடைத்தெரிவுகளுக்கு

நல்லி சில்க்ஸ்

121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 5573
(சி-12738)





சிறுவர் சேமிப்புக்கணக்கு


ரண் கெகுளு

நல்லூரானே! தேரேறி வந்து நம் துயர் தீர்க்க வா! வா!! வா!!!

- 18 வயதிற்கு குறைந்தவர்கள் கணக்கினை ஆரம்பிக்கலாம்
- ஆகக்குறைந்த வைப்பு 200/=
- சாதாரண சேமிப்பு வைப்புக்களை விட 1% கூடுதல் வட்டி
- 500000/= உச்ச வரம்பு காப்புறுதி
- வருடம் 5 புலமைப்பரிசில் சித்தியடையும் மாணவர்களுக்கு ரூபா 10000/= புலமைப்பரிசில்
- விபத்துக்களுக்கான வைத்திய காப்புறுதி 75000/=
- கல்வி அல்லது வைத்தியதேவைகளுக்கு பணத்தை மீளப்பெறமுடியும்.

இன்றே உங்கள் பிள்ளையின் சார்பில் இலங்கை வங்கியில்
ரண்கெகுளு சிறுவர் சேமிப்பை ஆரம்பியுங்கள்....

BOC
BANK OF CEYLON
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி
(சி-12737)


தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

Tilko Holidays(pvt)Ltd
Hotels & Guest Houses

விமானப்பயணிகளுக்கு யாழ் சிங்கள மகாவித்தியாலயத்திற்கும்
எமது நிறுவனத்திற்கும் இடையேயான போக்குவரத்து இலவசம்

A/C, Non A/C வாகனங்கள் எமது வாடிக்கையாளர்கள்
கட்டணச்சலுகையில் பெற்றுக்கொள்ளலாம்.

Jaffna City Hotel
70/8,70/6, k.k.s Road, Jaffna.
T.P:-021-222 5969,7291

Colombo
T.P:-0112-713803

Trinco
T.P:-026-222 3900

TILKO Holidays
Email:tilkoholidays@yahoo.com
website:www.tilkoholidays.com
(சி-12736)